# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 4 திங்கட்கிழமை (20.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 298


## போரின் இறுதிக்கட்டத்தில் புதுமாத்தளனில் கோரம்

# பொஸ்பரஸ், கொத்துக் குண்டுகளுக்கு

# தினமும் 300 முதல் 600 பொதுமக்கள் பலி!

## புலிகள் வானத்தை நோக்கிச் சுட்டு எங்களை எச்சரித்தனர்

## இரு தரப்பினராலும் மக்கள் பட்ட அவலங்களை விவரித்தார் சாட்சி



பூநகரி, செப்ரெம்பர் 20

போரின் இறுதிக்கட்டத்தில் புதுமாத்தளன் பகுதியில் புலிகள் மீது வீசுவதாக நினைத்து, அப்பாவி மக்கள் மீதும் இலங்கை இராணுவத்தினர் தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகளையும் (கிளஸ்ரர்), பொஸ்பரஸ் குண்டுகளையும் வீசினர். அதன் மூலம் மக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது. நாளொன்றுக்கு 400 முதல் 600 பேர் வரையில் பலியாகினர், 1,000 பேர் வரையில் காயமடையவும் நேரிட்டது.

இதேவேளை, பாதுகாப்பு வலயத்தில் இருந்து படையினரின் கட்டுப்பாட் டுப் பகுதிக்குச் செல்ல முயற்சித்தபோது நாம் வெளியேறுவதைத் தடுப்பதற் காகப் புலிகள்பச்சைமட்டைகளால்அடித்தனர்.அச்சுறுத்துவதற்காகவானத்தைநோக்கிச்சுட்டனர்.

இவ்வாறு போரின் இறுதிக்கட்டத்தில் இரண்டு தரப்புகளாலும் மக்கள் அனுபவித்த அவலங்களை பூநகரி வாசியான கமநல உத்தியோகத்தர் ந.சுந்தரமூர்த்தி விவரித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழு தனது விசாரணைகளை பூநகரி பிரதேச செயலகத்தில் நேற்று நடத்தியது. அவ்வேளை ந. சுந்தரமூர்த்தி தமது சாட்சியத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது சாட்சியத்தில் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

(23ஆம் பக்கம் பார்க்க)

## கரடியனாறு வெடி விபத்துக் குறித்து விசேட பொலிஸ் குழு விசாரணை

### தனது பிரஜைகளின் மரணம் குறித்து சீனா அறிக்கை கோருகிறது

கொழும்பு, செப்.20

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டைனமைற் நிரம்பிய கொள்கலன் வெடிப்புச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை விசேட பொலிஸ் குழுவொன்று மேற்கொண்டு வருகின்றது பொலீஸ் ஊடகவியலாளர் பிரசாந்த ஜயக்கொடி நேற்றுத் தெரிவித்தார்.

இச் சம்பவம் தொடர்பாக அவர் 'உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு-

இவ் வெடிப்புச் சம்பவத்தில் 20 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, 40 பேர் வரையானோர் சம்பவத்தில் காயமடைந்தனர். அவர்களின் உடல் நிலை தற்போது தேறிவருகின்றது.

தற்போது கரடியனாறு பிரதேச மக்களின் வாழ்க்கை நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளது- இப்படி அவர் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இவ்வெடிப்புச் சம்பவத்தில் இரு சீன நாட்டுப் (24ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் போராளிகள் பலரும் கரடியனாறு வெடிவிபத்தில் சாவு?

### சாத்தியம் இல்லை என்கிறார் சிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகர்

கொழும்பு, செப். 20

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் நிலைய வெடிப்புச் சம்பவத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகளும் கொல்லப்பட்டுள்ளனர் என்று இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் இந்தத் தகவலை உறுதிப்படுத்த பொலிஸ் (24ஆம் பக்கம் பார்க்க)

## சரணடைந்த போராளிகள் அனைவரையும் படையினர் 16 பஸ்களில் ஏற்றிச் சென்றனர்

### அவர்களின் கதி தெரியவில்லை எனத் தாயார் ஒருவர் சாட்சியம்

கண்டாவளை, செப் 20

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது சரணடைந்த மற்றும் பிடிபட்ட போராளிகளையும் ஏற்றி 16 பஸ்களில் கொண்டு சென்றார்கள். இன்றுவரை அவர்களின் கதி என்னவென்று தெரியாது. இவ்வாறு முன்னாள் போராளி ஒருவரின் தாயார் நல்லிணக்க ஆணைக்குழுமுன் நேற்று சாட்சியம் அளிக்கும் போது தெரிவித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு கண்டாவளை பிரதேச செயலகத்தில் நேற்று நடத்திய அமர்வில் சாட்சியம் அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழுத் தலைவர் தடுப்பு முகாம்களுக்குச் சென்று அங்குள்ளோரின் விடுதலையைத் துரிதப்படுத்த முயல்வார்

கண்டாவளை, செப்.20

இலங்கையில் சகல பாகங்களிலும் உள்ள தடுப்பு முகாம்களுக்கு நேரடியாகச் சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகளின், முன்னாள் போராளிகளின் விடுவிப்புக்காக துரித நடவடிக்கையை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் சி.ஆர்.டி. சில்வா மேற்கொள்ளவுள்ளார்.

- இத்தகவலை கண்டாவளை பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் பின்னர் ஆணைக்குழு உறுப்பினர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர். இதன்போது அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்கள் எமக்களித்த சாட்சியங்கள் மூலமும், மகஜர்கள் மூலமும் பெரும் எண்ணிக்கையான சிறுவர்களும், இளைஞர், யுவதிகளும் யுத்தத்தின் காணாமற்போயிருப்பதையும் அவர்கள் பற்றிய தகவல் ஏதும் தெரியாமல் உறவினர்கள் ஏங்கித் தவிப்பதையும் அவதானிக்க முடிந்தது. சிலர் தடுப்பில் நீண்ட (24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பொன்சேகா நாடாளுமன்றம் செல்வதை இராணுவ நீதிமன்றம் தடுக்க முடியாது

## அநுரகுமார எம்.பி. கூறுகிறார்



கொழும்பு, செப்.20

ஜனநாயகத் தேசிய முன்னணித் தலைவர் சரத் பொன்சேகா எம்.பி. நாடாளுமன்றம் செல்வதை இராணுவ நீதிமன்றத்தால் தடுக்க முடியாது. அந்த அதிகாரம் சிவில் நீதிமன்றத்துக்கே இருக்கின்றது என்று அநு ரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

ஜனநாயகத் தேசிய முன்னணியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை கொழும்பு நாவலவிலுள்ள சோலிஸ் ஹோட்டலில் நடைபெற்றது. சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா உட்படப் பலர் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டனர். அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தொடர்ந்து கூறியவை வருமாறு:-

சரத் பொன்சேகா எம்.பிக்கு இரண்டாவது இராணுவ நீதிமன்றம் விதித்துள்ள தீர்ப்பை எதிர்த்து இன்று திங்கட்கிழமை நாம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யவுள்ளோம்.

சரத் பொன்சேகா எம்.பியை வஞ்சம் தீர்க்கும் வகையிலேயே இராணுவ நீதிமன்றத் தீர்ப்பு அமைந்துள்ளது. ஹைகோப் ஆயுதக் கொள்வனவு தொடர்பாக குற்றஞ் சாட்டப்பட்டபோதும் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை. இந்த நிலையிலேயே இராணுவ நீதிமன்றம் சரத் பொன்சேகா எம்.பியைக் குற்றவாளியாகத் தீர்மானித்துத் தண்டனை விதித்துள்ளது.

எனவே நீதிமன்றம் விதித்துள்ள மூன்று வருட கடுங்காவல் தண்டனையை எதிர்த்து நாம் மேன்முறையீட்டு நீதிமன்றம் செல்லவுள்ளோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

திருமதி அனோமா பொன்சேகா இச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கையில் -

ஜனாதிபதியிடம் இருந்த எனது கணவர் சரத் பொன்சேகாவுக்கு நீதி கிடைக்குமென நான் நம்பவில்லை. இந்நிலையில் மகா சங்கத்தினர், பொதுமக்கள், ஏனைய மதத் தலைவர்கள் சரத் பொன்சேகாவின் உரிமைகளைப் பாதுகாக்க முன்வரவேண்டும் - என்றார். (ஒ-சி)

### கரடியனாறு அனர்த்தம்

# மட்டக்களப்பில் கடைகளை மூடி அனுதாபம் தெரிவிக்க அழைப்பு



மட்டக்களப்பு, செப்.20

கரடியனாறு வெடிப்புச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக கடையடைப்புச் செய்யுமாறு கோரிக்கை விடப்பட்டது. எனினும், நேற்று மட்டக்களப்பு நகரில் சில இடங்களில் கடைகள் திறக்கப்பட்ட நிலையில் காணப்பட்டன.

கடையடைப்புக்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அழைப்பு விடுத்திருந்தது. இதேவேளை, மட்டக்களப்பு நகரில் வழமையாக ஞாயிற்றுக்கிழமை வர்த்தக நிலையங்களுக்கு விடுமுறை தினமாகும்.

இந்த வெடிப்புச் சம்பவத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் நகரெங்கும் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

கடையடைப்புத் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் வர்த்தகர்களுக்குத் தாமதமாகக் கிடைத்ததால் காத்தான்குடி நகரில் கடைகள் திறந்திருக்கக் காணப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-சி)

வீடுவிற்பனைக்கு:
யாழ்ப்பாணம் கலைப்புலவர் வீதி,
இல. 15இல் அமைந்த வீடு (ஒருபரப்பு)
விற்பனைக்கு (ஸ்ரான்லிறோட் அருகில்)
தொடர்பு: 0213008675 பி.ப. 3.00 பின்

கணனி திருத்தம் (Computer Repair)
உங்கள் கணனிகள் பழுதடைந்துவிட்டனவா? உடனடியாக உங்களது வீடுகளுக்கே வந்து திருத்துகின்றோம். (Computer Repair) அழையுங்கள். 0777483840 புதிய கணனிகள் உத்தரவாதத்துடன் விற்பனைக்கும் உண்டு.

பதவி வெற்றிடம்
WALK IN INTERVIEW
யாழில் இயங்கிவரும் பிரபல
உயர்கல்வி நிறுவனத்துக்கு
* வரவேற்பாளர் (பெண்) Receptionist
* ஆலோசகர் (பெண்) Consultant
* லிகிதர் (பெண்) Clerk
தகைமை G.C.E. A/L வயதெல்லை 20-35 வரை.
இடம் : West minster institute of Higher Studies
No : 03, Ramanathan Road, Kalatti Junction, Jaffna.
Time : 10.00 am to 4.00 pm (20/09/2010)
Call : 0771919192 / 0213207778

# விபத்தில் கால், கைகளை இழந்தவர் ஆங்கிலக் கால்வாயை நீந்திச் சாதனை





42 வயதுடைய பிரான்ஸ் நாட்டவரான பிலிப் கொரைசொன் என்பவர் ஆங்கிலக் கால்வாயை 13 மணித்தியாலத்தில் நீந்திக் கடந்து உலக சாதனை படைத்துள்ளார்.

இவர் 1994ஆம் ஆண்டு தனது வீட்டுத் தொலைக்காட்சி அன்ரனாவைக் கழற்றும்போது, தவறுதலாக அருகிலிருந்த 20 ஆயிரம் வோல் மின்சாரக் கம்பியைத் தொட்டதால் ஏற்பட்ட விபத்தால், தனது கை, கால்களை இழந்தார்.

இவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் போது, நீச்சல் வீரர் ஒருவர் பயிற்சியில் ஈடுபடும் நிகழ்ச்சி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. அதிலிருந்து தானும் நீச்சல் வீரராக வரவேண்டும் என்று ஆசை வந்தது.

ஆங்கிலக் கால்வாய் இங்கிலாந்துக்கும், பிரான்ஸுக்கும் இடைப்பட்ட 21 மைல் கால்வாயாகும். இவர் தென் இங்கிலாந்திலிருந்து காலை 6 மணிக்கு நீச்சலை ஆரம்பித்து பிரான்ஸ் கடற்கரை நகரான விசன்ரை இரவு 9.30 மணிக்கு வந்தடைந்தார்.

நீந்தி முடித்ததும், ''நான் செய்து முடித்துவிட்டேன்'' என்று ஆசை வெறியுடன் பிரான்ஸ் வானொலிக்குப் பேட்டியளித்தார்.

இவர் நீந்தும்போது கடல் அமைதியாக இருந்தது என்றும் இதனால் இவர் மணிக்கு 3 கிலோ மீற்றர் வேகத்தில் நீந்தினார் என்றும் இவரது தகப்பனார் குறிப்பிட்டார்.

இவருக்கு ஆதரவாக சில இடங்களில் 'டொல்பின்' எனப்படும் கடற்பிராணியும் இவருடன் சேர்ந்து நீந்தியதாக இவருடன் சென்ற குழுவைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

'டொல்பின்' என்ற கடற்பிராணியை ஆங்கிலத்தில் 'செயிலார்ஸ் பிரண்ட்ஸ்' என்று சொல்வார்கள். காரணம் இந்தக் கடற்பிராணிகள் ஒரு மனிதனை கடலில் மூழ்கவிடாது தடுக்கும் சக்தி கொண்டவை எனப் பழைய மாலுமிகளின் சரித்திரம் கூறுகின்றது.

## சரணடைந்த போராளிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து முதலில் சரணடைந்த போராளி ஒருவரே எமது பிள்ளைகளைக் காட்டிக் கொடுத்தார். எமது பிள்ளைகள் வலுக்கட்டாயமாகவே விடுதலைப்புலிகளினால் அழைத்துச்செல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து தப்பிவந்து இறுதி யுத்தத்தின் போது இராணுவப் பகுதிகளை நோக்கிச் சென்றபோது இராணுவத் தரப்புடன் நின்றிருந்த குறித்த போராளி எமது பிள்ளைகளை இராணுவத்துக்குக் காட்டிக் கொடுத்தார். இராணுவம் எமது பிள்ளைகளைப் பிடிக்கும் போது பணம் தந்தால் விட்டுவிடுவதாகக் கூறினார்கள். நாங்கள் இரண்டு லட்சம் ரூபாவைக் கட்டினோம். தாங்கள் எமது பிள்ளைகளை விசாரணையின் பின் மூன்று நாள்களில் விடுவதாகக் கூறி அழைத்துச் சென்றார்கள்.

இவ்வாறு அழைத்துச்செல்லப்பட்டவர்களும் சரணடைந்தவர்களும் ஒரு கூடாரம் போன்ற அறையில் வைக்கப்பட்டிருந்தார்கள். அதனுள் சென்று பார்க்க எமக்கு அனுமதி தரப்படவில்லை.

சரணடைபவர்களை மூன்று நாள்களில் விடுவிப்பதாக படையினர் அறிவித்ததை அடுத்து ஜோசப் பிரான்லின், ரெஜினோல்ட் ஆகிய பங்குத்தந்தையர் அவர்களிடம் பெற்ற உத்தரவாதத்தின் அடிப்படையில் போராளிகள் பலரும் கையளிக்கப்பட்டார்கள்.

அவ்வாறு கையளிக்கப்பட்டவர்கள் 16 பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டனர். இது வரை அவர்களுடன் எந்தத் தொடர்பும் இல்லை. உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா? என்றுகூடத் தெரியாத நிலைமையில் நாங்கள் இருக்கிறோம்.

எமது சொத்துக்கள் யுத்தத்தில் அழிவடைந்தாலும் பரவாயில்லை. பிள்ளைகளை எம்மிடம் ஒப்படையுங்கள் அவர்களுடன் மரநிழலின் கீழாவது சந்தோசமாக வாழ்வோம் அவர்களை எவ்வளவு கஸ்டத்தின் மத்தியில் வளத்தோம் என்பது எமக்குத்தான் தெரியும். இந்த வயதிலும் (வயது - 53) நாம் உழைத்துக் கஷ்டப்படுகிறோம். எமது பிள்ளைகள் இருந்திருந்தால் இந்த நிலைமை எமக்குத் தோன்றியிராது - என்றார். (ஓ-எ-15)

A/L எழுதிய மாணவர்களுக்கு
இலவச ஒரு மணிநேர Spoken English work Shop பேசுதலுக்கான Key board மற்றும் சான்றிதழ் இலவசம்
காலம் - 21.09.2010 செவ்வாய்க்கிழமை
பிரிவுகள் - காலை 8-9, 9-10, 10-11, 11-12
மாலை 1 - 2, 2-3, 3-4, 4-5
Myway English
182, Stanley Road, Jaffna, 0711257035

ஆங்கில வகுப்புக்கள் English Classes
"THE ASSOCIATION OF BUSINESS EXECUTIVES (U.K)," DIPLOMA IN BUSINESS ADMINISTRATION தகைமை உடைய ஆங்கிலத்தில் சரளமாக எழுதவும், உரையாடவும், வியாபாரத் தொடர்பாடல் நுட்பங்கள் (BUSINESS COMMUNICATION & PRESENTATION TECHNIQUES) உடையவரும், கொழும்பில் 10 வருடங்களுக்கு மேல் ஆங்கிலம் கற்பித்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது.
GENERAL ENGLISH LEADING TO SPOKEN
அடிப்படை இலக்கணம், பிழையற்ற சொற்கள், பிழையற்ற வசனங்கள், வாசித்து கிரகித்தல் (READ & COMPREHEND), அடிப்படையில் இருந்து வாசித்து கதைத்து சம்பாசனை செய்யக் கூடியதாகக் கற்பிக்கப்படும்.
BUSINESS ENGLISH, COMMUNICATION & PRESENTATION
ஏற்கனவே சராசரியான ஆங்கில அறிவு உடையோருக்கும், அந்த ஆங்கில அறிவை தொழில் ரீதியாக உபயோகிப்போருக்கும், அதனை மேலும் மெருகூட்ட ( TO ENHANCE, IMPROVE & DEVELOP) எண்ணியுள்ளோருக்கும் அரச, தனியார், வங்கிகள், அரசுசார்பற்ற பல் தேசிய நிறுவனங்களில் தொழில் புரிவோர், எதிர்காலத்தில் இத்துறையில் பிரவேசிக்க உள்ளோருக்கும் கற்பிக்கப்படும்.
இக்கற்கை நெறியின் சிறப்பம்சங்கள்
❖மாணவர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது.
❖பாடவேளைகள் 90நிமிடங்கள் மட்டுமே. (1.30hrs)
❖மாணவர், மாணவியர் தனிப்பிரிவினர்
❖தொழிலுக்குச் செல்பவர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புகள் மட்டும்.
❖ஒவ்வொரு மாத முடிவிலும் கணிப்பீடுகள், கலந்துரையாடல்களுடன் கூடிய பூரண விளக்கங்கள்,
❖நியாயமான மாதாந்தக் கட்டணமுறை
பதிவுகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது - வகுப்புகள் அனைத்தும் 01.10.2010 இல் ஆரம்பமாகின்றன.
UNI-ICT CAMPUS
83, Palaly Road, Kantharmadam, Jaffna. Jaffna Road, Manipay.
DIAL:- 0776110802



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## கரடியனாறு குண்டு வெடிப்புச் சம்பவம்; உண்மையை நிலையைக் கண்டறிய வேண்டும்

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கொள்கலன் ஒன்று வெடித்து சிதறியதில் சுமார் 25 பேருக்குமேல் கொல்லப்பட்டிருப்பதாக வெளியான செய்தி முழுநாட்டையும் அதிர வைத்துள்ளது.

போர் ஓய்ந்து சீரமைப்புப் பணிகள் நடைபெற்றுவரும் இந்த வேளையில் இப்படி ஒரு அசம்பாவிதம் இடம் பெற்றிருப்பது அரசுக்கும் அரசுத் தலைவர்களுக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்திருக்கும் என்று சொல்லத்தேவையில்லை. குறிப்பாக நாட்டின் ஜனாதிபதி ஐ.நா.பேரவையில் உரை நிகழ்த்துவதற்காக நியூயோர்க் சென்றுள்ள வேளையில், குண்டு வெடிப்பு இடம் பெற்றிருப்பது அவருக்கும் மகிழ்ச்சியளிப்பதாக இருக்க முடியாது.

30 ஆண்டுகால போரினை எதிர்கொண்டு அதனை முறியடித்து வெற்றிகொண்டதாக பெருமையோடும் பெருமிதத்தோடும் பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள் மத்தியில் கம்பீரமாக எழுந்து நின்று தனது சிம்மக் குரலை உயர்த்தி, தானும், தனது படைகளும் உலகில் வேறு எந்த பெரிய நாடும் செய்யாத ஒரு காரியத்தைச் சாதித்து விட்டமையைச் சொல்லிப் புளகாங்கிதமடைய இருந்த வேளையில், இது நடந்து விட்டமை அவருக்கு மட்டுமல்ல அவரைச் சார்ந்த அனைவருக்கும் மனச் சோர்வினைத் தரும் என்பதில் சந்தேகமில்லை.

கரடியனாறு பொலிஸ் வளாகத்திற்குள் வெடிபொருள்களுடன் கூடிய கொள்கலன் சென்றமைக்கான காரணம் தெளிவில்லாமல் இருக்கின்றது. மலைப்பாறையொன்றை வெடிவைத்து உடைப்பதற்கான அனுமதியைப் பெறவே கொள்கலன் அங்கு கொண்டு செல்லப்பட்டதாக முதல் வந்த செய்திகள் கூறின. வெடிபொருள்களை கொண்டு செல்வதற்கான அனுமதியைப் பெறுவதற்கு வெடிபொருள்களையும் ஏற்றிக் கொண்டு கொள்கலன் சென்றிருப்பின் அதனைச் செய்தவர்களின், அனுமதித்தவர்களின் புத்தி சாதுரியமற்ற தன்மை கேள்விக்குரியதாகும். பொதுவில் இப்படியான பொருள் களை வாகனங்களில் ஏற்றுவதற்கு முன்னரே அனுமதி பெற வேண்டும் என்பது நடைமுறையாகும். அந்த நடைமுறை பின்பற்றப்படாதிருப்பின் அதன் விளைவு பேரனர்த்தமாக முடிந்துள்ளதோடு மட்டுமன்றி இதில் சம்பந்தப்பட்டவர்களின் அசமந்தத்தை வெளிக்காட்டுவதாகவும் உள்ளது.

இறந்தவர்கள் அனைவரும் பொதுமக்கள் அல்லர். 16 பேர் வரை பொலிஸ் படையைச் சேர்ந்தவர்கள், மூவர் வெளி நாட்டவர், அதிலும் சீனர்களும் இருவர் மரணமானதாகத் தகவல். கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ள சீன நிறுவனம் ஒன்றின் கொள்கலனிலிருந்த வெடிபொருள்களே வெடித்து சிதறியதாகத் தகவல்.

இலங்கையின் அபிவிருத்திப் பணிகளில் சீன நிறுவனங்கள் பெரும் எண்ணிக்கையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. இதில் சுமார் 30 ஆயிரம் சீனர்கள் ஈடுபட இருப்பதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இவ்வாறான அபி விருத்திப் பணிகளில் இந்தியர்களும் 20 ஆயிரம் பேர் வரை ஈடு படவிருக்கிறார்கள்.

சீன - இந்திய நாடுகளுக்கிடையில் எல்லைப் பிரச்சினைகள் இருக்கும் நிலையில் அந்நாடுகளைச் சேர்ந்த பணியாளர்களை ஆயிரக்கணக்கில் நம் நாட்டுக்குள் அனுமதிப்பதில் அரசு சில வரைமுறைகளைக் கடைப்பிடித்தாக வேண்டும். சீனர்களும் - இந்தியர்களும் ஒரேவித பணிகளில் ஈடுபடாது போனாலும் ஒரு பிரதேசத்தில் பணியாற்றுவதாயின் சிக்கல்கள் தோன்றுவது சாத்தியம். அவ்வாறு சிக்கல் தோன்றும் நிலைமை ஏற்படாமல் சாதுரியமாக காரியமாற்ற வேண்டியது நமது நாட்டு அதிகாரவர்க்கத்தின் பொறுப்பு. ஏனென்றால் சிறு பொறி பெரு நெருப்பாக மாறி விடலாம். அவை இரண்டுமே அணு ஆயுத நாடுகள். அவற்றின் பலப் பரீட்சைக்கு நாம் களமாகி விட முடியாது. அதற்கேற்றாற்போல காரியங்கள் நடைபெறவேண்டும்.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு பிரதமர் வேறு முக்கியஸ்தர்களும் விரைந்தமை சம்பவத்தின் முக்கியத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. அத்துடன் சம்பவத்தை அரசு எவ்வளவு தூரம் பாரதூரமாக அவதானிக்கிறது என்பதையும் இது எடுத்துக் காட்டுகின்றது. 15க்கும் மேற்பட்ட பொலிஸார் மரணமடைந்திருப்பதும் பெரிய பொலிஸ் நிலையமொன்று தரைமட்டமாகியிருப்பதும் சிறிய விடயமல்ல.

உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளி நாட்டில் இருந்தவாறே உத்தரவு பிறப்பித்துள்ளார். கொழும்பிலுள்ள சீனத் தூதரகமும் சம்பவம் தொடர்பாக புலன் விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறது.

இந்த விசாரணைகள் எல்லாம், சம்பவம் எப்படி ஏற்பட்டது. எவர் செய்த தவறினால் ஏற்பட்டது போன்ற விடயங்களை வெளிக்கொணர்வதாக இருக்கும்.

உடனடியாகக் கிடைத்திருந்த தகவல்களின் படி எந்தவொரு தீவிரவாத அமைப்பும் இதில் ஈடுபட்டிருப்பதான அறிகுறிகள் இல்லை. ஆயுதக் குழுக்கள் பலவும் அரசுடன் இணைந்து கொண்டுவிட்டன. பல ஆயுதங்களை கைவிட்டுள்ளன. முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கிழக்கு மாகாண பெரும் புள்ளிகளான பிள்ளையான் என்று அழைக் கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தனும் கருணா அம்மான் என்ற முரளிதரனும் அரசில் இணைந்துள்ளவர்கள். முன்ன வர் கிழக்கு மாகாண முதலமைச்சராகவும், மற்றவர் மத்திய அரசின் பிரதி அமைச்சராகவும் உள்ளனர். எனவே இவர்களைச் சார்ந்த முன்னாள் போராளிகள் இம்மாதிரிச் சம்பவங் களில் ஈடுபடு வதற்குச் சாத்தியம் இல்லை. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை வேரோடு சாய்த்து விட்டதாக அரசு பறைதட்டுகிறது இந்த நிலைமை யில் போராளிக் குழுக்கள் எதுவும் இம்மாதிரி சம்பவங்களில் ஈடுபடுவதற்கில்லை எனலாம்.

எதுவானாலும், இச்சம்பவம் அரசுக்கும் அரசுடன் இணைந்திருப்பவர்களுக்கும், ஏன் அரசுக்கு சகல விதங்களிலும் உதவி ஒத்தாசை புரியும் வெளிநாடுகளுக்கும் ஓர் எச்சரிக்கை என்றே கொள்ள வேண்டும்.

போர் ஓய்ந்தாலும் அதன் எதிர்விளைவுகள் அவை அபிவிருத்திப் பணிகளாய் இருந்தாலும் கூட, ஆங்காங்கே இத்தகைய சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுப்பதில் அரசு ஏனோதானோ என்று செயற்படக்கூடாது. இச்சம்பவத்தை- அதன் உண்மை நிலையை- கண்டுபிடித்து வெளிப்படுத்த தவறினால், இது உள்வீட்டுத் தயாரிப்போ - திட்டமிட்டு செயற்பட்டதோ- என்று மக்கள் சந்தேகமுறப் பெரிதாக வாய்ப்பு உண்டு.

# 40 பேர் அடங்கிய பரிவாரக் குழுவுடன் ஜனாதிபதி நியுயோர்க் பயணம்

நேற்று 19.09.2010 ஆம் திகதி 'சண்டே ரைம்ஸ்' எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி இது.

கடந்த புதன்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஐ.நா. மகாநாட்டில் கலந்து கொள்ளப் புறப்பட்ட போது எல்லாமே சுமுகமாக நடந்தேறின, ஒரே ஒரு சிறு சம்பவத்தைத் தவிர.

அந்தச் சிறு சம்பவம் இதுதான். முன்னர் வடக்கில் வாழ்ந்துள்ளவர்களான இரு பிரயாணிகள் தாம் உடல் ரீதியாக சோதிக்கப்படுவதை அங்கீகரிக்க மறுத்துவிட்டார்கள். ஒருவர் பிரிட்டிஷ் கடவுச்சீட்டை வைத்திருப்பவர் - பின்னர் விட்டுக் கொடுத்தார், மற்றவர் ஒரு பெண் பிரயாணத்தை ரத்துச் செய்துவிட்டார்.

ஜனாதிபதி பேர்லின் செல்லும் வழியில் லண்டனுக்குப் பயணமானார். வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், சஜின்வாஸ் குணவர்தன எம்.பி. மற்றும் றொயெல் செல்வநாயகம் ஆகியவர்கள் ஜனாதிபதியுடன் புறப்பட்டார்கள். ஜனாதிபதியின் ஜேர்மனிப் பயணம் தனிப்பட்டது.

அங்கே பல விடயங்களுடன் முன்னாள் ஜேர்மன் அதிபர் ஹெல்மட் சோலையும் சந்திக்கவிருக்கிறார். 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின்போது கோல் தென்னிலங்கையில் ஹோட்டல் ஒன்றில் விடுமுறையில் தங்கியிருந்தார். ஹோட்டலில் சிக்கி விட்ட அவர் குறித்து ஜேர்மனியில் கவலை ஏற்பட்டிருந்தது. கடல் நீர் பெருகிக் கொண்டிருந்த நிலையில் இலங்கை விமானப்படை உதவியுடன் அவர் ஆபத்தின்றி தப்பினார்.

இந்த உதவியின் நிமித்தம் ஹெல்மட் கோல் நிறுவனம் நன்றிக்கடனாக காலியில் சுனாமி ஞாபகார்த்த ஆஸ்பத்திரியைக் கட்டிவருகிறது. இந்நிறுவனத்தின் தலைவர் ஜிரெஜன்வீர்த்தின் நண்பர் செல்வநாயகம் வீர்த் முன்பு ஜேர்மன் விமானப்படையைச் சேர்ந்தவர். அத்துடன் இலங்கையில் ஜேர்மன் தூதுவராகவும் இருந்துள்ளார். மெக்ஸிக்கோவின் நூற்றாண்டு விழாக்கள் நடைபெறுவதால் அந் நாட்டுக்கான ராஜபக்ஷவின் பயணம் ரத்துச் செய்யப்பட்டுவிட்டது.

ஜேர்மனியிலிருந்து ராஜபக்ஷ அமெரிக்காவுக்குச் செல்வார். இன்று 20 ஆம் திகதி நியுயோர்க்கில் ஜனாதிபதி வந்து சேர்வார். பெரும் எண்ணிக்கையிலான ஒரு குழு ஐ.நா. பொதுச் சபை கூட்டங்களில் பங்குபற்றுவதற்காக இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளது.

பின்னர் நடைபெறவிருக்கும் கூட்டங்களுக்கு முன்னதாக சபையின் முழு அளவிலான மாநாட்டிலும் ஜனாதிபதி கலந்து கொள்வார். இந்தக் கூட்டத்தில் உலக நாடுகளிலிருந்து சுமார் 150 தலைவர்கள் கலந்து கொள் வார்கள். நூற்றாண்டு வளர்ச்சி இலட்சியங்கள் தொடர்பான உச்சி மாநாட்டில் செப்ரெம்பர் 22 ஆம் திகதி ஜனாதிபதி உரை நிகழ்த்துவார். அடுத்த நாள் பொதுச்சபையில் அவருடைய உரைஇடம்பெறும். அங்கு ஏழாவது பேச்சாளராக அவர் உரை நிகழ்த்துவார்.

ஜனாதிபதியின் குழுவில் ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் உள்துறை பாதுகாப்பு அமைச்சராக இருந்தவரும் ஐ.தே.கவின் பிரதம கொறடாவுமான ஜோன் அமரதுங்காவும் கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது. 18 ஆவது அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போது அவரும் அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை.

ஜனாதிபதி அவரை தம்முடன் வரும் படி அழைப்பு விடுத்தபோது அது பற்றி அமரதுங்க கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஆலோசித்துள்ளார். அழைப்பை மரியாதையாக நிராகரித்துவிடும்படி ரணில் ஆலோசனை கூறியிருந்தார். வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் முதலில் கையெழுத்திட்டவரே அமரதுங்கதான் என்று கூறப்படுகின்றது.

அவசரமான ஏற்பாடுகளின் பின்னர் வியாழக்கிழமை அமரதுங்க வாஷிங்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார். புறப்படுவதற்கு முன்னர் தனது ஆதரவாளர்களுடன் பேசிய போது ஐ.தே.க வில் எதிர்காலம் இருப்பதாகத் தெரியவில்லையென்று அவர் கூறியதாகவும், வெளிநாடு சென்று திரும்பிய பின் ஒரு முடிவெடுப்பார் என்றும் அப்போது அவர்கள் ஆதரவளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார் என்று தெரிகின்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐ.தே.க. செயற்குழுக் கூட்டத்தில் அமரதுங்கவின் விடயம் ஆலோசிக்கப்பட்டது. அமரதுங்க வாஷிங்டனில் சுகவீனமுற்றுள்ள தனது மகளைப் பார்க்கச் சென்றுள்ளார் என்றும் கட்சியை விட்டு அவர் விலகமாட்டார் என்றும் ரணில் தெரிவித்தார். ஆனால் அவரது மகள் வாஷிங்டனிலல்ல போஸ்டனில் தான் இருக்கிறார் என்று ரவி கருணாநாயக்க தெரிவிக்க அமரதுங்கவின் பிரயாணச் செலவுகளை அரசாங்கமே செலுத்துவதாக இன்னொருவர் குற்றஞ் சாட்டினார். அவர் திரும்பி வந்தவுடன் பயணச் செலவுகளைத் திருப்பிக் கொடுக்கும்படி செய்யலாம் என்றார் ரணில்.

## 18ஆவது அரசமைப்புத் திருத்தம் குறித்து ஐ.நாவில் விளக்கமளிப்பார்

ஜனாதிபதியின் வாஷிங்டன் பயணத்தில் இடம்பெற்றுள்ள பரிவாரங்களில் ஐ.தே.க. எதிர்ப்புக் குழுவைச் சேர்ந்த லக்ஷ்மன் செனவிரட்ண, மனுஷா நாணயக்கார மற்றும் சிறிரங்கா முதலியவர்களும் இடம்பெற்றிருப்பதாகத் தெரியவருகிறது. அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, நிமால் சிறிபாலடி சில்வாவும் இடம்பெற்றுள்ளார்கள்.

நியுயோர்க் ஆடம்பர ஹோட்டல்களில் இலங்கைக் குழுவினருக்கு அறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இந்தக் குழுவில் சுமார் 40 பேர் அடங்குவதாகத் தெரிகின்றது.

குழுவின் ஐவருக்குத்தான் ஐ.நா. அதிகாரிகள் பாஸ் வழங்குகிறார்கள். ஏனையவர்கள் ஐ.நா. கட்டடத்திற்குள்ளேயே தொலைக்காட்சியில் பார்க்க வேண்டியிருக்கும். இலங்கைத் தூதரகத்தின் அதிகாரி ஒருவர் ஏனைய தூதரகங்களின் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களின் பாஸ்கள் எதனையும் கொடுத்து உதவ முடியுமா என்பதை அறிய முயன்று வருகின்றார்.

ஜனாதிபதி உலக பேரவையொன்றில் உலகத் தலைவர்களுக்காக உரை நிகழ்த்தவிருக்கிறாரே தவிர உலகப் பேரவையில் இருந்து தமது சொந்த நாட்டு குழுவினருக்கு உரை நிகழ்த்துவது போன்ற தோற்றத்தை உருவாக்குவதாக இருக்கலாகாது.

ஜனாதிபதி ராஜபக்ஷவின் நியுயோர்க் விஜயம் இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது.

### நிபுணர் குழு முறையாக தொடங்குகிறது

கடந்த செவ்வாய்க்கிழமை ஐ.நா. பேச்சாளர் மார்ட்டீன் நொசெர்க்கி பத்திரிகையாளர்களிடம் பேசியபோது இலங்கையின் பொறுப்புக்கூறும் தன்மைகள் குறித்து ஆராய்ந்து வரும் நிபுணர்கள் குழுவும் அதற்கு ஆதரவான அலுவலர்களும் ஆயத்த வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள். இந்த வாரத்தில் செயலாளர் நாயகத்தை நிபுணர்குழுவினர் சந்திக்க இருக்கிறார்கள். இது முறையாக செயற்பாடுகள் தொடங்கப்படுவதைக் குறிப்பதாக இருக்கும் என்று கூறினார்.

இலங்கையின் ஐ.நா. வுக்கான குழு நியுயோர்க்கில் இருக்கும் போது பான் கீ மூனின் நிபுணர் குழு செயற்பட ஆரம்பித்திருக்கும்.

கடந்த திங்கட்கிழமை நொசெர்க்கி பத்திரிகை நிபுணர்களிடம் பேசிய போது இலங்கை மனித உரிமைகள் மீறல் மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பாக தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்துள்ள நிபுணர் குழுவுடன் அவர் தமது முதலாவது சந்திப்பை மேற்கொள்ள இருக்கின்றார். இந்தச் சந்திப்பானது குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள 4 மாத காலக் கெடுவின் ஆரம்ப நிகழ்ச்சியாக இருக்கும். நிபுணர் குழு முழுமையாக செயற்படத் தொடங்கியிருப்பது குறித்து செயலாளர் நாயகம் மகிழ்ச்சியடைந்திருக்கிறார். அதன் ஆலோசனைகளை அவர் எதிர்பார்த்திருக்கின்றார். இந்தச் செயற்பாட்டின் மூலம் இலங்கையில் நீடித்த அமைதிக்கும் நல்லிணக்கத்துக்கும் உதவுவதற்கு செயலாளர் நாயகம் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார் என்றார்.

இந்த விடயத்தில் சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு தமது உரையில் ஜனாதிபதி தகுந்த பதில் அளிப்பார் - மறுத்துரைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு இந்த விடயங்களை எவ்வாறு கையாள்கின்றது என்பதை அவர் விளக்குவார். இன்னொரு விடயம் என்ன வென்றால் அரசமைப்புக்கு கொண்டு வரப்பட் டுள்ள 18 ஆவது திருத்தம் தொடர்பாக அமெரிக்க அரசு எழுப்பியுள்ள பிரச்சினைக்கு பதிலளிக்க வேண்டுமா என்ற விடயம் கடந்த செப்ரெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்க ராஜாங்க அமைச்சைச் சேர்ந்த பிலிப் ஜே.கிரஷ்லி பத்திரிகையாளர்களிடம் பேசியபோது இலங்கையில் 18 ஆவது திருத்தம் எவ்வாறு வளர்ந்தது, நிறைவேற்றப்பட்டது என்பவற்றை உன்னிப்பாக அமெரிக்கா அவதானித்து வந்துள்ளது. ஜனாதிபதியின் பதவிக்காலத்தைக் கட்டுப்படுத்துவதை இந்தத் திருத்தம் இல்லாமல் செய்கின்றது. சுதந்திர அமைப்புகள், தேர்தல்கள், பொலிஸ், மனித உரிமை ஆணைக்குழுக்கள் மற்றும் நீதிபரிபாலனம் முதலியவற்றின் மீதான ஜனாதிபதியின் அதிகாரங்களை இது விரிவாக்குவதாய் உள்ளது.

இந்தத் திருத்தமானது கண்காணிப்புக்களை பலவீனப்படுத்துகின்றது. அதன் மூலம் அரசமைப்பு ஜனநாயகத்தின் கொள்கைகளை மோசமாகப்பாதிக்கிறது. நல்லாட்சியின் கொள்கைகளையும் ஜனநாயகத்தையும் அரசின் சுயாதீன அமைப்புக்களையும் மேம்படுத்துமாறு அமெரிக்கா இலங்கைஅரசைக்கேட்டுக் கொள்கிறது.

சுயாதீன அமைப்புக்களை மேம்படுத்தும் வகையில் அவைக ளுக்கு பொருத்தமான கல்வித் தகைமையுள்ளவர்களை நியமிப்பது, வெளிப்படைத் தன்மையை அதிகரித்தல், அதிகாரப் பரவலாக்கலுக்கான பேச்சுவார்த்தை களை ஆரம்பித்தல், தேசிய நல்லிணத்துக்கு வழிகாணுதல் முதலியனவற்றை விரைவாகச் செயற்படுத்தும்படி அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் இரண்டு கருத்துக்கள் நிலவுகின்றன. ஒன்று என்ன வென்றால் 18 ஆவது திருத்தமானது 'உள்ளக விடயம்' என்றவாறு ஏற்கனவே இலங்கை அரசு அமெரிக்காவுக்குப் பதில் கூறிவிட்டது. எனவே மீண்டும் பதிலளிப்பதன் மூலம் அந்த நாட்டுடன் நீண்ட விவாதத்தில் ஈடுபடத் தேவையில்லை.

இன்னொரு கருத்து என்னவென்றால், சர்வதேச சமூகத்துக்கு விளங்கப் படுத்துவதற்கான சர்வதேச அரங்காக ஐ.நா. சபை இருப்பதால் அரசு விளக்கமான அறிக்கையொன்றை விடுப்பதாகும்.

18 ஆவது திருத்தமானது ஜனநாயக முறையில் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறை வேற்றப்பட்டிருப்பது தெரிவிக்கப்பட வேண்டும் என்பதுமாகும்.

தமிழில்: கோகுலன்

## நாளை

புரட்டாதி 05 21.09.2010
செவ்வாய்க்கிழமை
திதி: : திரயோதசி
மு.ப.11.06 வரை
நட்சத்திரம் : சதயம்
முழுவதும்
சுபநேரம் : 10.02-12.02 வரை
ராகுகாலம் : 03.02-04.32 வரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கவின் உள்ளூராட்சி உறுப்பினர்கள் சஜித்துக்கு ஆதரவாகத் தீர்மானம்



கொழும்பு, செப்.20

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக சஜித் பிரேமதாசாவை நியமிக்க வேண்டுமென அநுராதபுரம், பொலன்னறுவை, காலி மாவட்டங்களின் உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்த ஐ.தே.க அங்கத்தவர்கள் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளனர்.

அநுராதபுரத்தில் 48 அங்கத்தவர்களில் 36 பேர் இத்தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். காலியில் 57 அங்கத்தவர்களில் 44 பேர் இதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்த ஐ.தே.க.வின் 19 அங்கத்தவர்களும் இத் தீர்மானத்திற்கு ஆதரவாக ஏகமனதாக வாக்களித்தனர்.

இதேவேளை நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் பல சஜித் பிரேமதாசா எம்.பிக்கு ஆதரவான தீர்மானங்களை நிறைவேற்றத் தயாராகிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## மரண அறிவித்தல்கள்

### கீதபொன்கலன் லில்லிகிறேஸ்



மண்டைதீவு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.8, அடப்பன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கீதபொன்கலன் லில்லிகிறேஸ் 17.09.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மடுத்தீன் கீதபொன்கலனின் பாச மிகு மனைவியும், குணபாலன், தனபாலன், கனிபாலன், மாலதி, தயானதி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜான்சி, வசந்தி, உயிலா, எட்மன், யூட் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2010) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் அவரது யாழ்ப்பாண இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு மண்டைதீவிலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு மண்டைதீவு புனித பேதுரு வானவர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் பட்டு நண்பகல் 12 மணியளவில் புனித பேதுருவானவர் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

தகவல்:
ம.கீதபொன்கலன்
(கணவர்).

### பொன்னையா மார்க்கண்டு



(ஓய்வுபெற்ற கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்)

சாவகச்சேரி, டச்சு வீதி, சங்கத்தானை, 2ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த பொன்னையா மார்க்கண்டு 18.09.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் நவரத்தினம் - காசியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் கருணாதேவி, நிர்மலாதேவி, வசந்தாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் வரதராசா (ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர் C.E.B), கிருஷ்ணகுமார் (OCEAN LINES), ஜெயராசசிங்கம் (Ceramic - Corp.) ஆகியோரின் அன்பு மாமனும் விஜயரத்தினத்தின் (மட்டக்களப்பு) மைத்துனரும் ரகுராம் - நந்தினி (ஜேர் மனி), பிரபுராம் - மஞ்சுளா (U.K), ராஜாராம் - லதா (U.K), சத்தியபாமா - ஸ்ரீரஞ்சன், கார்த்திகன் - கலைவாணி, யோகிகா - இந்திரஜித், அனுசா - வசந்தன், பிரிந்தா - ஜதீபன் (கனடா), ஜெயந்தா ஆகியோரின் அன்புப் பேரனும் விபூஷிதன், பிரணவன், சங்கவி, கிருஷோத்தமன், விசாலி, கணாதீபன், கஜதீபன், கனகராசா, அஞ்சு, அஜித், கமலாசினி, கானப்பிரியா, ஜஸ்மினா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.09.2010) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப் பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

2ஆம் ஒழுங்கை,
சங்கத்தானை,
டச்சு வீதி, சாவகச்சேரி. (வி/570633)

தகவல் :
குடும்பத்தினர்.


## English Classes

New admissions for English classes are done by K.C.Sivasubramaniam.
No 45,3rd lane
Kantharmadam,Jaffna
T.P No 021-222-8125
Please join us

**காணி விற்பனைக்கு:** கோக்குவில் கிழக்கு, சம்பியன் ஒழுங்கையில் இருந்து இராமகிருஸ்ண பாடசாலை பின்புறமாகச் செல்லும் ஒழுங்கையில் பாடசாலையில் இருந்து 150 யார் தூரத்தில் 2 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777989126

### வீடு வாடகைக்கு

சுண்டுக்குளிப் பகுதியில் கண்டி வீதி (ஏ-9) அருகாமையில் இரண்டு அறைகளுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்கு உண்டு ஒரு சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. (தரகர்கள் தேவையில்லை). தொடர்புகொள்ள வேண்டிய இல: ஜெயபாலன் - 0713320456 (mon -Fri 8 am - 10 pm)
0113159846 (Sun - sat 8am - 10pm)

### போட்டிப் பரீட்சை வகுப்புகள்

04 இடங்களில் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.
* அழகியற் பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் இணைத்தல்.
* முகாமைத்துவ உதவியாளர் பரீட்சை.
* ஏனைய பொது அறிவு, பொது உளச்சார்பு பரீட்சைகள்
  * உயர்கலைக்கல்லூரி
    மீசாலைச் சந்தி - செவ்வாய், வெள்ளி : 3-5.30 pm
  * கிறிஸ்டல்
    நெல்லியடி - திங்கள், வியாழன் : 3-5.30 pm
  * சுப்றா
    சித்தன்கேணி - புதன் : 6 pm ஆரம்பம்
யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புகள் பிரிவு
சனி, ஞாயிறு : 2-5 pm

ஆசிரியர்: தவசேகர்


# கைவினைஞர்களுக்கான செயலமர்வு இன்று

யாழ்ப்பாணம், செப். 20

கைவினைப் பொருள்களின் தரத்தை மேம்படுத்துவதற்கும், உற்பத்தியை ஊக்குவிப்பதற்குமான செயலமர்வு இன்று பல்வேறு இடங்களில் நடத்தப்படவுள்ளது. பாரம்பரிய தேசிய வடிவமைப்பு நிலையம் இந்தச் செயலமர்வை ஏற்பாடு செய்துள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கைவினைஞர்களுக்கான செயலமர்வு யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பிக்கும். காரைநகர், சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்தவர்களுக்கான செயலமர்வு சங்கானை பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்குத் தொடங்கும் என அறிவிக்கப் பட்டுள்ளது. கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கைவினைஞர்களுக்கான செயலமர்வு கரவெட்டிப் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் பிற்பகல் ஒரு மணிக்கும் தொடங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து கைவினைஞர்களும் உரிய இடத்தில், உரிய நேரத்தில் தமது கைவினைப் பொருள்களுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (310)


அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க 75% Real Offer இல் மேலும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.

Real Offer-75% for All
நேரடி உண்மைக் கட்டணக்கழிவு

DIPLOMA IN PC APPLICATION
DIPLOMA IN MICROSOFT OFFICE
ADV. DIP. IN HARDWARE & NETWORKING
DIPLOMA IN PRE-PRESS DESKTOP PUBLISHING
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
DIP. IN WEB PAGE DESIGNING AND DEVELOPMENT
TALLY FINANCIAL ACCOUNTING TRAINING
DIP. IN VIDEO PRODUCTION AND MULTIMEDIA
MASTERS DIPLOMA IN DIGITAL ANIMATION

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும் Spoken English பயிற்சி மையம்
veta® Experts in English Training
An ISO 9001:2000 Company
veta புதிய பிரிவுகள் ஆரம்பம்.
20/9/2010 7.30 a.m. & 10.30 a.m.
25/9/2010 9.00 a.m. & 3.30 p.m.

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
20/9/2010 9.00 a.m.& 11.00 a.m.
22/9/2010 9.00 a.m. & 3.00 p.m.

முழுமையானதும் தரமானதுமான கணனிக் கல்விக்கு.

CITECS IAB

அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனி நிறுவனம்
DMI COMPUTER EDUCATION
No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M. M. V. வீதி, நெல்லியடி. Tel. : 021-320 7700



### பாடசாலை அதிபர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை பயிற்சி வகுப்புகள்

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் அதிபர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டும் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை முதல் ஆரம்பமாகின்றன. பயிற்சிபெற விரும்புவோர் தமது பெயர்களை 20.09.2010 திங்கள் தொடக்கம் தினமும் காலை 8.30 முதல் மாலை 4 மணிவரை கீழே குறிப்பிட்டுள்ள விலாசத்தில் பதிவுசெய்யவும்.

இல. 12/1, முதலாவது நெரு, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
விவரங்களுக்கு ஒருங்கிணைப்பாளர்: 0772939702, 0777184410


## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் சுந்தரமூர்த்தி



(இளைப்பாறிய ஆசிரியர்)

கட்டுவனைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சுந்தரமூர்த்தி (இளைப்பாறிய ஆசிரியர்) நேற்று (19.09.2010) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் வைத்திலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் புதல்வனும், பராசக்தியின் அன்புக் கணவரும், சுபாசினி (லண்டன்), சுஜந்தினி, சுதர்சன் (எடிசன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் மதியாபரணம் (லண்டன்), முத்தாபரணம், புவனேஸ்வரி, ராசமலர் (லண்டன்), சிவபாதசுந்தரம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பாலேந்திரா (லண்டன்), கிரிதரன் ஆகியோரின் மாமனாரும், சுஜானா (லண்டன்), சுஜினா (லண்டன்), சுஜந்தன் (லண்டன்), லக்கியன், லக்ஷிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2010) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று ந.ப. 12 மணிக்கு பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளையாட்டரங்கு வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (103606)

தகவல்:
கிரிதரன் (மருமகன்).

### திருமதி மகாதேவன் சகுந்தலாதேவி



கரணவாய் மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாதேவன் சகுந்தலாதேவி (செல்லக்கண்டு) நேற்று (19.09.2010) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - லட்சுமி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - அகபதி தம்பதிகளின் மருமகளும் மகாதேவனின் அன்பு மனைவியும் (இளைப்பாறிய மக்கள் வங்கி அலுவலர்), நிர்மலாவின் (கனடா) அன்புத் தாயும், ஜெயலிங்கத்தின் (கனடா) அன்பு மாமியும், லக்ஷன், திவ்யா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தர்மகுலசிங்கம் (சுவிஸ்), பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, பெரியதம்பி, தர்மலிங்கம் (மலேசியா), சிவக்கொழுந்து மற்றும் முருகேசு ஆகியோரின் அன்பு மைத்துனியும், உருத்திரலிங்கம் (கனடா), அமிர்தலிங்கம் (கனடா), லிங்கவதி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், ரதி, கீதா ஆகியோரின் அன்பு மைத்துனியும், ராஜேஸ்வரி (சுவிஸ்), வசந்தி (சுவிஸ்) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும், இராசம்மாவின் பெறாமகளும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.09.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப் பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரணவாய் மத்தி,
கரவெட்டி.
தொ.பே. 0213002842. (வி/570635)

தகவல்:
பொ.மகாதேவன்
(கணவர்)

### மார்க்கண்டு கமலநாதன்



பிறவுண் வீதி, 5 ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு கமலநாதன் நேற்று (19.09.2010) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் குணேஸ்வரியின் அன்புக் கணவரும் பார்த்தீபன் (பிரான்ஸ்), தமயந்தி (பிரான்ஸ்), தனுசா, நளாயினி (பிரான்ஸ்), கார்த்திக், ஜானகி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

66/10, பிறவுண் வீதி,
5 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம்.

தகவல்:
சுஜந்தன்
(மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்தவர்கள் மீளக்குடியமரும் போது வாக்காளராகப் பதிவு செய்ய விசேட ஏற்பாடு

## பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.20

வடக்குக் கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுத் தமது சொந்த இடங்களில் மீள் குடியேறும் மக்கள் மீள்குடியேறும் போது தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளமுடியும்.

இவர்களது பதிவுகள் மேல் முறையீட்டு விண்ணப்பமாகக் கருதி ஏற்றுக் கொள்ளப் படும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதித் தேர்தல் ஆணையாளர் பி.எம்.சிறிவர்த்தன.

வடமாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட இவர் யாழ்.செயலகத்தில் வைத்து ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

2010ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் மீளாய்வு தொடர்பான விடயங்களை ஆராயவே நான் வடமாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளேன்.

1981ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்புப் பதிவுச் சட்டத்தின் பிரகாரம் வீட்டுக்கு வீடு சென்று வாக்காளர் விவரம் திரட்டப் பட்டு அவர்களுக்கான அட்டைகள் விநியோகிக்கப்பட்டன.

எனினும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்த சூழல் காரணமாக இப்பணிகள் சீராக நடைபெறவில்லை.

இதுவரை நடைமுறையிலுள்ள வாக்காளர் இடாப்பில் இப் பிரதேசங்களில் வசிக்காதவர்கள் மற்றும் வெளிநாடுகளுக்குச் சென்றவர்களின் பெயர்கள் இருந்துள்ளன. இதனைத் தேர்தல் கண்காணிப்புக்கென வருகை தந்தவர்கள் நன்கு சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

இவ்வாறு பல்வேறு தரப்பினரிடமிருந்து கிடைக்கப்பட்ட முறைப்பாடுகளைத் தற்போது இங்குள்ள சுமுக நிலையைப் பயன்படுத்தி நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளை எடுக்கவுள்ளோம்.

தற்போது இங்கு இரண்டு இலட்சத்து 67,311 பேரின் அடையாள அட்டைகளைப் பதிவு செய்து வாக்காளர் இலக்கங்கள் திரட்டப்பட்டுள்ளன.

இது வீட்டுக்கு வீடுசென்று படிவங்கள் வழங்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டதல்ல.

அத்துடன் மீளக்குடியேறிவரும் மக்களையும் வாக்காளர்களாகப் பதிவதற்கு நாம் திட்டம் வகுத்துச் செயற்பட்டு வருகின்றோம்.

இதற்கென கிளிநொச்சி மாவட்டத்தில் உதவித் தேர்தல் ஆணையாளர் ஏ.எஸ். கருணாநிதி நியமிக்கப்பட்டுள்ளார். அங்கு கணக்கெடுப்புத் துறையில் அனுபவமற்ற அலுவலர்களே காணப்படுவதால் குறித்த அலுவலர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் பயிற்சியளிப்பதற்கான நடவடிக்கைகளும் எம்மால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இப்பதிவுகள் எவ்வாறு மேற்கொள்ளப் பட இருக்கின்றது என்பது தொடர்பான பத்துப்பக்க அறிக்கைகள் அனைத்துக் கட்சிகளின் துறைசார்ந்தோருக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. பொதுவாக வாக்காளர் பதிவுகள் கடந்த ஜூன் 1 தொடக்கம் ஜூலை 15 வரையான காலப் பகுதியிலேயே நடைபெற்று வருகிறது.

இது ஏனைய மாவட்டங்களில் நிறைவு பெற்றாலும் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு மட்டும் எதிர்வரும் நவம்பர் 20ஆம் திகதிவரை சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இத்தினத்துக்குப் பின்பும் யாராவது பொதுமக்கள் மீளக்குடியமர்ந்தாலும் அவர்களுக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஒவ்வொரு பகுதிக் கிராம சேவையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நவம்பர் மாதத்துக்குள் மீளக் குடியேறாமல் தொடர்ந்தும் முகாம்களில் தங்கியிருக்கும் மக்கள் அங்கிருந்தே தமது சொந்த இடங்களில் பதிவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கவுள்ளோம் - என்றார்.

இச்சந்திப்பில் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.குகநாதன், கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஏ.எஸ்.கருணாநிதி, வவுனியா மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-16)

## மகளிருக்கான பயிற்சி

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்ப்பாணம் கலாலயாப் பயிற்சி நிலையத்தினால் வடமராட்சி, தென்மராட்சிப் பிரிவுகளைச் சேர்ந்த மகளிருக்குப் பயிற்சிக்கான அனுமதியைப் பெறுவதற்கு பதிவுகளை நாளை மறுதினம் புதன்கிழமைக்குப் பின்னரும் மேற்கொள்ள முடியும் என கலாலயா பொறுப்பாசிரியர் தெரிவித்துள்ளார். (ற)

## ஐ.நாவின் ஏற்பாட்டில் வாழ்வாதாரத் திட்டம்

யாழ்ப்பாணம்,செப்.20

ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் ஏற்பாட்டில் வாழ்வாதார உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் திவ்வியஜீவன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார், நல்லூர் பிரதேச செயலர் செந்தில் நந்தனன் மற்றும் அதிகாரிகள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் சுமார் 20,000 - 35,000 வரையான பெறுமதியுடைய உதவித் திட்டங்கள் பொதுமக்களுக்கு வழங்கப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு அரசு முன்னுரிமை வழங்குகின்றது

## பிரதி அமைச்சர் றோஹன்ன தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.20

ஸ்ரீலங்கா சுதரந்திரக் கட்சியின் ஊடாக வடக்கு - கிழக்கினைச் சிறந்த முறையில் அபிவிருத்தி செய்ய தங்கராசாவும், கருணாவும் போதும். அவர்கள் ஊடாக அபிவிருத்தியை முன்னெடுக்கப் போகிறோம்.

இவ்வாறு போக்குவரத்துத்துறை பிரதியமைச்சர் றோஹன்ன திஸநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் நியமனப்பத்திரம் வழங்கும் நிகழ்வு கட்சியின் யாழ். அலு




வலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையிலே மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொலை செய்யப்பட்ட பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினை சிறந்த முறையில் செயற்பட வைத்தவர் தங்கராசா என்பதை எமது கட்சி என்றும் நன்றியுடன் நினைவு கூறிக் கொண்டிருக்கும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இன்று பலம் பொருந்திய பிரதான கட்சியாக வளர்ச்சியடைந்துள்ளது. 161 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட மாபெரும் சக்தியாக உள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஊடாக வடக்கு - கிழக்கில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளோம். வடக்கினை அபிவிருத்தி செய்ய யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் தங்கராசாவும்,கிழக்கினை அபிவிருத்தி செய்ய முரளீதரன் (கருணா) ஆகிய இருவரும் எமக்கு போதும்.

இங்கு மீன் வளத்தினை அபிவிருத்தி செய்யவும் அதுசார்ந்த மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளோம்.

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் யாவும் இன்னும் மூன்று வருடத்துக்குள் நிறைவு பெற்று விடும் என்று நாம் முழுமையாக நம்புகிறோம்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 11 தேர்தல் தொகுதிகளுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் வெகு விரைவில் நியமிக்கப்படவுள்ளனர் - என்றார். (ஐ-9)

# சு.கவின் யாழ்.மாவட்ட அமைப்பாளராக மாத்தளை தங்க துஷாரா நியமனம்

யாழ்ப்பாணம்,செப்.20

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளராக அன்ரன் தங்க துஷாரா என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

போக்குவரத்துறை பிரதி அமைச்சர் றோஹன்ன திஸநாயக்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர் வே.தங்கராசா ஆகியோர் கட்சியின் யாழ். அலுவலகத்தில் வைத்து நேற்று இவருக் கான நியமனப்பத்திரத்தைக் கையளித்தனர்.



இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

யாழ்.மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள அன்ரன் தங்க துஷாரா என்பவர் மாத்தளையைச் சொந்த இடமாகக் கொண்டவர். தற்போது யாழ்ப்பாணத்தில் ஆரிய குளப் பகுதியில் வசித்து வருகிறார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மீது அதீத விசுவாசமும் பற்றும் கொண்டவர் ஆதலால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நேரடியான உத்தரவின் பேரில் இவர் யாழ். மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப் பட்டுள்ளார் என்று கட்சியின் யாழ்.மாவட்டப் பிரதம அமைப் பாளர் வே.தங்கராசா தனது அறிமுக உரையில் தெரிவித்தார். (9)

# மீளக்குடியமர்ந்தோரின் தேவைகள் குறித்து மருதங்கேணியில் இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.20

வடமராட்சி கிழக்கில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் தேவைகள் குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல், இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளும் இந்தக் கலந்துரையாடலில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களதும் திணைக்களங்களதும் உயர்மட்ட அதிகாரிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.


மீளக் குடியமர்ந்த மக்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் வீதி, சுகாதாரம், போக்குவரத்து, கல்வி, நீர்வழங்கல், வீட்டுவசதி கூட்டுறவு உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்.மாவட்ட செயலக அதிகாரிகள், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை அதிகாரிகளும் இதில் கலந்து கொள்கின்றனர். (ஐ-14)




யாழ்ப்பாணத்தில் போக்குவரத்துத் துறையின் நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக நேற்று முன்தினம் கோண்டாவில் இ.போ.ச.அலுவலகத்திற்கு வருகைதந்த போக்குவரத்துப் பிரதி அமைச்சர் றோஹன்ன திசநாயக்கா பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் சாரதி, நடத்துநர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்குவதை படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



25 th Year
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

வெள்ளிவிழாவை

முன்னிட்டு

# எழுத்தாக்கப் போட்டிகள்

உதயன் நாளிதழ் தனது 25 ஆண்டுகள் நிறைவுநாள் நிகழ்வைச் சிறப்புடன் கொண்டாடும் நோக்குடன் எழுத்தாக்க ஆர்வமுடைய உதயன் வாசகர்களிடையே பின்வரும் திறனறியும் போட்டிகளை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

1. சிறுகதை
2. புதுக் கவிதை
3. மரபுக் கவிதை
4. கட்டுரை

**பரிசுகள்**

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தெரிவாகும் ஆக்கங்களுக்குப் பின்வரும் வகையில் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூன்று இடங்களுக்கும் முறையே:-

முதலாம் இடம் ரூபா 25,000/-
இரண்டாம் இடம் ரூபா 15,000/-
மூன்றாம் இடம் ரூபா 10,000/-

தெரிவு செய்யப்படும் மேலும் 08 ஆக்கங்களுக்குச் சான்றிதழ் வழங்குவதுடன் தெரிவாகும் அனைத்து ஆக்கங்களும் உதயன் பத்திரிகையில் வெளியிடப்படும்.

**சிறுகதை ஆக்கம் - நிபந்தனைகள்**

- சிறுகதை ஒவ்வொன்றும் சமகால சமூகப்பண்பியல் உணர்வுகளை வெளிப்படுத்துவனவாய் மானிட மேன்மையை அவாவுவனவாய் அமைதல்வேண்டும்.
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட எத்தனை சிறுகதைகளையும் எழுதலாம். சிறுகதை எழுதப் பட்ட தாளில் பெயர், முகவரி என்பவற்றை எழுதுவதைத் தவிர்க்கவும். தனியான தாளில் பெயர், முகவரி என்பவற்றை எழுதி இணைக்கவும்.

**கவிதை ஆக்கம் - நிபந்தனைகள்**

- கவிதைகள் யாப்பமைதி பேணுபவையாகவோ, புதுக்கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக்கவிதை, புதுக்கவிதை இரண்டும் தனித்தனிப் பிரிவாகத் தெரிவு செய்யப்பட்டுப் பரிசுகள் வழங்கப்படும்.
- கவிதைகள் சமூகப் பிரஞ்ஞை உடையனவாய் மானிடத்தின் மேன்மையை அவாவுவனவாய் அமையவேண்டும்.
- இலக்கண வழுக்கள் சொல் / எழுத்துப் பிழைகளுக்குப் புள்ளிகள் கழிக்கப்படும்.
- கவிதைகள் 40 அடி / 60 வரிகளுக்கு மேற்படாதவனவாய் அமையவேண்டும்.

**கட்டுரை ஆக்கம் - நிபந்தனைகள்**

பின்வரும் விடயப் பரப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து கட்டுரை ஆக்கப்படுதல் வேண்டும்.

1. மூன்றாம் உலகநாடுகள் எதிர்நோக்கும் பிரச்சனைகளும் தீர்வுகளும்
2. புலம் பெயர்தல் இலங்கைத் தமிழர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வாகுமா?
3. எதிர்கால நோக்கில் தமிழர் விஞ்ஞானம்
4. ஈழத்தில் மெல்லத்தமிழ் இனி ..... !
5. தமிழ்ப் பெண்கள் உண்மையில் விடுதலை பெற்றுள்ளார்களா?

எழுதப்படும் கட்டுரைகள் A4 தாளில் அச்சிடப்பட்டதெனின் 06 பக்கங்களுக்கு மேற்படா திருத்தல் வேண்டும். கையெழுத்தெனின் A4 தாளில் 06 பக்கங்களுக்குள் உள்ளடக் கத்தக்கவாறு அச்சிட்டுப்பெறும் வகையில் எழுதப்படுதல் வேண்டும்.

**பொது நிபந்தனைகள்**

- ஆக்கங்கள் தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.
- ஆக்கம் ஒவ்வொன்றும் தனது சொந்த ஆக்கம் என்பதையும் முன்னர் எப்பொழுதும் வெளியிடப்படாததும், வேறெவரது ஆக்கமும் அல்ல என்பதையும் உறுதி செய்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்பிவைக்கும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் சிறுகதை / புதுக்கவிதை / மரபுக்கவிதை / கட்டுரை என்பதைக் குறிப்பிடவும். (தேவையற்றதை நீக்கிவிடவும்)
- இத்துடன் இணைத்துள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி அனுப்பும் ஆக்கங்களே பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
- ஆக்கங்கள் யாவும் 15.10.2010ந் திகதிக்கு முன்னர் உதயன் பணிமனைக்குக் கிடைக்கக் கூடியதாக அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். உதயன் விண்ணப்பப், படிவம் இணைக்கப்படாதவையும் குறித்த தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் ஆக்கங்களும் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- ஆக்கங்கள் கையெழுத்தாகவோ அச்சிடப்பட்டனவாகவோ அமையலாம்.
- உதயன் நிறுவனத்தினர் மற்றும் சகோதர நிறுவனங்களில் பணிபுரிவோர் இப் போட்டிகளில் பங்கு கொள்ளமுடியாது.

**உதயன் வெள்ளிவிழா – 2010**

**எழுத்தாக்கப் போட்டிகள் விண்ணப்பப்படிவம்**

சிறுகதை/ புதுக்கவிதை/ மரபுக்கவிதை/ கட்டுரை

(தேவையற்றதை கீறிட்டு நீக்குக)

1. எழுத்தாளர் பெயர் : ........................................
2. புனைபெயர் இருப்பின் : ........................................
3. முகவரி : ........................................
4. ஆக்கத்தின் தலைப்பு: ........................................

இது எனது சொந்த ஆக்கம் என்பதையும் இதற்கு முன்னர் எவ்வழியிலும் இது வெளியிடப்படவில்லை என்பதையும் இது வேறு எவரது ஆக்கமும் அல்ல என்பதையும் இதன்மூலம் உறுதி செய்கிறேன்.

உறுதிப்படுத்துபவர். ................ கையொப்பம்

# முதியோர், மாற்றுவலுவுள்ளோர் நலன்பேண ஒக்.1 இலிருந்து பல்வேறு நிகழ்வுகள்

நாவற்குழி,செப்.20

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகப் பிரிவுகள் தோறும் எதிர்வரும் முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரையில் முதியோர், மாற்றுவலுவுள்ளோர் வாரத்தைக் கடைப்பிடிப்பதற்குரிய அறிவுறுத்தல்களை வழங்கி உள்ளது.

பிரதேச செயலர்கள் இத்தினத்தைக் கடைப்பிடிப்பதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

முதியோர், மாற்றுவலுவுள்ளோர் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்வுகளை பொது மக்களிடம், மாணவர்களிடையே ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வழமைபோன்று பிரதேச மட்ட சமூக அடிப்படை நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து இத் தினத்தைக் கடைப்பிடிப்பதற்குரிய ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமூக சேவைகள் திணைக்களம் வடக்கிலுள்ள ஏனைய 4 மாவட்டங்களிலும் இத் தினத்தைக் கொண்டாடுவதற்குரிய ஏற்பாடுகளையும் பிரதேச செயலாளர்கள் மூலமாக முன்னெடுத்து வருகின்றது.

(ஐ-121)

# அளவுக்கு அதிகமான கள் வைத்திருந்த மூவருக்கு அபராதம்

தென்மராட்சி,செப்.20

அளவுக்கு அதிகமாக கள் வைத்திருந்த கிளிநொச்சியைச் சேர்ந்த மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கிளிநொச்சி மதுவரித் திணைக்களத்தினரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா அவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா இரண்டு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (207)

# விபத்தில் நால்வர் காயம்

தென்மராட்சி,செப்.20

வீதியோர வடிகாலுக்குள் மோட்டார் சைக்கிள் சில்லு இறங்கியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இடம் பெற்றது.

உடுவில் ஆலடியைச் சேர்ந்த நடராசா கணேசலிங்கம் (வயது 47) இவரது பிள்ளைகளான கணேசலிங்கம் வினோஜிகா (வயது 15) அனோஜிகா (வயது 12) இவரது சகோதரனின் மகனான தவராசா தர்சன் (வயது 11) ஆகியோரே காயமடைந்தவராவர்.

காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (207)

# சமாதான நீதிவான்களுக்கென தனியான திணைக்களம்


இனிவருங் காலங்களில் சமாதான நீதிவான் பதிவுகளை வழங்குவது தொடர்பாக நீதியமைச்சின் கீழ் புறம்பானதொரு திணைக்களத்தை உருவாக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சமாதான நீதிவான்களது நலன் தொடர்பாகவும் அவர்கள் மூலமாக நாட்டுக்குக் காத்திரமான சேவைகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் ஆராய்ந்த பின்னரே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக நீதியமைச்சர் அத்தாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சரவைப் பத்திரம் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாடு முழுவதும் மூன்று இலட்சம் வரையான சமாதான நீதிவான்கள் தற்போது செயற்பட்டு வருகின்றனர். எதிர்காலத்தில் இவர்கள் தொடர்பாக தகவல்களைச் சேகரிப்பதற்கும் அவர்களிடமிருந்து சமுதாயத்துக்குக் கிட்ட வேண்டியுள்ள சேவைகள் தொடர்பாக அவர்களுக்குத் தெளிவூட்டத் தாம் எதிர்பார்த்துள்ளார் எனவும் அமைச்சர் அத்தாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

(ஐ)



மதியாமடு இடைநிலைப் பாடசாலையில் கல்வி கற்றுவரும் மாணவர்களுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் சைக்கிள்களை வழங்கினர். நீண்ட தூரங்களில் இருந்து பாடசாலைக்கு நடந்து வந்து சிரமப்படும் மாணவர்களுக்கு உதவுமுகமாகவே இந் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

தமது பிள்ளைகள் பாடசாலை சென்றுவர சைக்கிள்கள் தேவை என, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்பகுதிக்குச் சென்றிருந்தபோது, மாணவர்களின் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். அவர்களது கோரிக்கையை ஏற்ற கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சைக் கிள்களை விரைவில் வழங்குவார் என உறுதி அளித்திருந்தார்.

அந்த உறுதிமொழியை நிறைவேற்றும் வகையில் கடந்த வெள்ளிக்கிழமை 8 சைக்கிள்கள் நாடாளுமன்ற உறுப்பினரால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.


# 20 பேருக்கு செயற்கைக் கால்கள் மக்கள் வங்கி இந்து மன்றம் வழங்கும்

யாழ்ப்பாணம்,செப்.20

மக்கள் வங்கியின் 49ஆவது ஆண்டு நிறைவையொட்டி போரினாலும் மற்றும் அனர்த்தங்களினாலும் தமது கால்களை இழந்த 20 பேருக்கு செயற்கைக் கால்களை வழங்கும் நிகழ்வு இன்றுதிங்கட்கிழமை மக்கள் வங்கியின் இந்து மாமன்றத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வு யாழ்.ஜெய்ப்பூர் புனர்வாழ்வு நிலையத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். இதில் மக்கள் வங்கி யின் தலைமையக இந்துமாமன்றத்தின் உப தலைவர், செயலாளர், யாழ்.மாவட்ட மக்கள் வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் பணியாளர்களும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (ஐ-ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த்திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிகழ்வில் வேங்கடேசப் பெருமாள் உள்வீதி வலம் வருவதையும் தேரில் ஆரோகணிப்பதற்கு ஆலய முன் வாசலை வந்தடைவதையும் முதலிரு படங்களிலும் வேங்கடேசப் பெருமாள் தேரில் ஆரோகணித்து வீதியுலா வரும் காட்சியையும் திருவிழாவில் கலந்து கொண்ட பக்தர் கூட்டத்தையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள்: சுகந்தன்)

# நகரில் 22 கடைகள் சுகாதாரமற்றவை மேயர் தலைமையிலான அதிரடியில் சிக்கின



யாழ்ப்பாணம்,செப்.20
யாழ். நகர்ப் பகுதியில் சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்

ன் போது சுகாதாரமற்ற யில் இயங்குகின்ற 22 வர்த்தக யங்கள் கண்டு பிடிக்கப்பட்டு றைத் திருப் திகரமாக யமைக்க உத்தர விடப்பட்டதுடன் ாரச் சீர்கேடு நிறைந்து ப்படும் உணவு நிலையமொன்றை புனரமைக்கும் வரை மூடப் ருக்க வேண்டுமெனவும் கப்பட்டுள்ளது.

தில் 9 வர்த்தக நிலையங் கெதிராக வழக்குத் தாக்கல் ப்பட்டுள்ளது.

ழ். மாநகர முதல்வர் திரு மதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் சுகாதாரப் பிரிவினர், யாழ். பொலிஸ் நிலைய அதிகாரி அபேசிங்க பண்டார ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் கடந்த சனிக்கிழமை இந்தத் திடீர் சோதனை நடவடிக் கைகளில் ஈடுபட்டனர்.

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதி களில் உள்ள உணவகங்கள், மருந்து விற் பனை நிலையங்கள், பலசரக்கு விற்பனை நிலையங்கள் என 96 வர்த்தக நிலையங்கள் இவ்வாறு சோதனைக்குட் படுத்தப்பட்டன.

இதன்போது அங்கு காலாவதியான பொருள்களும் சுகாதார முறையற்ற விதத் தில் உணவுப் பொருள்களும் விற் பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது.

அத்துடன் காலாவதியான உணவுப் பொருள்ளகள் வர்த்தக நிலையங்களிலே வைத்து அழிக்கப்பட்டன. ஏனைய வர்த்தக நிலைய உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர். (ஐ-9-7)

## பரத்தைப்புலம் பிள்ளையார் தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், செப். 20

உரும்பிராய் பரத்தைப்புலம் கருணாக ரப்பிள்ளையார் கோயிலில் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட் டப் பெருவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் புதன்கிழமை தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது.

(தேர் வெள்ளோட்ட சிறப்பிதழ் 15 ஆம் பக்கம்) (ற)

## டிறிபேர்க் கல்லூரிக்கு கனடா வாழ் பழைய மாணவர் உதவி

தென்மராட்சி,செப்.20

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் கல்வி பயிலும் வறிய மாணவர்கள் 4 பேரின் வளர்ச்சிக்காகக் கனடாவில் வசிக்கும் இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் ரூபா 100,000 நிதியினை வழங்கியுள்ள னர் எனப் பாடசாலை அதிபர் க.அருந்தவ பாலன் தெரிவித்தார்.

இந்நிதி வழங்கும் நிகழ்வு இன்று திங் கட்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரி மண் டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வின் போது கல்லூரியின் பழைய மாணவி ஒருவர் கல்லூரிக்கு ஒலிபெருக்கி சாதனங் களை வழங்கவுள்ளார் என்றும் அவர் தெரி வித்தார். (ற-207)

# இரத்தினக்கல் கூட்டுத்தாபனக் கிளைகளை வடக்கு, கிழக்கு பகுதிகளில் திறக்க வலியுறுத்து

யாழ்ப்பாணம்,செப்.20

ஜனாதிபதி மஹிந்த சிந்தனையில் வடக்கு மற்றும் கிழக்கு பொற்றொழிலா ளர்களின் நலன்கள் உள்ளடங்கியிராதது வேதனைக்குரியதாகும். எனவே இரத்தினக் கல் கூட்டுத்தாபனத்தின் கிளைகளை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விஸ்தரிக்க பொற்றொழிலாளர்களின் துயர் துடைக்க அரசும், அமைச்சரும் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கைப் பொற்றொழிலாளர் சமா சத்தினர் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவி ருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவிடம் கையளித்துள்ள மகஜரில் மேற் கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி இலங்கை பொற்றொழிலாளர் சமாசத்தின் பிரதி நிதிகள், அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவை அவரது யாழ். அலுவலகத்தில் சந் தித்து தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்து விளக்கினர். அதனைத் தொடர்ந்து அமைச்சரிடம் மகஜர் கையளிக் கப்பட்டது. அதில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளவை வருமாறு:

இலங்கை பாரம்பரிய கைத்தொழில் களில் முக்கிய முதல்மைத் தொழில் ஆபரணத் தொழிலாகும். அது ஆடம்பரத் தொழிலல்ல- அருங்கலை - தெய்வீகக் கலை- மறைமுகமாக மக்களின் உடல் நோய்களைத் தீர்க்கும் தெய்வீக சக்தி வாய்ந்த தொழில். இத்தொழில் அந்நியர் ஆட்சியில் அரசின் ஆதரவு இன்மையால் அருகி அழிந்து கொண்டிருந்தது. சுதந்திரம் கிடைத்ததும், ஐ.தே கட்சி கலாநிதி மலல சேகரா தலைமையில் ஒரு விசாரணை சபையை நிறுவி அழிந்து போகும் நிலை யிலிருந்த பாரம்பரிய கைத்தொழில்களைப் பாதுகாத்து அவ்விசாரணைச் சபையின் சிபார்சின் படி - பொற்றொழிலாளர்களுக்கு மானிய அடிப்படையில் தங்க விநியோகத்தை அரசு மேற்கொண்டது. இந்த மானிய அடிப் படை தங்க விநியோகம் 1981 ஆம் ஆண்டு ஐ.தேசியக் கட்சியால் நிறுத்தபட்டது. தந்தவனே பறித்துக்கொண்டான்.

ஜனாதிபதி மஹிந்த சிந்தனையில் வடகிழக்குப் பொற்றொழிலாளர்கள் அபி விருத்தி இடம்பெறாதது வேதனையளிக் கின்றது.

சுருங்கக் கூறின் இந்த நாட்டின் கலை கலாசார உற்பத்தியாளரான ஆபரணத் தொழி லாளர்களை இராணுவத்தைப் பாதுகாப்பது போல பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் அரசுக்கு உண்டு.

இந்த வகையில் இரத்தினக்கல் கூட்டுத் தாபனத்தின் கிளைகளை வடகிழக்கு மாகா ணங்களுக்கு விஸ்தரித்து பொற்றொ ழிலாளரின் துயர்துடைக்க அரசும் அமைச் சரும் துரித நடவடிக்கை எடுக்க வேண் டும் என கேட்டுக்கொள்கிறோம்- என்றுள் ளது. (ஐ-14)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# சைவ பரிபாலன சபை பரீட்சையில் சாவகச்சேரி இந்துவுக்கு கூடுதல் பரிசில்கள்

வலி.வடக்கு ,செப்.20

யாழ்ப்பாணம் சைவப் பரிபாலன சபையினர் அகில இலங்கை ரீதியில் நடத்திய சைவநெறி தேர்வுப் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களுக்கான பரி சளிப்பு நிகழ்வு நாவலர் கலாசார மண் டபத்தில் நேற்று காலை இடம்பெற்றது. சாவகச்சேரி இந்து மாணவர்கள் கூடுதல் பரிசில்களைப் பெற்றனர்.

சபையின் தலைவர் சிவநெறிப் புலவர் த.சண்முகலிங்கம் தலைமையில் இடம் பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டார்கள்.

பரிசளிப்பு நிகழ்வில் தரம் 2முதல் 13 வரையான சைவநெறிப் பரீட்சையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர் களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டு தங்கப் பதக்கங்கள் அணிவிக்கப்பட்ட துடன் வகுப்பு ரீதியாகத் தோற்றி குறிப் பிட்ட புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாண வர்களுக்கு ஆறுதல் பரிசில்களும் வழங் கப்பட்டன.

நேற்றைய பரிசளிப்பு நிகழ்வில் சாவகச் சேரி இந்துக் கல்லூரி மாணவர்கள் அதிக எண்ணிக்கையான பரிசில்களை பெற்றுக் கொண்டார்கள். (ஐ-86)

# குடாநாட்டில் மூன்று இடங்களில் மின்திட்டங்கள் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,செப்.20

இலங்கைக்கு மின்சாரத்தை அறிமுகப் படுத்திய டி.ஜே.விமலசுரேந்திரவின் 136 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு ''இலங்கைக்கு ஒளியேற்றுவோம்'' என் னும் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் மின்விநியோகத் திட்டங்கள் புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த வெள் ளிக்கிழமை மேற்படி மின்விநியோகத் திட் டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இதனடிப்படையில் கோப்பாய் கயிட்டப் புல வீதி வரிக்கம்புரை கிராமத்துக்கான மின்விநியோகத்திட்டம் ஆரம்பித்து வைக் கப்பட்டது.

பெயர்ப்பலகையினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் திரைநீக்கம் செய்த துடன் வலி.கிழக்கு பிரதேச செயலர் மோகன்றாஸ், இலங்கை மின்சார சபை யின் வட பிராந்திய பிரதிப்பொதுமுகாமை யாளர் முகாமையாளர் முத்து ரட்ணானந்தம் ஆகியோர் மின் அழுத்திகளை அழுத்தி மின்விநியோகத்திட்டத்தை உத்தியோக பூர்வமாகத் தொடக்கி வைத்தனர்.

இத்திட்டத்தின் மூலம் 66 குடும்பங் கள் பயன்பெறவுள்ளதாகவும் இதற்காக 5.5 மில்லியன் ரூபா செலவிடப்பட் டதாகவும் 2011 ஆம் ஆண்டு நிறைவடை யும் போது குடாநாடு முழுமையிலும் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தாக இருக்கும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இதேபோன்று மறவன்புல வடக்குப் பகுதியிலும் மற்றுமொரு மின்விநியோகத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் பெயர்ப் பலகையினை அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா திரை நீக்கம் செய்து வைத்ததைத் தொடர்ந்து யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார், இலங்கை மின்சார சபையின் வட பிராந் திய பிரதிப் பொதுமுகாமையாளர் பொது முகாமையாளர் முத்துரட்ணானந்தம் ஆகி யோர் மின் அழுத்திகளை அழுத்தி மின் விநி யோகத் திட்டத்தை தொடக்கி வைத்தனர்.

இத்திட்டத்தின் மூலம் 52 குடும்பங்கள் நன்மை அடையும் அதேவேளை இப் புதிய செயற்றிட்டத்திற்காக 11.5 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதாகவும் முத்துரட் ணானந் தம் தெரிவித்தார். இதேபோன்று புங்குடு தீவிலும் புதிய மின்விநியோகத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.(ஐ-207)

## சீரடி சாயிபாபாவின் சத்சரித படனம் வாசிப்பு

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் காலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனம் இடம் பெற்று, காலை 8.45 மணிக்கு போயா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி பஜனை, மங்க ளாராத்தி என்பன இடம்பெற்று மதிய போசனத்துடன் நிறைவடையும்.

அன்று காலை 8.45 மணிக்கு சீரடி சாயிபாபா சத்சரித படன வாசிப்பு ஆரம் பமாகி 28 ஆம் திகதி வரை சீரடி சாயிபாபா அவதாரதின விழாவுடன் சத்சரித படன வாசிப்பு நிறைவடையும். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவையாறு படித்த வாலிபர் திட்ட
விவசாய உற்பத்தி நுகர்ச்சி
கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடம் கோரல்

திருவையாறு படித்த வாலிபர் திட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கத்தினால் கீழ் வரும் பதவி வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி வெற்றிடம்

01. களஞ்சிய முகாமையாளர் (பயிலுநர்)
சம்பளக்குறியீட்டு இலக்கம் 208/16 - $\left(\frac{9200-10650}{70\times10-75\times10}\right)$

அ) கூட்டுறவுப் பணியாளர் 17ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த பதவி நிலை ஒன்றில் இரண்டு வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தரப் பத்திரம் அல்லது கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளிற்கு மேற்படாத சந்தர்ப்பங்களில் எண்கணிதம்/ வர்த்தக கணிதம்/ தூயகணிதம், சிங்களம்/ தமிழ் உட்பட 6 (ஆறு) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2) எழுதுநர் (பயிலுநர்)
சம்பளக்குறியீட்டு இலக்கம் 302/15 - $\left(\frac{9450-11000}{75\times10-80\times10}\right)$

அ) கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் லிகிதர் பதவி ஒன்றில் இரண்டு வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் கணிதம்/ வர்த்தக கணிதம்/ எண்கணிதம், சிங்களம்/ தமிழ் உட்பட 06 (ஆறு) பாடங்களில் இரு அமர்வுகளிற்கு மேற் படாத சந்தர்ப்பங்களில் சித்தியுடன் கூட்டுறவுச் சங்க லிகிதர் பதவி ஒன்றில் ஒரு வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

மேற்படி பதவி வெற்றிடத்துக்கான விண்ணப்பங்கள் யாவும் 30.09.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு தலைவர், திருவையாறு ப.வா.தி விவசாய உற்பத்தி நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பப் படல் வேண்டும் எப்பதவிக்குரிய விண்ணப்பம் என்பது கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் எழுதப்படல் வேண்டும்.

ந.கௌரிதாசன் — ச.தசவரன்
தலைவர். (103528) பொது முகாமையாளர்


# நிபுணர் குழு விசாரணைகளை பின்தள்ளுமாறு பான் கீ - மூனிடம் இந்திய அரசு கோரிக்கை

கொழும்பு, செப். 20

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் நிறுவி உள்ள நிபுணர் குழுவினரின் இலங்கை தொடர்பான விசாரணைகளை, ஆய்வை பின் தள்ளி வைக்குமாறு இந்திய அரசு ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு உத்தியோக பூர்வமற்ற ரீதியில் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

இந்திய அரசினால் விடுக்கப்பட்டுள்ள இக்கோரிக்கையின் பின்புலத்தில் இலங்கையில் பணியாற்றிய இந்திய அமைதிப் படையின் அதிகாரியான சித்தார்த்த சட்டர்ஜி என்பவரே செயற்பட்டுள்ளார் என ராஜதந்திர வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டர்ஜி ஐ.நா. செயலாளர் நாயகத்தின் புதல்வியையே திருமணம் செய்துள்ளார். இவர் இலங்கையின் பயங்கரவாத நடவடிக்கை சம்பந்தமான பல்வேறு காரணிகள், விடயங்களைத் தெளிவுபடுத்தியுள்ளதை அடுத்தே இந்திய அரசு இவ்விதம் பான் கீ- மூனின் நிபுணர்கள் ஆலோசனைக்குழு சம்பந்தமான மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. (ஒ- 22)

# வடமாகாண தமிழ் இலக்கிய விழா கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம், செப்.20

வடமாகாண தமிழ் இலக்கிய விழா தொடர்பான கலந்துரையாடல் நாளை காலை 9 மணியளவில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் விழா ஏற்பாடுகள், நிகழ்ச்சி நிரல் இறுதி செய்தல், விழாவில் பங்குபற்றும் பேராளர்களின் பெயர்களின் இறுதிப் பட்டியல் தயாரித்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படும்.

இந்தக் கலந்துரையாடலில் கல்வித் திணைக்கள உயரதிகாரிகள், கலாசார உத்தியோகத்தர்கள், வேறு திணைக்களங்களைச் சேர்ந்த உயரதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்வரென எதிர்பார்க்கப்படுவதாக யாழ்.மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள் அறிவித்துள்ளார். (ஐ-319)


## ஆட்டுக்கடா விற்பனைக்கு

சினைப்படுத்தலுக்கு/ இறைச்சிக்கு உகந்த
யமுனாப்பாரி இன கடா உடன்
விற்பனைக்குண்டு.
தொடர்பு இலக்கம்: 0776032317 (103544)



## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ.து) தேநீர்ச்சாலை நடத்துவதற்கான விண்ணப்பம் கோரல்

மேற்படி வைத்தியசாலையில் தேநீர்ச்சாலை நடத்துவதற்கான, சுகாதார திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கமைவாக நடத்தக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்க எல்லைப்பரப்புக்கு (உ.அ.அ.பிரிவு- காரை நகர், வலி.மேற்கு, பண்டத்தரிப்பு, சில்லாலை கிராமம் உள்ளடங்கிய பகுதிகள்) உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பப் படிவத்தை மேற்படி வைத்தியசாலையில் பெற்று விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 30.09.2010

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்,
மூளாய், சுழிபுரம். (சி/57024) தலைவர்.


## மரண அறிவித்தல்

### அமரர் கணபதிப்பிள்ளை விசுவலிங்கம்

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை விசுவலிங்கம் 17.09.2010 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான முருகேசு- சவுந்தரப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் கிரிஷாதேவி (கனடா), வாமதேவன் (கனடா), அரிச்சந்திரன் (சுவிஸ்), விநாயகதேவன் (சுவீடன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் திருகைலைநாதன் (கனடா), நித்தியகலா(கனடா), பிறேமலதா (சுவிஸ்), பத்மராணி (சுவீடன்), ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, கந்தையா, பரிமளம் மற்றும் சின்னப்பிள்ளை (கனடா), இரத்தினம் (யாழ்ப்பாணம்), ஆறுமுகம் (கனடா), கோமளம் (கனடா) ஆகியோரின் அருமை மைத்துனரும் மகேஸ்வரி(லண்டன்), காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் தர்மலிங்கம் (வர்த்தகர்-தம்பலகாமம்) காலஞ்சென்ற குமாரசாமி (வர்த்தகர்- யாழ்ப் பாணம்) மற்றும் குமாரசாமி (வர்த்தகர்- மன்னார்), இராசலெட்சுமி (கனடா), காலஞ்சென்ற பாக்கியநாதன் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கனடா. (103542) குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவலைகள்



மண்ணில் மலர்வு 24.09.1961 — இறையுள் நிறைவு 21.08.2010

## ஐயம்பிள்ளை சத்தியமூர்த்தி

(உரிமையாளர் Melodius Music and Speed Cool Services)

ஞாலத்தில் எம்மை நன்றாக வாழவைப்பீர்
நாம் மகிழ்ந்திடலாம் என்றிருந்தோம்
காலத்தின் வயப்பட்டு எம்மைக் கண்ணீர்
சிந்தவைத்து கனதூரம் சென்றதேனோ
ஆலமரமாய் நீயிருக்க விழுதுகளாய் நாம்
என்றும் இருப்போமென்று கனவுகண்டோம்
சீலமதில் வேதனைதான் எஞ்சியதே
நீர் பிரிந்து மாதமும் ஒன்றானதுவே!
எந்தையே இனி உங்கள் சிரித்த முகத்தைக்
காண்பதுதான் எப்போ!

குடும்பத்தினர்.

No.5, சந்தன மாதா கோயில் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (103545)

T.P: 0776013550-0773464358

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர், பிரதியமைச்சர் பதவிகளுக்காக அல்ல; முஸ்லிம்கள் உரிமைக்காகவே மு.க. உருவானது

## அஷ்ரப் நினைவுதின விழாவில் ஹரீஸ் எம்.பி. உரை

மட்டக்களப்பு, செப்.20

அமைச்சராக அல்லது நாடாளுமன்ற உறுப்பினராக வரவேண்டும் என்பதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்படவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மறைந்த எம்.எச்.எம். அஷ்ரப்பின் 10 ஆவது வருட நினைவு தினம் கடந்த வியாழக்கிழமை மாலை கல்முனை ஸாஹிராக் கல்லூரி தேசிய பாடசாலை




திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எச்.எம். எம். ஹரீஸ் இதற்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதில் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அமைச்சுப் பதவிகள் அல்லது பிரதியமைச்சுப் பதவிகள் வேண்டுமென்றால் நாட்டின் தலைவருடன் நாங்கள் நேரடியாகப் பேசியிருக்கலாம். ஆனால் அவ்வாறு நாம் செய்யவில்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் போராளிகள் தன்மானமாக, தைரியமாக, கௌரவமாக உலாவவேண்டும் என்பதற்காக முஸ்லிம் காங்கிரஸாகவே பேசினோம். முஸ்லிம் காங்கிரஸ் உலகம் அழியும்வரை இருக்கவேண்டும். இன்றுவரை அதனைக் கட்சியின் போராளிகள் காப்பாற்றி வருகின்றனர்.

1981ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது. அமைச்சராக அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களாக வரவேண்டும் என்பதற்காகவல்ல. முஸ்லிம்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காகவேயாகும்.

1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலமாக அப்போதிருந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் எம்மைக் காட்டிக் கொடுத்தனர். இப்போது வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. மறைந்த தலைவர் கிழக்கு பிரிய வேண்டும் என்று கூறவில்லை. இணைந்த வடக்கு - கிழக்கில் தென்கிழக்கு முஸ்லிம் அலகு அமையவேண்டும் என்ற கோட்பாட்டுடன் இருந்தார். - என்றார். (ளி)



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம். எச்.எம். அஷ்ரப்பின் 10ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கல்முனை சாஹிராக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பலர் கலந்துகொண்டனர்.

# கல்முனையில் இம்முறை ஒருங்கிணைந்த சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்டம்

## ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்

மட்டக்களப்பு, செப்.20

அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் முதன்முறையாக சர்வதேச சிறுவர் தினத்தை ஒன்றிணைந்து கல்முனையில் கொண்டாடத் திட்டமிட்டுள்ளன. இது தொடர்பான ஆலோ சனைக் கூட்டம் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய காரியாலயத்தில் இணைப்பாளர் எம்.எம். சறூக்கின் தலைமையில் நடைபெற்றது.

பொலிஸ் நிலைய சிறுவர், பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள், சிறுவர் நன்நடத்தை அலகு உத்தியோகத்தர்கள், சட்ட ஆலோசனைக் குழு உயர் அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

இணைப்பாளர் எம்.எம்.சறூக் இதில் உரையாற்றுகையில், கல்முனைப் பிராந்திய காரியாலயத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் 2010 சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்படவுள்ளது என்றார்.

முதன்முறையாக சிறுவர் தொடர்பாகக் கூடுதல் பொறுப்பு வகிக்கும் அரச மற்றும் சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து இருப்பது வரவேற்கக் கூடிய விடயம் என்றும் அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

சர்வதேச சிறுவர் தினத்தைக் கொண்டாடும் முகமாக அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கிடையிலான ஏற்பாட்டுக் குழு ஒன்றும் இதில் உருவாக்கப்பட்டது.

இச் செயற்பாடுகளாக அனைத்துப் பாடசாலைகளிலும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பல்வேறு வடிவங்களில் நடத்தப்படும். இறுதி நிகழ்வு கல்முனைப் பிரதேசத்தில் நடைபெறும் என்றும் இணைப்பாளர் எம்.எம். சறூக் மேலும் தெரிவித்தார். (ளி)

# மட்டு.மாவட்ட அபிவிருத்திக்கு ஒருங்கிணைந்து உழைப்போம்

## கல்குடா நிகழ்ச்சியில் பிரதியமைச்சர் முரளிதரன் உரை

மட்டக்களப்பு, செப்.20

"மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு மாவட்டத்திலுள்ள அனைவரும் உழைக்கவேண்டும். அப்போதுதான் எமது மாவட்டம் வளர்ச்சி கண்ட மாவட்டமாகத் திகழும்" என்று மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

யுத்தப் பாதிப்பால் வெளியேறி மீள்குடியேறியவர்களுக்குக் கட்டப்பட்டு பூர்த்தி செய்யப்படாமல் உள்ள வீடுகளைப் பூர்த்தி செய்வதற்காக மீள் குடியேற்ற அமைச்சினால் வழங்கப்பட்ட காசோலைகளைக் கையளிக்கும் நிகழ்வு கோறளைப்பற்று பிரதேச செயலாளர் எஸ்.கிரிதரன் தலைமையில் கல்குடா நாமகள் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டவை வருமாறு:-

எமது மாவட்டம் யுத்தத்தாலும், இயற்கை அனர்த்தத்தாலும் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டமாகும். அப்பாதிப்பிலிருந்து எமது மாவட்டம் தற்போதுதான் மீண்டு அபிவிருத்தியைக் கண்டு வருகின்றது.

• நாம் பாதிக்கப்பட்ட மக்கள். எனவே எமக்கு அனைத்தும் இலவசமாகவே கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு போதும் நாம் இருந்துவிடக்கூடாது. அவ்வாறு இருப்பது நமக்கு நாமே செய்யும் துரோகமாகும்.- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ளி)

# போதைப் பொருளுடன் இளைஞன் கைது

அவிசாவளை மற்றும் அதற்குட்பட்ட பகுதிகளில் நீண்ட நாள்களாக ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்தார் எனக் கருதப்படும் இளைஞர் ஒருவர் கடந்த புதன்கிழமை போதைப் பொருள்களுடன் அவிசாவளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு போதைப் பொருட்களுடன் கைதுசெய்யப்பட்டவர் அவிசாவளை பிரதேசத்தை சேர்ந்த இந்திக பியந்த என்ற 29 வயதுடைய இளைஞராவார். இவர் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ளி)

# கண்டியில் நான்கு தோட்டங்களை தனியாருக்கு வழங்கத் தீர்மானம்

## தொழிலாளர் வாழ்வாதாரம் கேள்வி; 1000பேர் வேலையிழக்கும் அபாயம்

கண்டி, செப்.20

கண்டி மாவட்டத்தில் நஷ்டத்தில் இயங்குகின்றன எனக் கூறப்பட்டு நான்கு தேயிலைத் தோட்டங்களை முதலீட்டுச் சபை ஊடாக தனியாருக்கு வழங்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தையடுத்து அத் தோட்டங்களில் வாழும் தொழிலாளர்களிடையே பதற்றநிலை காணப்படுகிறது.

இதற்கு எதிராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

'ஜனவசம' நிறுவனத்தின் கீழ் அரச கட்டுப்பாட்டில் இயங்கும் தெல்தொட்ட கிரேட்வெளி தோட்டம் -

அதே நிறுவனத்தின் கீழுள்ள தெல்தொட்ட போப்பிட்டிய தோட்டம் -

மெதகமநுவர பகுதியில் ஸ்ரீலங்கா பெருந்தோட்ட கூட்டுஸ்தாபனத்தின் நிர்வாகத்திலுள்ள எயார்பாக் தோட்டம் -

அதே இடத்திலுள்ள வூட்சைட் தோட்டம் ஆகிய தோட்டங்களே தனியாருக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தோட்டங்கள் நஷ்டத்தில் இயங்குவதால் அவற்றை நிர்வகிக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டே அவை முதலீட்டுச பைக்கு வழங்கப்பட்டுள்ளன.

எனினும், இத்தோட்டங்களில் வேலை செய்துவந்த தொழிலாளர்களின் சேமலாப நிதியம், சேவைக்காலக் கொடுப்பனவு ஆகியவை செலுத்தப்படா மல் நிலுவையாக உள்ளன.

இந்த நிலையிலேயே தோட்டங்களை அரச தோட்ட நிறுவனங்கள் கைமாற்ற முனைகின்றன எனத் தொழிலாளர் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தோட்டங்கள் கைமாறும் பட்சத்தில் சுமார் 1,000 தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம் தோன்றியுள்ளது. தொழிலாளர்களிடையே தமது வாழ்வாதாரம் குறித்துப் பெரும் அச்சம் கிளம்பியுள்ளது. (ளி)




# ருவன்புர மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம்

கடந்த 20 வருடங்களாக குடி தண்ணீர் வசதியின்றிச் சிரமப்பட்ட ஹாரிஸ்பத்து ருவன்புர மக்களுக்கு குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணசபை மேற்கொண்ட 2 ஆவது குடிதண்ணீர் திட்டத்தின் மூலமாக இக்கிராமத்திற்கு தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 438 குடும்பங்கள் பயன்பெறும். (ளி)

# வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டுவரும் பொலிஸாருக்கு மருத்துவ சோதனை

கண்டி,செப். 20

கண்டி போக்குவரத்து பொலிஸார் சுகாதார பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கண்டி மாநகரம் இலங்கையில் அதி கூடிய தூசுநிறைந்த - நச்சு சுற்றாடலைக் கொண்டுள்ளது என பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் நகர வீதிகளில் பணிபுரியும் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவினரின் சுவா சப்பை வியாதிகள் பற்றி ஆராய்வதற்காகவே பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என மத்திய பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்தார்.

இச்சுற்றாடல் நச்சுத்தன்மை குறித்து ஆராய்வதற்காக முதலமைச்சர் தலைமையில் மாநாடு நடத்தப்பட்டு பல்வேறு நிறுவனங்கள் ஆய்வுகளை முன்னெடுத்துள்ளன. அத்துடன் தூசுகளை அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ளி)

# மாத்தளையில் குறைந்த வருமானமுள்ளோரின் வாழ்வாதாரத்தை உயர்த்த 60 கோடி ரூபா ஒதுக்கீடு

மாத்தளை,செப். 20

மாத்தளை மாவட்டத்தில் குறைத்த வருமானம் பெறும் மக்களின் உட்கட்டமைப்புகளை விருத்தி செய்வதற்காக 60 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதி உட்கட்டமைப்பு வீதி அபிவிருத்தி அமைச்சின் ஊடாக ஒதுக்கப்பட்டுள்ளது என மாவட்ட அரச அதிபர் காமினி செனவிரத்ன தெரிவித்தார்.

மாவட்டத்தின் தேசிய கிராமிய அபிவிருத்திக்காக 297 லட்சம் ரூபாவும், ஏனைய 11 உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு தலா 10 லட்சம் ரூபா வீதமும் வழங்கப்படவுள்ளது.

மேலும், மாவட்டத்தை புனரமைத்தல் சம்பந்தமாக விலைமனுக் கோரப்பட்டு சிறு வீதிகள் செப்பனிடுவதற்காக 84 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது என்றும் மாவட்ட அரச அதிபர் காமினி செனவிரட்ண மேலும் தெரிவித்தார். (வ-223)

# கத்திக்குத்தில் உயிரிழந்த யுவதியின் கண்கள் தானம்

கொழும்பு,செப். 20

காதலனின் கத்திக் குத்துக்குப் பலியான இரத்தினபுரி சிறிபாகம பிரதேசவாசியான 15 வயது யுவதியின் இரு கண்களும் தானமாக வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை கண்தானச் சங்கத்துக்கு தனது மகளின் இரு கண்களும் தானமாக வழங்கப்பட்டுள்ளன என மரணமடைந்த யுவதியின் தாயான மல்காந்தி குணவர்தன தெரிவித்துள்ளார்.

பட்டப்பகலில் சிறிபாகம பிரதான வீதியில் தனது தாயின் முன்னால் சமீலா என்ற யுவதி காதலனால் கோரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டதும், சந்தேகநபரான காதலன் கஜபா இரத்தினபுரி பொலிஸில் சரணமடைந்ததும் தெரிந்ததே.

மரணமான யுவதியின் உடலில் 21 கத்தி வெட்டுக் காயங்கள் காணப்பட்டன என சடலப் பரிசோதனையில் கண்டு பிடிக்கப்பட்டிருந்தது. யுவதியின் இரு கண்களும் அவரது பெற்றோரின் சம்மதத்தின் பின் இலங்கை கண் தானச் சங்கத்தின் சார்பில் இரத்தினபுரி [illegible] வைத்தியசாலை நிபுணர்களால் அகற்றப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அழகான உடலைப் பெற...

சொக்லட் மற்றும் வனிலா சுவை கொண்ட வெயிட் கெய்னர், அதில் அடங்கியுள்ள தீவிர செயற்பாட்டுச் சேர்வை மூலம் அவசியமான போஷாக்கை வழங்கி, உங்களது நேர்த்தியான உடல் வளர்ச்சிக்கு உதவும் மெலிந்த தோற்றமுடைய நீங்கள் முற்றிலும் வித்தியாசமான, கவர்ச்சியான உடலழகை பெறுவீர்கள்.

**Hotline 0777 536 796**

Manufactured under licence from Edge USA

EDGE வெயிட் கெய்னர்

## ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 57
திகதி - 18.09.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **P** அதிர்ஷ்ட இலக்கம் **02** வெற்றி இலக்கம் **0 7 6 8 2**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | வெற்றி இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| [illegible] பரிசு | P 02 0 7 6 8 2 | ரூ. 17,924,215.00 | - |
| 1 பரிசு | 02 0 7 6 8 2 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 0 7 6 8 2 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | 7 6 8 2 | ரூ. 10,000.00 | 24 |
| 4 பரிசு | 6 8 2 | ரூ. 1,000.00 | 261 |
| 5 பரிசு | 8 2 | ரூ. 50.00 | 2515 |
| 6 பரிசு | 2 | ரூ. 20.00 | 24288 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | வெற்றி இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசு | 0 7 6 8 | ரூ. 1,000.00 | 24 |
| 8 பரிசு | 0 7 6 | ரூ. 100.00 | 253 |
| 9 பரிசு | 0 7 | ரூ. 50.00 | 2544 |
| 10 பரிசு | P | ரூ. 20.00 | 9965 |
| 11 பரிசு | P 02 | ரூ. 100.00 | 1170 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. **1,905,310.00**

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473560, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ. 18,305,138.00

## சனசமூக நிலையத் தலைவர்களுக்கான அமர்வுக் கூட்டம் சாவகச்சேரியில்

தென்மராட்சி, செப். 20

சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்களுக்கான அமர்வுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறும் என சனசமூக நிலைய சமாசத் தலைவர் செ.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இந்த அமர்விற்கு சனசமூக நிலைய வங்கிப் பதிவுப் புத்தகம், நிர்வாகக் கூட்ட அறிக்கை, பொதுக்கூட்ட அறிக்கை என்பவற்றுடன் சமுகம் தருமாறு அவர் கேட்டுள்ளார். (ற-207)

## சடலங்களைப் பொறுப்பேற்க பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 20

சுழிபுரம் மேற்கு, பொன்னாலையைச் சேர்ந்த இரட்ணம் செல்வராணியின் குழந்தையின் சடலமும். இல. 7, மாக்தயக் கால எனும் இடத்தைச் சேர்ந்த 46 வயதுடைய கே.ஏ.சுனில் ஜெயக்கொடி என்பவரது சடலமும் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி இரு சடலங்களையும் உரித்துடைய உறவினர்கள் மூன்று நாள்களுக்குள் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி என்.பவானி அறிவித்துள்ளார். (ஐ-9)

## மணமக்கள் தேவை

1977 ஆம் ஆண்டு பிறந்த மகம் 4 ஆம் பாதம் உடைய இந்து உயர் கௌரவ குடும்ப போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் டாக்டருக்குப் பட்டதாரி மணமகளும்

1979ஆம் ஆண்டு பிறந்த மிருகசீரிடம் 2 ஆம் பாதம் உடைய இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பங்குச் சந்தை முகவர் கம்பனியில் முகாமையாளராகப் பணிபுரிபவருக்கு அரச தொழில் புரியும் மணமகனும்

1975 ஆம் ஆண்டு பிறந்த உத்தரட்டாதி நட்சத்திரம் உடைய கிரகபாவம் 3¾ உடைய கம்பனி ஏஜென்சிஸ் கணக்கியல் அலுவலகராக பணிபுரிபவருக்கு பொருத்தமான மணமகளும் தேவை.

பொருத்தமானவர்கள் முழுமையான விவரத்துடன் அண்மையில் எடுத்த புகைப் படத்துடன் கீழ்க் காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

தொடர்பு: C/O இல 4075, உதயன் பப்ளிகேசன், இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தின் நாதஸ்வர வித்துவான்

**நல்லரசு இராஜேஸ்வரன் (ராஜன்)**

அவர்களின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அருள்மிகு ஸ்ரீ நரசிம்ம
ஞானவைரவர் தேவஸ்தானம்,
கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு.

(103536)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1226 சிவப்பு

மகரம் **05 10 32 41** 17-09-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 6,013,375/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 234,801 | 20/- | 4,696,020/- |
| 2 இலக்கங்கள் | 21,569 | 40/- | 862,760/- |
| 1 இல. + லக்கினம் | 21,281 | 60/- | 1,276,860/- |
| 2 இல. + லக்கினம் | 1,984 | 200/- | 396,800/- |
| 3 இலக்கங்கள் | 573 | 1000/- | 573,000/- |
| 3 இல. + லக்கினம் | 51 | 10,000/- | 510,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 6,013,375/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,915,440/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 623 | | 610,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 280,885 | | 9,525,440/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 6,538,025/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

மிதுனம் **11 36 39 49**

ஜக்பொட் பரிசு ரூபா. 500,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 620 | 500/- | 310,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 500,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 623 | | 610,000/- |

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 600,000/-

UNION BANK

www.unionb.com

# அச்சுவேலி

எங்கள் குடும்பத்திற்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.



யூனியன் வங்கிக் குடும்பம் மேலும் விரிவடைந்துள்ளது. அச்சுவேலியில் வாழும் எமது சகோதர சகோதரிகளுக்கு எமது இல்லத்தின் கதவுகளைத் திறந்துவிட்டுள்ளோம். சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் தொடர்பாகவும் நுகர்வு வங்கிச் சேவைகள் துறையிலும் நாம் வழங்கும் உன்னதமான நிதித் தீர்வுகள் மற்றும் ஒப்பற்ற வாடிக்கையாளர் சேவைகளைப் பயன்படுத்திச் சுபீட்சம் அடையுங்கள்.

**யூனியன் வங்கியின் அச்சுவேலி கிளை இன்று 2010 செப்டெம்பர் 20ஆம் திகதி சன்னதி வீதி, பத்தமேனி, அச்சுவேலியில் திறந்துவைக்கப்படுகிறது.**

☎ (021) 3 215 447

**தலைமை அலுவலகம்:** 15ஏ, அல்பிரட் பிளேஸ், கொழும்பு 03. தொலைபேசி: (011) 237 0870

கொள்ளுப்பிட்டி | கண்டி | நாவல | வெள்ளவத்தை | புறக்கோட்டை | பழைய சோனகத் தெரு | குருநாகல் | நீர்கொழும்பு | மாத்தறை | கொட்டாஞ்சேனை | ஜா-எல | நுகேகொட | மொறட்டுவை | வென்னப்புவ | யாழ்ப்பாணம் | மன்னார் | வவுனியா | சுன்னாகம் | அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைக்கல் வி.கவின் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

# ஞானரூபனின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க யங்ஹென்றீஸ் இலகுவாக சம்பியனானது

வலி.வடக்கு,செப்.20

ஞானரூபனின் அதிரடியான கோல்களினால் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகம் கரவெட்டி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்திய 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் கரவெட்டி வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகமும் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகமும் மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய ஒரு சில நிமிடங்களில் எதிரணி வீரரைத் தாக்கிய நடவடிக்கைக்காக டயமன்ஸ் விளையாட்டுக்கழக வீரர் மஞ்சள் அட்டை காட்டி மத்தியஸ்தரினால் எச்சரிக்கப்பட்டார்.

இரு அணியினரும் ஒரு அணிக்கு மற்றைய அணி சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் கடுமையாக மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய 12 ஆவது நிமிடத்தில் யங்கென்றீஸ் வீரர் சதீஸ் பின்னணியில் நின்று முன்னிலைக்குச் சென்று பந்தைப்பெற்று முதலாவது கோலை அடித்தார்.

தொடர்ந்து அடுத்த கோலை ஞானரூபன் 16 ஆவது நிமிடத்தில் அடித்து இரண்டாவது கோலையும் பெற்று யங்ஹென்றிஸ் அணி முன்னிலைக்கு வந்தது.

டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி கோல் பெற எடுத்த முயற்சிகள் முதல் 18 நிமிடங்களுக்கு எதிரணியின் கோல் கம்பத்தை நோக்கிக் கூட அடிக்க முடியாது மிகவும் நெருக்கடியை ஹென்றீஸ் அணி வீரர்கள் ஏற்படுத்தினர்.

எனினும் மனம் சோராது தொடர்ந்து விளையாடிய டயமன்ஸ் வீரர்கள் தொடர்ந்து பந்தை எதிரணியினரின் கோல் கம்பத்தை நோக்கிக் கொண்டு வரத் தொடங்கி போட்டியின் முதல் பாதி ஆட்டம் முடிவடைய ஒரு நிமிடம் இருக்கையில் தமது முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டார்கள்.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பிக்கும் போது இரு அணிகளும் புதிய உத்வேகத்துடன் இறங்கி மோதிக்கொண்டதுடன் இரு அணிகளும் மாறி மாறி எதிரணியினரின் கோல் பரப்பை ஆக்கரமித்துக் கோல் பெறும் முயற்சியிலும் ஈடுபட்டார்கள்.

தொடர்ந்து யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழக வீரர் ஞானரூபன் 14 ஆவது 22 நிமிடங்களில் இரண்டு கோல்களைப் பெற்று தமது அணியை பலமான வெற்றிப் பாதைக்குக் கொண்டு சென்றார்.

இறுதிவரை சளைக்காது டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் விளையாடிய போதிலும் மேலும் கோல்களைப் பெறாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகம் 04:01 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றிபெற்று சம்பியனாகியது.

(ஐ-86)

## தாவடி காளியம்பாள் வெற்றி

யாழ்ப்பாணம்,செப்.20

கொக்குவில் வாரகி அணியுடனான ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் அணி வெற்றி பெற்றது.

யாழ். மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் இவ்வாண்டிற்கான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த வியாழக் கிழமை உடுவில் சிந்து விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் வாரகி விளையாட்டுக்கழக அணிமோதியது.

இதில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய கொக்குவில் வாரகி விளையாட்டுக்கழக அணியை 13:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிகொண்டது. (த-23)

## தெல்லிப்பழைக் கோட்டமட்ட உதைபந்தாட்டம்

# கட்டுவன்புலம், வயாவிளான் ம.வித்தியாலயங்கள் அரை இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன

வலி.வடக்கு,செப்.20

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்று வரும் 13 வயதுப் பிரினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கட்டுவன் புலம் ம.வி.,வயாவிளான் ம.வி. ஆகியன அரையிறுதிக்குத் தகுதிபெற்றன.

தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகா வித்தியாலத்திற்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் கட்டுவன்புலம் மகா வித்தியாலயத்தை வெற்றிபெற்று அரையிறுதியில் விளையாடத் தகுதிபெற்றுள்ளது.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திற்கும் இடையே நடைபெற்ற மற்றொரு போட்டியில் அருணோதயாக் கல்லூரி 3:1 என்ற கோல் கணக்கில் வயாவிளான் மத்தி மகா வித்தியாலயத்தை வென்று அரையிறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதிபெற்றுள்ளது. (ஐ-86)

# நூற்றாண்டு விழா கரப்பந்தாட்டம்; கைதடி வளர்மதி கிண்ணம் சுவீகரித்தது

கைதடி,செப்.20

கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தின் நுற்றாண்டு விழாவை முன்னிட்டு கைதடி- நாவற்குழி ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட '' செற்றப்'' கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

மேற்படி சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த 16 ஆம் திகதி பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிச் சுற்றில் கைதடி குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதியது.

ஐந்து சுற்றுக்கள் என நிர்ணயிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்ற போதிலும் நான்கு போட்டிகள் இடம்பெற்று அதில் கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகம் மூன்று போட்டிகளில் வென்று வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி. முத்துலிங்கம் கலந்து கொண்டார்.

மேற்படி போட்டிக்கு நடுவர்களாக யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட நடுவர்களாக சங்கத்தைச் சேர்ந்த வி.அப்புத்துரையும் வை.இராஜேஸ்வரனும் கடமை ஜயாற்றினார்கள்.

(ஐ-288)

## யாழ். மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநராக ஹேரத்

யாழ்ப்பாணம்,செப்.20



இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினரால் யாழ். மாவட்டக் கிரிக் கெட் பயிற்றுநராகப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த லக்சித ஹேரத் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த மாதம் 6 ஆம் திகதியிலிருந்து தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் தற்போது யாழ். மாவட்டத்தின் கிரிக்கெட் அணிகளுக்குப் பயிற்சிவழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார். (த-23)

## 'ஸ்கிறபின்' போட்டி நாளை மகாஜனவில்

யாழ்ப்பாணம்,செப்.20

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவினையொட்டி நாளை செவ்வாய்க்கிழமை முற்கபல் 9.30 மணியளவில் 'ஸ்கிறபின்' விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்றுபவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கல்லூரியின் பிரதி அதிபர் எஸ்.சயந்தன் கேட்டுள்ளார். (ஐ-9)

## தென்மராட்சியில் மென்பந்தாட்டம்

தென்மராட்சி,செப்.20

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி பிரதேச கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியை எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பிக்கவுள்ளனர்.

சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கிரிக்கெட் அணிகள் சாவகச் சேரி கச்சாய் வீதியில் உள்ள த பினான்ஸ் கம்பனி அலுவலகத்தில் கழக விளையாட்டுத்துறைத் தலைவர் லயன் க. தர்சனிடம் விண்ணப்பப்படிவங்களைக் கையளிக் குமாறு கழகத் தலைவர் லயன் தி.முருகதாஸ் அறிவித்துள்ளார். (ஐ-207)




## 15 வயதுப்பிரிவுக்கான துடுப்பாட்டம்:

# 10 ஓட்டங்களால் வென்ற சென்றல் அரையிறுதிக்குள் நுழைந்தது

யாழ்ப்பாணம்,செப்.20

சென். ஜோன்ஸ் கல்லூரியுடன் கால் இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி 10 ஓட்டங்களால் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றது.

யாழ். மாவட்ட பாடசாலை கிரிக்கெட் சங்கம் நடத்திவரும் 15 வயது பிரிவினர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் கால் இறுதியாட்டம் கடந்த வியாழக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இந்த ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 40 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது.

நிருபன் 27 ஓட்டங்களையும் நிரோஷன் 16 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர்களாக கனுசன் எட்டு ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் துசியந்தன் நான்கு ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

110 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி யென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்,ஜோன்ஸ் கல்லூரி அணி 27 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 98 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

துசியந்தன் 23 ஓட்டங்களையும் துவரகசீலன் 23 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி வீரர்களான நிருபன் 10 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களையும் ஜெந்திரன் எட்டு ஓவர்கள் பந்து வீசி 10 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (ஐ-23)





காங்கேசன்துறையில் இராணுவ அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் காங்கேசன்துறையில் புதிதாக அமைக்கப்பட்ட கரப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்றது.

புதிதாக அமைக்கப்பட்ட கரப்பந்தாட்ட மைதானத்தின் தோற்றத்தை முதலாவது படத்திலும் பிரதம விருந்திரனராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவுக்கு வீரர்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுவதினையும் அருகில் கேணல் மகேஸ் அவர்கள் நிற்பதினை இரண்டாவது படத்திலும், காங்கேசன்துறை இராணுவக் கரப்பந்தாட்ட அணி, 52 ஆவது இராணுவப் படைக் கரப்பந்தாட்ட அணி ஆகியன மோதிக்கொள்ளும் காட்சியினை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள் தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2157 திகதி 18-09-2010

ஆங்கில எழுத்திற்கும் P

வெற்றி எண்கள் **21 44 57 65**

போனஸ் இல: **19**

ஜக்பொட் பரிசு ரூ. **14,075,025/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 187423 | 20/- | 3,748,460/- |
| 2 இல | 13436 | 100/- | 1,343,600/- |
| 3 இல | 269 | 1,000/- | 269,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000.000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7751 | 40/- | 310.040/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 588 | 1,000/- | 588,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 14,075,025/- | - |
| 1 இல + போனஸ் இல | 8954 | 100/- | 895,400/- |
| 2 இல + போனஸ் இல | 407 | 500/- | 203.500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 371 | 200/- | 74,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 22 | 1,500/- | 33,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| மொத்தம் | | | 10,135,200/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 219250 | | 10,735,200/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| வவுனியா | 302338030-8-42 |
| கொழும்பு | 302343832-5-25 |
| கொழும்பு | 302347316-9-28 |
| அநுராதபுரம் | 302343236-4-08 |
| கண்டி | 302332493-4-23 |
| பொலன்னறுவை | 302334409-6-17 |
| மாத்தளை | 302332024-6-34 |
| குருநாகல் | 302328899-3-09 |
| இரத்தினபுரி | 302334181-3-44 |
| காலி | 302336235-7-46 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

**ரூ. 14,587,900/-**

ஊதா நிற டிக்கட்டுகள் 2010 செப்டம்பர் 22 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7


## வலி. கிழக்குப் பகுதியில் டெங்கு கட்டுப்பாட்டில்

நாவற்குழி,செப்.20

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் டெங்கு நோய் கட்டுப்பாட்டினுள் வந்துள்ளது.

பிரதேச செயலர் தலைமையில் ஒவ்வொரு புதன்கிழமையும் பிற்பகல் 2.30 மணிக்கு டெங்குதொடர்பான கூட்டம் நடைபெற்று வருகிறது. இதில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பிரதேச சபைச் செயலர், பொலிஸ் நிலையப்பொறுப் பதிகாரி, கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள், வெளிக்கள அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

இக் கூட்டத்தில் டெங்கு தொடர்பாகத் திரட்டப்படும் தகவல்கள் ஆராயப்பட்டு பொருத்தமான திட்ட நடைமுறைப் படுத்தல்கள் செய்யப்படுகின்றன.

இக் குழுவின் வேலைச் செயற்பாட்டினால் டெங்கு மிகப் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக இப் பிரிவின் பொதுமக்களும் கூறுகின்றனர். இப்பிதேச செயலர் பிரிவில் இன்று வரையும் டெங்கு நோயால் இறப்புகள் எதுவும் நிகழாதது குறிப்பிடத் தக்கது. (த-121)

## வாழ்த்துகின்றோம்

வலயக் கல்விப் பணிப்பாளராக
ஆக்கத்துடனும் ஊக்கத்துடனும்
பணி செய்து அச்சிறப்பால்
வடமாகாணக் கல்விப்
பணிப்பாளராக உயர்வு பெற்ற

**திரு.ப.விக்னேஸ்வரன்**

அவர்களைப் பாராட்டுவது
மட்டுமன்றி அவரது புதிய பணி
சிறக்க மனப்பூர்வமாக
வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/வட்டு இந்துக் கல்லூரி.

(சி/571191)




மஹஜன ஸம்பத
மஹஜன சம்பத
Mahajana Sampatha

17.09.2010

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2293

வெற்றி எழுத்து **U** வெற்றி எண்கள் **7 6 6 3 7 0**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | U 7 6 6 3 7 0 | ரூபா. 11,375,305/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 7 6 6 3 7 0 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | 6 6 3 7 0 | ரூபா. 100,000/= | பரிசுகள் 12 |
| 3 பரிசுகள் | 6 3 7 0 | ரூபா. 10,000/= | பரிசுகள் 132 |
| 4 பரிசுகள் | 3 7 0 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1367 |
| 5 பரிசுகள் | 7 0 | ரூபா. 100/= | பரிசுகள் 13560 |
| 6 பரிசுகள் | 0 | ரூபா. 20/= | பரிசுகள் 134917 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 7 6 6 3 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | 7 6 6 3 | ரூபா. 1,000/= | பரிசுகள் 132 |
| 9 பரிசுகள் | 7 6 6 | ரூபா. 100/= | பரிசுகள் 1317 |
| 10 பரிசுகள் | 7 6 | ரூபா. 50/= | பரிசுகள் 13574 |
| 11 பரிசுகள் | U | ரூபா. 20/= | பரிசுகள் 53943 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
**Rs. 12,092,600.00**

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 2470662, 4607000, Hotline 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk



# பிரவுண்ஸ் வழங்கும் பிரமாதமான சலுகை

**SHARP**
AR 5516 கொப்பியர் இனை

**ரூபா.99,000/-**
+VAT 12% இற்கு வாங்கி

இலவசமாக
**SHARP**
GQ72 தொலைநகல்



அல்லது
இலவசமாக
**20,000**
பிரதிகளை
பெற்றுக்
கொள்ளவும்



62/16,
டிஜிட்டல்
இலெக்ட்ரோனிக்ஸ்
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

என்ற முகவரியில் பெற்று
கொள்ளமுடியும்

உதிரிப்பாகங்களுக்கு
**10%**
கழிவு

இச்சலுகை 2010 அக்டோபர்
15ம் திகதி வரை மட்டுமே

Browns Service

இலவச சேவை பிரசாரம் 2010
செப்டெம்பர் 23-24 ம் திகதி
வரை நடைபெறும்

நகல் எடுப்பான், தொலை நகல்,
கேஷ் ரெஜிஸ்டர், நோட் கவுண்டர்
மல்டி மீடியா ப்ரொஜெக்டர்

481,
டீ.பி. ஜயா மாவத்தை
கொழும்பு

**Browns**

சேவை அழைப்பு: 0772 078 636 / 021 222 40 40


# மரண அறிவித்தல்



## செல்லப்பா கந்தையா
### (ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கந்தையா (17.09.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும் பாஸ்கரன், பிரபாகரன், சுதாகரன், மீனலோஜினி, கிருபாகரன், கிருஸ்ணவேணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், இராசம்மா மற்றும் பொன்னையா, நாகம்மா, செல்லத்துரை (அப்போதிக்கரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மாலா, அருள்நாயகி, கலையரசி, முருகரத்தினம், ஜெயதீபா, பார்த்தீபன் ஆகியோரின் அன்பு மாமனும் அபிமன்யு, அபிவர்மன், கரிகரன், சங்கரி, கரிசங்கர், சாரங்கன், சாரங்கா, பைரவி, கஜானன், அச்சுதன், கிருத்திகா, ஆர்த்திகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2010) திங்கட்கிழமை பிற்பகல் 1மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல்:
க.சுதாகரன் (மகன்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிக்குப் பின்னால்

கையில் என்ன பொட்டலம்? மல்லிகைப்பூ, மனைவிக்கு வாங்கிக் கொண்டு போகிறேன்?

அவ்வளவு பிரியமா?

ஆமாம் என்னுடைய வெற்றிக்கெல்லாம் காரணம் அவள் தான்.

உங்கள் வெற்றிக்கு மட்டுமா? அமெரிக்கா ஜனாதிபதியாக இருந்தவர் ஆன்ட்ரூ ஜாக்சன் கல்யாணத்துக்கு முன்னால் அவருக்கு எழுதப்படிக்கத் தெரியாது. அவருக்குப் படிக்கச் சொல்லிக் கொடுத்து அமெரிக்க ஜனாதிபதியாகக்கூடிய தகுதியை ஏற்படுத்திக் கொடுத்தவர் அவருடைய மனைவிதான்.

அப்படியா?

மோட்டார் மன்னர் ஹென்றி போர்டு தெரியுமா? அவருடைய ஆராய்ச்சியில் அவர் தோல்வி கண்டு வரும்போது எல்லோரும் அவரைப் பைத்தியம் என்று கேலி செய்வார்கள்? அந்தச் சமயத்தில் அவரது மனைவிதான் அவருக்கு உற்சாகம் ஊட்டினார்கள். அதனால்தான் கடைசியில் அவர் மோட்டார் காரைக் கண்டுபிடித்தார்.

பார்த்தீர்களா?

ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள் என்று சொல்வது சரிதானே.

சரி இப்போது நீங்க அடைந்த வெற்றி என்ன?

அருமையாக ஒரு நாவல் எழுதி முடித்து விட்டேன்.

இதுக்கு உங்க மனைவி ரொம்ப உதவியாக இருந்தாரா?

ஆமாம்!

எப்படி?

அதைநான் எழுதி முடிக்கும் வரைக்கும் அவள் தனது அம்மா வீட்டில் போய் இருந்தாள்.

நன்றி: கோ.சுவாமிநாதன்.

# மனிதனின் மகத்துவம்

யூதேயா மலைப்பகுதியில் ஒரு பெரிய கூட்டத்தில் யேசுநாதர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது பிரம்மாண்டமான துலாக்கோல் ஒன்றை அங்குள்ள மக்களுக்குக் காட்டுகிறார். அது மாதிரி ஒரு தராசை அந்த மக்கள் முன்னப் பின்னப் பார்த்தது இல்லை. அவ்வளவு பெரிய தராசு. இந்த உலகத்தில் உள்ள எல்லாத்தையும் அந்தத் தராசிலே வைத்து எடைபோட்டார்.

அந்தத் தராசிலே ஒரு பக்கத்துத் தட்டில் யூதேயா கண்ணுக்குத் தெரிந்த அத்தனை பொருள்களையும் எடுத்து வைக்கிறார்.

இன்னொரு தட்டில் வைப்பதற்கு மீதி எதுவும் இல்லை என்று மக்கள் பேசிக் கொண்டு நின்றார்கள். அவ்வளவு பொருள்களையும் ஈடு கட்டுவதற்குப் பக்கத்துத் தட்டில் என்ன வைக்கலாம் எனக் காத்துக் கொண்டு நின்றார்கள்.

யேசுநாதர் சுற்றும் முற்றும் பார்க்கிறார். அங்கே பக்கத்தில் இருந்த சின்னக் குழந்தையைத் தூக்கித் தட்டில் வைத்தபோது பொருள்கள் வைத்த தட்டு மேலே எழும்ப ஆரம்பித்தது.

எல்லோருக்கும் ஒன்றும் புரியாமல் யேசுவைப் பார்த்தார்கள். அதற்கு அவர் இந்த உலகத்தில் உள்ள அனைத்தையும் விட உயர்ந்தது மனிதனின் ஆன்மா எனக் கூறினார்.

மனித இனத்தை மனிதன் முழுசாகப் புரிந்து கொள்ளவில்லை அது தான் காரணம்.

நன்றி: தென்கச்சி சுவாமிநாதன்.

# மனிதன் ஒரு ஜடப் பொருள்

உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களையும் ஜடப்பொருள், உயிர்பொருள், என்று இரண்டாகப் பிரிப்பது வழக்கம். கல்வீடு, மண், கார் இவையெல்லாமே ஜடப்பொருள்கள். ஆடு மாடு, மனிதர் எல்லாமே உயிர்ப் பொருள்கள். உயிர் பொருள்கள் என்கிற வார்த்தைப் பயன்பாடு கூட உயர்வானதாகத் தெரியவில்லை என்றாலும் உலகில் அப்படி ஒரு வழக்கம் வந்துவிட்டது. உயிர் அற்ற ஜடம் என்கிற இரண்டு பிரிவுகள் உலகில் இப்போது நிலவுகின்றன.

காரில் பயணமாகிற போது கார் கவிழ்ந்து விட்டது என்று யாரும் சொன்னால் ''யாருக்கும் அடிபடவில்லையே... நல்லவேளை'' என்று கேட்போம். காருக்கு அடிபட்டாலும் பரவாயில்லை அது ஜடம். காருக்குள் இருப்பது உயிர். வலி, துன்பம், துயரம் ஜடத்திற்கு இல்லை ஆனால் உயிருக்கு உண்டு. எனவே ஜடப்பொருள்களை விட உயிர் முக்கியம் என்பதே நீண்ட நாள் தீர்மானம்.

உயிரினத்திலும் கூட சில உயர்வு தாழ்வுகள் வைத்திருக்கிறோம் எப்படி? கார் போகிற போது ஒரு மூன்று வயதுக்குழந்தை குறுக்கே வந்து விட்டது என்று வைத்துக் கொள்வோம். குழந்தையைக் காப்பாற்றும் முயற்சியில் காரை சற்று இடது புறம் ஒட்டிச் செல்வது சாரதியின் சாதுர்யம். ஆனால் விலையுயர்ந்த கார் அடிபடாமல் தப்பிக்க குழந்தை மேல் ஏற்றி இறக்க இன்றைய மேல்தட்டு மக்கள் தயாராகி விட்டனர். ஒரு ஜடப் பொருளாகவே தன் சக மனிதனைப் பயன்படுத்தும் கொடுமையில் இருந்து சமூகம் மீள வேண்டாமா?

இப்படியான ஆராய்ச்சிக்கு பிறகு ஒரு துக்கமான விஷயம் சொல்ல வேண்டி இருக்கிறது. இன்றைக்கு மனிதர்கள் பலர் பிற மனிதர்களை உயிர்ப் பொருளாக நினைக்கிறார்களா? ஜடப் பொருள்களாக நடத்துகிறார்களா என்பதைப் பரிசீலனை செய்தால் பகிர் என்று தோன்றுகிறது.

நன்றி: சுகி.சிவம்.

# சிரிப்போம் சிந்திப்போம்



* நாம் விருந்துக்குப் போகும் போது உடுத்த வேண்டிய உடைகளில் ஒன்று நகைச்சுவை உணர்வு

தாக்கரே

* துன்பம் வந்தாலும் தாக்காத வண்ணம் பாதுகாத்து கொள்ள நகைச்சுவை உணர்ச்சி போல் பயன் தருவது வேறு கிடையாது.

ஹிக்கின்சன்

* அகங்காரத்தின் ஒரு பகுதியே இறுக்கம். ஆனால் சிரித்தல் அகங்கார மற்ற தன்மையில் செயல்படுகிறது.

ஓஷோ

* நீங்கள் கழுதை சிரித்ததைப் பார்த்திருக்கிறீர்களா? உயிரினங்களில் ஒரு 'ஜோக்' கை ஒரு எருமை ரசித்ததைப் பார்த்திருக்கிறீர்களா? உயிரினங்களில் மனிதன் ஒருவனுக்குத் தான் 'ஜோக்' கை ரசிக்க முடியும்.

ஓஷோ

* '' உங்களுக்கு நகைச்சுவை உணர்ச்சி இல்லாவிட்டால் நீங்கள் உங்கள் வாழ்க்கையில் அனேக உன்னதங்களையும் அற்புதங்களையும் இழந்து விடுவீர்கள்.

காந்தி

* புத்திசாலித்தனமும் அறிவுக் கூர்மையும் உள்ளவர்களால்தான் சிரிக்க முடியும். அவர்களுக்குத்தான் நகைச்சுவை உணர்வு அதிகம்.

அறிஞன்

* என்னை பொறுத்தவரை பிரார்த்தனை என்பது ஒரு புனிதமான பிரார்த்தனைக்குச் சமன்.

ஓஷோ

* நகைச்சுவை உணர்வு மிகுந்த அனைவரும் அன்பு மிகுந்தவர்கள் என்பதை அனுபவத்தில் அறிவேன்.

அடிசன்

* ஒருமுறை கூடச் சிரிக்காமல் கழித்த நாளே வீணாகக் கழித்த நாளாகும்.

சாம்போர்டு

* உடல் நலத்திற்கு விற்றமின்கள் அவசியம். அது போல உடல் நலத்திற்கு மனித நலத்திற்கும் சேர்த்து ஒரு விற்றமின் தேவைப்படுகிறது... அதன் பெயர் சிரிப்பு.


அறிஞன்

* ஒரு நகைச்சுவையைச் சொன்னால் மக்கள் மூன்று விதமாகச் சிரிக்கின்றனர். அதன் நுட்பத்தைப் புரிந்து கொண்டு உடனே சிரிப்பவர்கள் ஒரு வகை. சிரிப்பவர்களைப் பார்த்துச் சிரிப்பவர்கள் இரண்டாவது வகை. புரிந்து கொள்ளாமையால் சிரிப்பவர்கள் மூன்றாவது வகை.

ஓஷோ

தொகுப்பு: பு.தட்சிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஃபுபே செட்

வீட்டுக்கும் மற்றும் ஹோட்டலுக்கு

ரூபா 3950/-யிலிருந்து

**டைடஸ் ஸ்டோர்ஸ்**

புறக்கோட்டை,லிபர்டி பிளாஸா

2439422

## மோட்டார் வாகனம் விற்பனைக்கு

ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்தரமுடைய சுசுகி சுவிப்ட் ரக பதிவு செய்யப்படாத மோட்டார் வாகனம் உடனடி விற்பனைக்கு உண்டு.

**LYNMARUM TOURS**

இலக்கம் 72,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்திலுள்ள காட்சியறையில் பார்வையிட இயலும்.

தொடர்புகளுக்கு:
0215670999/0717999991

## விஞ்ஞான சங்கத்தின் கருத்தரங்கு இன்று

யாழ்.விஞ்ஞான சங்கத்தின் "ஏ" பிரிவின் அனுசரணையுடன் "பிரபஞ்சத்தின் அடிப்படைக் கட்டமைப்புகள்' எனும் கருப்பொருளிலான இலவசக் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் யாழ்.பௌதிக வியல்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் றுகுணு பல்கலைக்கழக பௌதிக வியல்துறைப் பேராசிரியர் டி.தர்மரட்ண கருத்துரை வழங்கவுள்ளார். ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் கலாநிதி குகமூர்த்திவேலாயுதமூர்த்தி கேட்டுள்ளார். (ஐ-9)

## தேவை

02அல்லது 03 அறைகொண்ட வீடு, யாழ்.நகர, பல்கலைக்கழக, திருநெல்வேலி, நல்லூர் பிரதேசங்களில் பிரதான வீதிகளை அண்டியதாக அலுவலகம் அமைக்கத் தேவை.

மற்றும்

- IELTS கற்பிப்பதற்கான ஆசிரியரும்
- அலுவலக வரவேற்பாளர் (Receptionist) (பெண்) ஆகியோரும் தேவை.

தொடர்பு:- 0777497979
manager@sec.edu.lk

## மணமகள் தேவை

சங்கானையைச் சேர்ந்த கனடாவில் வசிக்கும் யாழ்.இந்து கௌரவ குடும்ப 40 வயது மணமகனுக்கு 27-34 வயதிற்குட்பட்ட அழகான மணமகள் தேவை. தாரமிழந்தோரும் ஏற்றுக்கொள்ளப்படும். சீதனம் எதிர்பார்க்கப் படமாட்டாது.

தொடர்பு: தொ.பே: 0775925397

## சாவகச்சேரி நகர அபிவிருத்திக் கூட்டம்

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி மறுசீரமைப்புக் குழு, நகர அபிவிருத்தி ஆலோசனைக் குழு ஆகியவற்றின் கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறுமென நகரசபைச் செயலாளர் செல்வி வீ.சிவக்கொழுந்து அறிவித்துள்ளார். (ஐ-207)

## அதிக லாபம் ஈட்ட வேண்டுமா!

உலகத்தரம் வாய்ந்த அழகுசாதனப் பொருள்களை விற்பனை செய்யும் கம்பனியில் அழகு சாதனப் பொருள்களை நம்ப முடியாத விலைக் கழிவில் பெறுவதோடு, விலைகூடிய பொருள்களைக் குறைந்த விலையில் பெறலாம்.

அத்துடன்நீங்களும்உங்கள்நண்பர்களும் சேர்ந்து இக்கம்பனியில் பொருள்களை வாங்கும்போது உங்கள் வங்கி மீதி அதிகரிக்கும்.

தொடர்புகளுக்கு:- 0789131054
B.கீர்த்தனன்.

## தொடர்பு கொள்ளவும்

கிளி/ஸ்கந்தபுரம் இல.01, அ.த.க.பாடசாலையில் 2008, 2009 ஆம் ஆண்டுகளில் தரம்-05 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்த மாணவர்களும், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களும் 23.09.2010 வியாழக்கிழமைக்கு முன்னர் பாடசாலையுடன் தொடர்பு கொள்ளுமாறு முதல்வர் திருமதி வ.விமலேஸ்வரன் அறியத்தந்துள்ளார். (2009இல் தோற்றிச் சித்தியடைந்த மாணவர்கள் தங்கள் புகைப்படங்களை ஒப்படைக்கவும்).

தொ.பே: 0213208352 அதிபர்.




## உன்னத சேவைக்காக இணைந்துள்ள குழுவினர்

சங்கானை மக்களே, இன்று முதல் உங்கள் சகல வங்கி அலுவல்களையும் கவனிக்கவிருக்கும் இந்த வெற்றி அணிக்கு நல்வரவு கூறுங்கள்.

இன்று திறந்துவைக்கப்படும் எமது 194ஆவது வாடிக்கையாளர் நிலையத்தின் அச்சாணியாக விளங்கும் இத் தொழில் நிபுணர்கள் உங்களுக்கு அதிசிறந்த வங்கிச் சேவைகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவார்கள்.

HNB சங்கானை, இல.146, பிரதான வீதி, சங்கானை.
எமது வங்கிச் சேவைகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:
021-4920297 அல்லது 021-2250065

HNB

HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

SAATCHI & SAATCHI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உரும்பிராய் - பரத்தைப்புலம்

# கருணாகரப் பிள்ளையார் தேவஸ்தானம்

# புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டப் பெருவிழா

## சிறப்பு மலர் 20.09.2010



### தேவஸ்தான முதல்வரின் ஆசியுரை



சைவசமய கோட்பாட்டின்படி ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளைக் கடவுள் என்று போற்றுகிறோம். இப்போற்றுதலில் முதல் போற்றுதற்குரியவர் விநாயகப் பெருமான். யார் எந்தக் கருமத்தைச் செய்யப் புகுந்தாலும் முதல் வழிபாட்டிற்கும் பூஜைக்கும் உரிய விநாயகப் பெருமானை வேண்டுதல் செய்வது நமது சமய மரபாகும். அந்த வகையில் எமது முற்சந்ததியினரான ஸ்ரீகருணாகர ஐயர் (குருக்கள்) அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஆலயமே உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயிலாகும். ஆலய ஆதீன அந்தணர் பரம்பரையினரும் திருப்பணிச் சபையினரும் அடியார்களும் சேர்ந்து திருப்பணிகள், உபயங்களை நடத்தி இன்று ஆலயம் சிறப்பாக விளங்குகின்றது. இராஜகோபுரம், மணிமண்டபம் ஆகியவற்றுடன் இன்று கம்பீரமாகக் காட்சியளிக்கும் இந்த ஆலயத்திற்கு ஒரு புதிய சித்திரத்தேர் செய்ய வேண்டும் என்று விரும்பி அதற்கு முதல் நிதியையும் வழங்கி ஆரம்பித்தவர் அமரர் திரு. மார்க்கண்டு செல்லத்துரை (மலேசியா) ஆவார். அவரது குடும்பத்தினர் மூலமாகக் கொடுக்கப்பட்ட நிதியை ஆரம்பமாகக் கொண்டு திருப்பணிச் சபையினரின் பெரும் முயற்சியினாலும் மற்றும் உள்ளூர்களிலும் வெளியூர்களிலும் உள்ள கருணாகரப் பெருமானுடைய அடியார்களுடைய நிதியுதவிகளினாலும் உருவாக்கப்பட்ட புதிய சித்திரத்தேர் இன்று வெள்ளோட்டம் காண்பது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இப்பணிக்காக அல்லும் பகலும் அயராது பணியாற்றிய திருப்பணிச் சபையாரின் நன்முயற்சி மிகவும் பாராட்டுதற்குரியது. நமது ஆலயத்திற்கு அழகுமிகு சித்திரத்தேரினை தமது கலைத்திறமையினால் உருவாக்கிக் கொடுத்த சிற்ப கலாமணி திரு.சி. அமரசிங்கம்ஆச்சாரியார் அவர்களையும் பாராட்டுவதுடன் அவர்களது கலைப்பணி மேன்மேலும் ஓங்கி உயர்ந்து வளர்ந்து பெருக வேண்டும் என்றும் ஆசீர்வதிக்கிறேன். இன்று (20.09.2010) திங்கட்கிழமை நடைபெறும் வெள்ளோட்ட விழாவினைத் தொடர்ந்து 22.09.2010 புதன்கிழமை கருணாகரப் பெருமான் புதிய சித்திரத் தேரில் பவனி வந்து அடியார்களுக்கு திருவருட்காட்சி கொடுத்தருளுவார். இன்று நடைபெறும் வெள்ளோட்டவிழா இனிது நிறைவெய்தவும் இவ்விழாவினையொட்டி வெளிவரும் 'வெள்ளோட்ட விழா மலர்' என்றும் நறுமணம் வீசும் நன்மலராக மணம் வீசவும், கருணாகரப் பெருமானுடைய திருவருட் காட்சி மூலம் அடியார்கள் சகல நலன்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழவேண்டும் எனவும் கருணாகரப்பெருமான் பாதம் பணிந்து ஆசீர்வதிக்கிறோம்.

சிவஸ்ரீ.வைத்தீஸ்வர சபாரத்தினக் குருக்கள்.
தேவஸ்தான முதல்வர், சிவாச்சாரிய மணி

### கருணாகரன் பாதம் கனவிலும் துணைசெய்யும்



உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயில் இலங்கையில் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாக விளங்குகின்றது. ஓங்காரமூர்த்தி ஆகிய பிள்ளையாரின் திருவடிகளை மனதிலே நினைத்தால் தொல்லை, துன்பம், துயரம் முதலானவை நீங்கப் பெற்று நல்வாழ்வைப் பெறமுடியும். கருணாகரப்பிள்ளையாரை வழிபடுகிறவர்கள் வாழ்க்கையில் சகல செல்வங்களையும் பெற்று நற்கதி அடைவார்கள். இதனாலேயே ''கருணாகரன் பாதம் கனவிலும் துணைசெய்யும்'' என்று பெரியோர்கள் கூறுவார்கள்.

இத்துணை பெருமை வாய்ந்த இவ் ஆலயத்தில் நடைபெறும் மகோற்சவத்தின்போது கருணாகரப்பெருமான் கட்டுத் தேரில் வாழை, கமுகு, நுங்கு, கரும்பு, இளநீர் தொங்க மாலைப் பொழுதினில் பிரபல நாதஸ்வர, தவில் சமாவின் மத்தியில் திருவீதி வருவது தனியழகு. காலத்தின் மாறுதலுக்கேற்ப 2005 இல் கருணாகரப் பெருமானுக்கு ஒரு புதிய சித்திரத் தேரை உருவாக்கத் திருப்பணிச்சபையின் அன்றைய செயலாளர் ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்களால் அராலியூர் ஸ்தபதி சி. அமரசிங்கம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. தேர் வேலையை ஆரம்பிக்க மலேசியா வாழ் மார்க்கண்டு செல்லத்துரை அவர்கள் தமது குடும்பத்தின் சார்பாக ஆரம்ப நிதியை வழங்கியிருந்தார். இவ்வேலைகள் தொடர்ந்து இரவுபகல் பாராது நடைபெற்று வந்ததுடன் உள்ளூர் சிற்ப வல்லுனர்களும், தென்னிந்திய சிற்பக் கலைஞர்களும் பங்கு கொண்டு சிற்பங்களை அமைத்துள்ளனர். தற்போது இச்சிற்பங்கள் தேரினில் சித்திரம் பேசுகின்றன.

கருணாகரப் பெருமானின் திருவருளால் இன்று புதிய சித்திரத் தேர் சிறப்புற அமைந்துள்ளது. இப்பணியை நிறைவேற்ற ஒத்துழைத்த ஸ்தபதி சி. அமரசிங்கத்திற்கும் அவரது குழுவினருக்கும், வர்ண வேலைகளை அழகுறத் தீட்டிய குழுவினர்க்கும் இப்பணியில் ஈடுபட்ட அனைத்துத் தரப்பினருக்கும், வெள்ளோட்டமலர் வெளியீட்டிற்கு உதவியவர்கள், நிதிஉதவிய கருணாகரன் அடியார்கள் யாவருக்கும் எல்லாம் வல்ல கருணாகரப் பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

''கருணாகரன் பாதம் கனவிலும் துணை செய்யும்''

அ. ஈஸ்வரநாதன்,
செயலாளர், திருப்பணிச்சபை, உரும்பிராய்.

### மகோற்சவ குருவின் ஆசியுரை



*'ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை
பொன்னம்பலவன் ஞான குரு வாணி பதம் நாடு'*

எமது குல தெய்வமாகிய உரும்பிராய் பரத்தைப்புலம் ஸ்ரீகருணாகரப் பிள்ளையார் கோயில் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவும் ரதப்பிரதிஷ்டையும் இன்று (20.09.2010) திங்கட்கிழமை நடைபெறுவது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

சகல காரிய சித்திகளுக்கும் எல்லோராலும் எப்பொழுதும் போற்றப்படுபவர் விநாயகப் பெருமான். தம்மை மெய்யன்போடு வழிபடும் அடியார்களது துயர் களைந்து விக்கினங்கள் நீக்கி கனவிலும் துணைபுரிபவர். அருள் மிகு கருணகரப்பெருமானுக்கு திருப்பணிச் சபையினரின் பெரும் முயற்சியினாலும் அடியார்களுடைய மனமுவந்த நிதியுதவிகளினாலும் உருவாக்கப்பட்ட புதிய சித்திரத்தேரினை அழகாக உருவாக்கிய சிற்பக் கலாமணி திரு.சி.அமரசிங்கம் ஆச்சாரியார் அவர்கள் பாராட்டுக்குரியவர்.

கருணாகரப் பெருமான் புதிய சித்திரத் தேரில் ஆரோகணித்து அடியார்கள் குறைதீர்த்து கருணை மழை பொழிந்தருளவும், புதிய சித்திரத்தேர் பணிகளில் ஈடுபட்ட திருப்பணிச் சபையினர், நிதியுதவிய அன்பர்கள் - மற்றும் சகல அடியார்களுக்கும் எல்லாம் வல்ல சர்வ விக்ன நிவாரக ஓங்காரரூப கருணாகரப் பெருமானுடைய திருவருள் என்றென்றும் நிறைவாகக் கிடைத்து குறைவின்றி வாழ அருள் புரிய வேண்டும் என்றும், வெள்ளோட்டவிழா இனிது சிறந்து நடைபெறவும், கருணா மூர்த்தியாகிய கருணாகரப் பெருமானது திருவடித் தாமரைகளைப் பூஜித்து போற்றி எமது நல்லாசிகளை நல்குவோமாக!

சுபமஸ்து

சிவஸ்ரீ. சபாரத்தின பரமேஸ்வரக்குருக்கள்,
மகோற்சவ சிவாகம கிரியா பூஷணம், சிவாகம கிரியா தத்துவ நிதி பிரதிஷ்டா கிரியா சிரோமணி .

### கருணாகரப் பிள்ளையார் பாதம் பணிவோம்



எமக்கெல்லாம் பெருவாழ்வு அளித்த வடக்கு இலங்கைத் தாழ்வு முருகன் இற்றைக்கு 34 வருடங்களுக்கு முன்பு எம்மை சிற்பக்கலையில் காலூன்றச் செய்து அருள் வழி காட்டினார். உரும்பிராய் நகரில் எம்மைத் தேர்த் திருப்பணியில் அறிமுகப்படுத்திய பர்வதபத்தினி அம்பாளும் கருணை கூர்ந்தார். பின்பு கருணாக்ரப் பிள்ளையாரின் துணையினால் தேர்த்திருப்பணி செய்யும் வாய்ப்பும் கிடைத்தது. இதற்கு அமரத்துவம் அடைந்த ஆசிரியமணி பஞ்சாட்சரம் அவர்களும், அவருக்கு உறுணையாக இருந்த திரு. சண்முகநாதன் அவர்களும் என்னிடம் பலமுறை வந்து இப்பணியை ஏற்குமாறு கேட்டதற்கிணங்க இப்பணியை ஏற்றுக்கொண்டு செயற்பட்ட வேளையில் பெரும்பான்மையான வேலைகள் நிறைவடைந்த நிலையில் ஆசிரியமணியின் எதிர்பாராத மறைவின் பின்னர் சிறிது காலம் திருப்பணிகள் நடைபெறவில்லை. மேற்படி திருப்பணியைத் தொடர்வதற்காக அவரது வழித்தோன்றலும் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் அதிபருமாகிய திரு. அ. ஈஸ்வரநாதன் அவர்களும், எமது கிராமத்தில் சில ஆண்டுகள் கிராம உத்தியோகத்தராக இருந்த திரு. கனக நாயகம் அவர்களும் என்னுடன் தொடர்பு கொண்டு திருப்பணியைத் தொடர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ததன் பொருட்டு என்னாலான அளவில் என்னுடைய குழுவினரின் ஆதரவுடன் சிறப்புடன் நிறைவு பெற்றுள்ள இச்சித்திரத்தேர் வெள்ளோட்டம் காணுகின்ற 20.09.2010 ஆகிய இன்றைய திருநாளில் இத்திருப்பணியில் பங்குபற்றியோர்க்கும், உரும்பிராய் வாழ் மக்களுக்கும், எமது குழுவினருக்கும் எல்லாம் வல்ல கருணாகரப் பிள்ளையாரின் அருள் கிடைத்து சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்தி அமைகின்றேன்.

ஸ்தபதி விஸ்வப்பிரமஸ்ரீ சி. அமரசிங்கம் ஆச்சாரியார்,
அராலி.

### விநாயகருடைய அருள்கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்



உரும்பிராய் கருணாகரப்பிள்ளையாருக்கு புதிதாக அமைக்கப்பட்ட திருத்தேர் வெள்ளோட்ட விழா இன்று நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். பழம் பெருமை வாய்ந்த இவ்வாலயம் உரும்பிராய் மக்களின் தனித்துவத்தைப் பேணுவதாக விளங்குகிறது. வேண்டுபவர் வேண்டுவதை ஈயும் பொருட்டு எல்லாலவற்றுக்கும் காரண காரியராக விளங்கும் விநாயகப் பெருமான் கருணாகர விநாயகராக இவ்வாலயத்தில் எழுந்தருளி உள்ளார். ஆலய விழாக்கள் இறைவனுடைய செயற்பாட்டை நமக்கு உணர்த்துகின்றன. இவ்வகையில் தேர்த்திருவிழா பல சிறப்புக்களை நமக்கு எடுத்து இயம்புகின்றது. இதனை அனைவரும் உணர்ந்து கொள்ளும் வகையில் சிற்பக் கலைஞன் திரு. அமரசிங்கம் அவர்களினால் சித்திர வேலைப்பாடுடன் கூடிய தேர் இன்று உருவாக்கப்பட்டிருப்பது இவ் ஆலயத்துக்கும் இவ் ஊருக்கும் பெருமை தருவதாகும். இப்புண்ணிய காரியத்தை நிறைவேற்றிய திருப்பணிச் சபையினரையும் ஊர் மக்களையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம். அனைத்தும் சிறப்பாக நடைபெற்று எல்லோருக்கும் விநாயகருடைய அருள்கிட்டப் பிரார்த்திக்கிறோம். வாழ்க கலை! வளர்க நம் சமயப்பணிகள்!

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இரண்டாவது குருமகா சந்நிதானம், நல்லை ஆதீனம்.

### மிகவும் தொன்மை வாய்ந்த ஆலயம்



ஈழத்திருநாட்டிலுள்ள பழம்பெரும் விநாயகர் ஆலயங்களில் கருணாகரப் பிள்ளையார் கோயில் மிகவும் தொன்மை வாய்ந்த ஆலயமாகும். இத்திருக்கோயில் சிறப்புப்பற்றி வரலாற்றுத் துறைசார்ந்த அறிஞர்கள் பலர் கருத்துக் கூறியுள்ளனர். உரும்பிராய், இணுவில் வாழ் மக்களின் குலதெய்வமாக விளங்கும் திருவருட் சிறப்புமிக்க இத்தலத்தில் சைவாகம நெறிமுறை தவறாத பூசை வழிபாடும் சமயச் சொற்பொழிவுக்கு முதன்மை கொடுக்கின்ற பாரம்பரியமும் தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வருகிறது. சிவாச்சாரிய குருக்கள் பரம்பரையின் நிர்வகிப்பில் பல நூறு வருடமாக பாதுகாக்கப்பட்டு வரும் இவ்வாலய வளர்ச்சியில் காலத்துக்குக் காலம் பொதுமக்களின் திருப்பணிப் பங்களிப்பு நிறைவாக நிறைவேறி வருவது சிறப்புக்குரியது. ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் ஐயா போன்ற பல பெருமக்கள் இவ்வாலய வளர்ச்சிக்கு பெரும் துணை செய்த பெருமக்களாவர்.

இவ்வாலயம் தொடர்பாக வெளியிடப்பட்ட நூல்கள் மிகவும் பெறுமதி வாய்ந்தவை. இத்திருக் கோயிலில் புதிய தேர் உருவாக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். இத்திருத்தேரை உருவாக்க அயராது பாடுபட்ட திருப்பணித் தொண்டர்களை வாழ்த்துகிறேன்; வணங்குகிறேன்.

இதுவரை காலமும் கட்டுத்தேரில் பவனிவந்த கருணாகரப் பிள்ளையாருக்கு இன்று உறுதியான சிற்பம் நிறைந்த அழகுத்தேர் உருவாக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியதாகும். எல்லாம் வல்ல கருணாகரப்பிள்ளையாரின் பேரருள் அனைவருக்கும் நிறைவாகக் கிடைக்கப் பிரார்த்தித்து அமைகிறேன். ''யாவர்க்குமாம் இன்னுரைதானே''

ஆறு. திருமுருகன்
தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.


## ஓம் என்னும் பிரணவ ரூப விநாயகா...!

### புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறக்க வாழ்த்துவோர்

1. க.சுப்பிரமணியம், விளானை, உரும்பிராய் தெற்கு.
2. சண் நகைத் தொழிலகம், உரும்பிராய் சந்தி.
3. Sunmix Internet Cafe Palaly Road, Urumpirai. T.P: 021 222 3831
4. வசந்தன் கூல்பார், உரும்பிராய் சந்தி.
5. சதா பேக்கரி, உரும்பிராய் தெற்கு.
6. சிவசக்தி பல்பொருள் நிலையம், உரும்பிராய் சந்தி.
7. ரூபன் களஞ்சியம் உரும்பிராய் சந்தி
8. A.K.S. தொலைத்தொடர்பு நிலையம், உரும்பிராய் சந்தி.
9. ஸ்ரார் ஹொட்டல், உரும்பிராய் சந்தி.
10. கலா களஞ்சியம், உரும்பிராய் சந்தி.
11. உதயன் பன்சி, உரும்பிராய் சந்தி.
12. சதா ஹாட்வெயர், உரும்பிராய் சந்தி.
13. மணியம் பல்பொருள் நிலையம், உரும்பிராய் சந்தி.
14. வள்ளுவர் அக்கடமி, பலாலி வீதி, உரும்பிராய்.
15. டனிஸ் உணவகம், உரும்பிராய் சந்தி.
16. அருள்விநாயகர் தொலைத்தொடர்பு நிலையம், உரும்பிராய் சந்தி.
17. சு.குகானந்தன், கோப்பாய் றோட், உரும்பிராய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்

நண்பர்கள் சிலரின் வீட்டிற்கு எதிர்பாராமல் செல்லலாம். தொலைபேசி வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். கடந்த கால அனுபவம் ஒன்றை நினைத்துப் பார்த்து புதிய காரியங்களில் இறங்குவீர்கள். உறவினர்கள் இடையே ஏற்பட்ட பிரச்சினை ஒன்றைத் தீர்த்து வைப்பீர்கள். கணவன் மனைவி இடையே அன்னியோன்யம் கூடும்.

### இடபம்

ஆச்சரியப்படும் வகையிலான சில சம்பவங்கள் நடக்கலாம். நாடி வந்த சிலருக்கு பிறரிடம் வாங்கிக் கொடுத்தாவது உதவுவீர்கள். மற்றவர்கள் உதவியுடன் சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். உறவினர்கள் சிலருடன் முக்கிய விடயங்கள் பற்றி ஆலோசிப்பீர்கள். பிரபலமான ஆலயங்களுக்குச் செல்ல நேரிடலாம்

### மிதுனம்

எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நடக்காமல், ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். குறைந்த செலவில் முடியும் என, நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். சிலருடன் ஈகோ பிரச்சினைகள் உருவாகலாம். வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும்.

### கடகம்

கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் பணவரவுகளைப் பெறலாம். வெளியூர் போக்குவரத்துகளால் அனுகூலம் உண்டு. பல நாள்களாகத் தடைப்பட்ட காரியம் ஒன்று இன்று எளிதில் நடந்து விடலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கச் செல்லும் சிலருடன் நீங்களும் துணைக்குச் செல்லலாம்.

### சிங்கம்

மாமன், மைத்துனர்கள் மூலம் மகிழ்ச்சிகரமான செய்திகளைக் கேட்கலாம். பெற்றோர்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். வாகனங்களைப் பராமரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். மாற்று மொழி பேசுவோர் ஒருவரின் அறிமுகம் கிடைக்கும். ஆறுதலான நாள்.

### கன்னி

நல்லவர் ஒருவரின் உதவி கிடைக்கும். சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். அயலார் சிலரைப் பார்த்துப் பொறாமைப்படுவீர்கள். பிரியமான சிலருடன் பழங்கதைகள், வீண் பேச்சுக்கள் பேசி மகிழ்வீர்கள். பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும்.

### துலாம்

கணிசமான பணச் செலவுகளைச் சந்திக்கலாம். வீடு மாற்றம் தொடர்பான சிந்தனைகள் அதிகரிக்கும். தேவையற்ற அலைக்கழிப்புகளுக்கு ஆள்படலாம். உறவினர் ஒருவர் உங்களிடம் உதவி கேட்டு நச்சரிக்கலாம். அதிக எதிர்பார்ப்போடு இருந்த விடயம் ஒன்றில் ஏமாற்றத்தைச் சந்திக்கலாம்.

### விருச்சிகம்

பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். வெறுப்பு, விரக்தி விலகி உற்சாகம், தெம்பு குடிகொள்ளும். சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். கடனாக வாங்கிய பணம் ஒன்றைத் திருப்பிக் கொடுக்கலாம். உங்களுக்குப் பிடித்தமான பொருள் ஒன்றை நண்பர்கள் கொடுக்கலாம். சிலருடன் மனம்விட்டுப் பேசுவீர்கள்

### தனுசு

குடும்ப உறுப்பினர்களுடன் சண்டை, சச்சரவுகள் ஏற்படலாம். மனைவி, குழந்தைகள் கேட்டதை வாங்கிக் கொடுக்கக் கணிசமாகச் செலவு செய்வீர்கள். வெளியூரில் வசிக்கும் உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம். அயலார் உங்களின் செயற்பாடுகளைப் பார்த்து பொறாமைப்படலாம். கனவுத் தொல்லையுண்டு.

### மகரம்

அடுக்கடுக்காக வேலைகள் உருவானாலும் அனைத்தையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். உங்களைக் கேலி பேசிய சிலரே இன்று பாராட்டலாம். உறவினர்கள் இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்வுக்கு வரும். சிலரிடம் வாக்குக் கொடுத்து விட்டு அதைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம். கோபம், வேகம் குறைக்க வேண்டும்.

### கும்பம்

சிலர் காரணம் இல்லாமல் உங்கள் மீது கோபம் கொள்ளலாம். சேமித்த பணத்திற்குத் திடீரெனச் செலவு ஏற்படலாம். மருந்துப் பொருள்கள் வாங்கலாம். வாங்க நினைத்த பொருள் ஒன்றைக் கடும் முயற்சி எடுத்து வாங்கினாலும், அதில் திருப்தி இல்லாமல் போகலாம்.

### மீனம்

பொறுமை, நிதானத்துடன் செயற்பட்டு பெருமை சேர்க்கும் நாள். சிக்கலாகி விடுமோ எனப் பயந்த காரியம் ஒன்று நல்ல விதமாக முடியும். பயணங்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். வீட்டுச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். அலைச்சல்கள் குறைந்து ஓய்வு எடுக்கலாம். நிம்மதி பெறும் நாள்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது விவசாயக் கிராமத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கி மூலம் ஊக்கமளித்த

திரு. மகேசன் தயாகரன்

இன்று முதல் சங்கானையில் ஆரம்பிக்கப்படும் HNB யின் புதிய கிளையின் முகாமையாளராகப் பதவியுயர்வு பெற்றதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறோம். அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

விவசாய சம்மேளனம்

புன்னாலைக் கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

(103522)


## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 567

திகதி 2010/09/18

சுப்பர் இலக்கம்: 21

வெல்லப்பட்ட இலக்கங்கள்: 04 07 27 60

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 30,620,509.60 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 11 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 283 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 545 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம் | 13,691 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 விகிதம் | 7,937 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 198,187 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 31,665 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 8,944,620.00

சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ 30,971,184.80

தேசிய லொத்தர் சபை

www.nlb.lk

## புலமைப் பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.20

2009ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த, சமுர்த்தி முத்திரை பெறும் பயனாளிகளுக்கு சமுர்த்தி 'சிப்தொர' கல்விப் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் மாதாந்தம் 500 ரூபா வழங்கப்படவுள்ளது. யாழ்.பிரதேச செயலகத்தின் சமுர்த்திப் பிரிவு அதிகாரி எம்.கியூமன் இத்தகவலை அறிவித்துள்ளார்.

யாழ்.பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் தங்கள் பிரிவின் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஊடாக சமுர்த்தி வங்கிகளில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று நாளை மறுதினம் புதன்கிழமைக்கு முன்னதாக ஒப்படைக்குமாறும் யாழ்.பிரதேசய செயலக சமுர்த்திப் பிரிவு அதிகாரி கேட்டுள்ளார். (ற)

## அபராதம்

தென்மராட்சி,செப்.20

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த 14ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிவான் என்.எம்.எம்.அப்துல்லா வாகனச் சாரதிக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத்தவறின் ஐந்து மாதம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (த-20)

## பொதுக்கூட்டம் பிற்போடல்

மீசாலை கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 23.09.2010 வியாழக்கிழமை அன்று நடைபெற வேண்டிய மாதாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போட வேண்டியுள்ளது. அக்கூட்டம் 26.09.2010 அன்று பி.ப.3.30 மணிக்கு நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

தவயோகராசா — தலைவர்.
தவரத்தினம் — செயலாளர்.


(சி/570621)


காலதாமதமா? நெரிசல் பிரச்சினையா?
அனாவசிய தொந்தரவா?
இனி கவலையை விடுங்கள்

யாழில் முதல் முறையாக

இதோ வந்துவிட்டது

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலான உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மாணவர்களுக்கான பிரத்தியேக பஸ் சேவை




உங்களின் வீட்டிற்கே வந்து இறக்கப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்கள்
பதிவுகளுக்கு இன்றே விரையுங்கள்

அதிக்கா பிரைவேட் லிமிடெட்,
784, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 320 7455, 077 3895395

வியர்வை இல்லை
நெரிசல் இல்லை
அனாவசிய தொல்லை
இல்லை இல்லை இல்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிற் பயிற்சி நிலையத்துக்கு அமைச்சர் நேரில் பயணம்

கிளிநொச்சி,செப்.20

ஆடைத் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த புதன் கிழமை காலை நேரில் சென்று பார்வையிட்டார் என அவரது ஊடகச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பயணத்தின் போது ஆடைத் தொழிற்பயிற்சிகளில் ஈடுபட்டுவரும் நூற்றுக்கணக்கான யுவதிகளைச் சந்தித்த அமைச்சர் அவர்களது தொழில் முறைசார் பிரச்சினைகள் குறித்தும் தேவைகள் மற்றும் குறைநிறைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

அமைச்சருடன் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் ஆகியோரும் உடனிருந்தனர் - எனவும் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# நிக்கொட் அபிவிருத்தி நிதி அனைத்தும் கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களுக்கு

### இந்த வருடத்தில் முன்னுரிமை கொடுக்க முடிவு

கிளிநொச்சி,செப்.20

'நிக்கொட்' அமைப்பின் அபிவிருத்தி நிதி அனைத்தும் இந்த வருடம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குத் திருப்பி விடப்படவுள்ளது.

கடந்த காலப் போரினால் இவ்விரு மாவட்டங்களும் கடுமையாகச் சேதமடைந்ததைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அமைப்பின் புதிய பணிப்பாளர் திருமதி எஸ்.ஆர்.ரஞ்சினி உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போர் காரணமாக பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்யும் பணியை 'நிக்கொட்' நிறுவனம் கடந்த 2002 ஆம் ஆண்டு ஆரம்பித்தது. கடந்த 10 வருடங்களில் வடக்கு - கிழக்கில் 21 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டது.

அத்துடன், வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் தங்கியிருந்த 22 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் குடும்பம் ஒன்றுக்கு தலா 25 ஆயிரம் ரூபாவினையும் வழங்கியிருந்தது.

இந்நிலையில், 2010 ஆம் ஆண்டுக்குரிய அபிவிருத்தித் திட்டங்களை யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மேற்கொள்வதென அமைப்பு முடிவெடுத்துள்ளது.

அந்த இரண்டு மாவட்டங்களிலும் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பான விவரங்கள் அந்தந்த மாவட்ட அரச அதிபர்களால் திரட்டப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் விரைவாக அபிவிருத்திட்டங்கள் அங்கு மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் காரணமாகவே ''நிக்கொட்'' நிறுவனத்தின் யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன. இருப்பினும் அடுத்தடுத்த வருடங்களில் யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலும் ''நிக் கொட்'' நிறுவனம் தனது அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது- என்றார். (க-9)

## பச்சிலைப்பள்ளியில் நடமாடும் வைத்திய சேவை

கிளிநொச்சி,செப்.20

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மீளக் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்கு சுகாதார சேவைத்திணைக் களத்தினரால் நடமாடும் மருத்துவ சேவை வழங்கப்படுகிறது.

பொதுமக்களின் நலன் கருதி வழங்கப்படும் நடமாடும் சேவையினால் பலர் பயன் பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-315-313)

## மரங்களின் நிழலில் பாடசாலை பல்லவராயன் கட்டில் அவலம்

கிளிநொச்சி,செப்.20

கிளிநொச்சி, பல்லவராயன் கட்டு 2 ஆம் இலக்க அ.த.க பாடசாலை மாணவர்கள் மரங்களின் கீழிருந்து கல்விகற்று வருகின்றனர்.

இப்பாடசாலையின் வகுப்பறைக் கட்டடங்கள் மேற்கூரையின்றிக் காணப்படுவதால் இவர்கள் மரங்களுக்குக் கீழிருந்து கல்வி கற்கவேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தற்போது 121 மாணவர்களையும், 6 ஆசிரியர்களையும் கொண்டுள்ள இப்பாடசாலை மழைகாலங்களில் பாடசாலை முடிவடையும் நேரத்துக்கு முன்பே மூடப்பட்டு மாணவர்கள் வீடு செல்வதைக் காண முடிகின்றது. இதனால் அவர்களின் கல்விச் செயற்பாடுகளில் அதிக பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

உரியவர்கள் இதனைக் கவனத்திற் கொண்டு மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு உதவ வேண்டுமென்பதே பெற்றோர்களின் வேண்டுகோளாகும். (க-312)

## மன்னார் நகரசபை ஊழியர்களின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

மன்னார்,செப்.20

மன்னார் நகரசபை ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டதை எதிர்த்து ஏனைய ஊழியர்கள் நேற்று முன்தினம் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

முறைப்பாடு ஒன்று தொடர்பாக விசாரிக்கச் சென்ற நகரசபை உத்தியோகத்தர் ஒருவர் தாக்கப்பட்டதன் எதிரொலியாக இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி உத்தியோகத்தர் தாக்கப்பட்ட விடயம் பொலிஸாரால் உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட்டது. எனினும் மறுநாளான நேற்று முன்தினம் காலை நகரசபை ஊழியர்கள் அனைவரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக நகரமண்டபத்தில் சமரசக் கூட்டம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் நகர இராணுவத் தளபதி, குற்றத் தடுப்புப் பிரிவினர், பொலிஸார் பொதுமக்கள் நல்லுறவுப் பிரிவு உயர் அதிகாரிகள், மன்னார் வர்த்தக சங்கத்தினர் ஆகியோருடன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும் கலந்து கொண்டார்.

இறுதியில் இதை ஓர் அடையாள வேலை நிறுத்தமாகக் கூறிய நகரசபை ஊழியர்கள் தமது கடமைகளுக்குத் திரும்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-80)




## மன்னாரில் உள்ள இரு கிராமங்களுக்கு 45 ஆண்டுகளின் பின் பஸ் சேவை

மன்னார்,செப்.20

மன்னாரின் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கூராய் மற்றும் சித்திவிநாயகர் குளம் பகுதிகளுக்கான அரச பேருந்து சேவை கடந்த 16 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் 54 ஆவது படை அணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் மைத்திரி டயஸ் இந்தப் பேருந்து சேவையை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். நீண்ட காலமாகவே கூராய் மற்றும் சித்தி விநாயகர் குளம் கிராமங்கள் போக்குவரத்து வசதிகள் இல்லாதிருந்தன. சுமார் 45 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.



கூராய் ,சித்தி விநாயகர் குளம் கிராமங்களுக்கான அரச பேருந்து சேவையை 541 ஆவது பிரிகேட்டின் கட்டளை அதிகாரியான பிரிகேடியர் மைத்திரி டயஸ் நாடாவை வெட்டி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (படம் மன்னார் செய்தியாளர்)

மன்னாரிலிருந்து கூராய் கிராமம் சுமார் 65 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. தற்போது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் துரித மீள் குடியேற்றம் காரணமாக கூராய், ஆத்திமோட்டை, கள்ளியடி, சித்திவிநாயகர் குளம் பகுதிகளில் சுமார் 500 பேர் மீள்குடியேறியுள்ளனர். இவர்கள் தமது போக்குவரத்துக்களை மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள அரச பேருந்து சேவை மூலம் அப்பகுதி மக்கள் அதிக நன்மை அடைவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பேருந்து சேவை ஆரம்ப நிகழ்வில் கூராய் பிரதேசத்திற்குப் பொறுப்பான 541 ஆவது பிரிகேட்டின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் முகாந்திரம், இலங்கை போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலை முகாமையாளர், பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (க-80)

## விவசாயிகள் முன்னேற்றத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் உறுதுணை

யாழ்ப்பாணம்,செப்.20

விவசாயிகளின் முன்னேற்றகரமான வாழ்வுக்கு என்றும் உறுதுணையாக நிற்போம் என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளாரென அந்தக் கட்சியின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை காலை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் அப்பிரதேச விவசாயிகளைச் சந்தித்த அவர் அவர்களுக்கு விதை நெல்லை வழங்கினார். அதன் பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''அரசு விவசாயிகளுக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றது. இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தில் 80 வீதமான நிலங்களில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படும். இதில் ஈடுபடும் சகலருக்கும் விதை நெல் உட்பட உழவுக்கான செலவுகள், கிருமிநாசினி, உரம் என்பன இலவசமாக வழங்கப்படும். அதேவேளை நெல் சந்தைப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளும் செய்து தரப்படும்'' எனவும் அவர் தெரிவித்தார் என அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

## கிளிநொச்சியில் அலுவலகம் இல்லை ஆனாலும் 'நைற்றா' வகுப்புகள் ஆரம்பம்

கிளிநொச்சி,செப்.20

தேசிய பயிலுநர் தகவல் தொழில்நுட்ப அதிகாரசபையின் (நைற்றா) கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் திறக்கப்படாத நிலையிலும் கனகபுரத்தில் இயங்கும் பயிற்சி நிலையத்தில் வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன என அதன் மாவட்ட இணைப்பாளர் சி.பவளநாதன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட 'நைற்றா' அலுவலகத்திற்கான பெயர்ப்பலகை நாட்டப்பட்டுள்ள கிளிநொச்சி தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள கட்டடத் தொகுதி இன்னும் புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ளது. எனினும் கனகபுரம் வீதியில் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பயிற்சி நிலையத்தில் பயிற்சி வகுப்புக்களும், நிர்வாகச் செயற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

தற்போது பிரத்தியேகச் செயலாளர் கற்கை நெறியில் 30 பேரும், நீர்க்குழாய் பொருத்துதல் கற்கை நெறியில் 20 பேரும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

மாவட்ட அலுவலகத்தை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. என்றும் இணைப்பாளர் தெரிவித்தார். (க-405)

## கரைத்துறைப்பற்று பிரதேசத்தில் அனைவரும் மீளக்குடியமர அனுமதி

### உறவினர்களுடன் தங்கியிருந்தவர்களும் சொந்த இடம் திரும்பலாம்

முல்லைத்தீவு,செப்.20

போர் காரணமாக கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்து நண்பர்கள், உறவினர் வீடுகளில் தங்கி இருந்தவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை முதல் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அரச அதிபர் உதயனுக்கு தெரிவித்தவை வருமாறு:-

இடம் பெயர்ந்து வவுனியா 'மெனிக் பாம்' இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்த கரைத்துறைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த 6 ஆயிரத்து 242 குடும்பங்கள் சொந்த இடங்களில் மீளக் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளன. தற்போது உறவினர் நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்தவர்களும் இப்பகுதியில் மீளக் குடியமர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த முள்ளிவாய்க்கால் கிழக்கு வட்டுவாகல் பகுதியில் இன்று திங்கட்கிழமை 110 குடும்பங்களைச் சேர்ந்த 300 அங்கத்தவர்கள் மீள் குடியேற்றம் செய்யப்படவுள்ளனர். இவர்கள் வவுனியா மெனிக் பாம் இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்தவராவார்கள்.

அத்துடன் உறவினர் நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்த வட்டுவாகல் பகுதியைச் சேர்ந்த மக்கள் நாளை செவ்வாய்க்கிழமை சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 150 குடும்பங்கள் மீளக்குடியமர வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (க-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிகாமம் கட்டைபறிச்சான் வீதியை புனரமைக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, செப்.20

கொடிகாமம் வடக்கு, கட்டைபறிச்சான் வீதியினைப் புனரமைத்துத் தருமாறும், அப்பகுதிக்கு மின்சார வசதி ஏற்படுத்தித் தருமாறும் தென்மராட்சி பிரதேச செயலருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் மத்தியில் கண்டி வீதியிலிருந்து பிரிவடைந்து மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்திற்கு அருகில் வேம்பிராய் - வரணி வீதியில் இணையும் 1 ½ கிலோ மீற்றர் நீளமான இந்த வீதி நீண்ட காலமாக திருத்தப்படாமல் உள்ளது.

இந்த வீதியில் உள்ள 100இற்கு மேற்பட்ட குடும்பங்களுடன் மந்துவில், வேம்பிராய், தாவளை- இயற்றாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களும் இவ்வீதியை பயன்படுத்திவருகின்றனர். அத்துடன் அப்பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களும் அரச உத்தியோகத்தர்களும் விவசாயிகளும் கொடிகாமம் நகருக்குச் செல்வதற்கு இவ்வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

மேலும் இப் பகுதியில் 100இற்கு மேற்பட்ட குடும்பங்கள் உள்ள போதிலும் இதுவரை மின்சார வசதிகள் கிடைக்கவில்லை.

இக் கிராம மக்களின் குறைகளை நிவர்த்தி பண்ண நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேசரப்பிட்டி பெரியதம்பிரான் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர் பிரதேச செயலருக்கு மகஜர் அனுப்பியுள்ளனர். (ஐ-207)


## வாழ்த்துகின்றோம்



கல்விப் பணிப்பாளராய்
சிறப்புக் கல்விப் பணிசெய்து
பணிச் சிறப்பால் வடமாகாண
கல்விப் பணிப்பாளராகப்
பதவி உயர்வுபெற்ற
திரு.ப.விக்னேஸ்வரன்
அவர்களைப்
பாராட்டுவதுடன் அவரது
புதிய பணி மேலும்
சிறப்படைய எல்லாம்
வல்ல புத்தூர் சோமஸ்கந்தன்
இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.
அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாராப் பணியாளர்கள், பாடசாலை அபிவிருத்திச்
சங்கத்தினர் மற்றும் பழைய மாணவர்கள்.
யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக்
கல்லூரி (இசுறு பாடசாலை).

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கியில்
ஒப்புயர்வற்ற சேவையாற்றி புதிதாகத்
திறக்கப்படும் ஹற்றன் நஷனல் வங்கி
சங்கானை வாடிக்கையாளர் சேவை
நிலையத்தின் முகாமையாளராகப்
பதவியேற்றுள்ள
திரு.மகேசன் தயாகரன்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு,
அவர் மேலும் பல சிறப்புக்கள் பெற
வேண்டுமென இறையருளை வேண்டி நிற்கின்றோம்.
ஸ்ரீகரன் புக்சென்ரர்,
73, K.K.S. Road, சுன்னாகம்.
(சி/570625)

## தூய அன்னை வேளாங்கண்ணியின் வருடாந்தப் பெருவிழா

2010.09.21
அளம்பில், முல்லைத்தீவு



நற்கருணைவழிபாடும் பவனியும்
இன்று (2010.09.20)
திங்கட்கிழமை பி.ப. 4.30 மணி
திருநாள் திருப்பலி
நாளை (2010.09.21)
செவ்வாய்க்கிழமை காலை
6.30 மணி திருப்பலி நிறைவில்
அன்னையின் திருச்சொருபப்
பவனியும் ஆசிரும் இடம்பெறும்.
அன்னையின் அருள்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பங்குத் தந்தையும், பங்கு மக்களும்.


## நன்றி நவிலல்



எமது பாசம் மிகுந்த புத்திரன்
பிரம்மஸ்ரீ
சி.ஸ்கந்தசிவரூபசர்மா
அவர்கள் 06.09.2010 இல்
உந்துருளி விபத்தில்
சிக்கியபோது அவரைத்
தாமதிக்காது யாழ்.போதனா
வைத்தியசாலைக்கு
எடுத்துச்சென்று சேர்க்க
உதவியவர்களுக்கும்
வைத்தியசாலையில் அவரை
நன்கு கவனித்து சிகிச்சைகள் செய்த வைத்தியர்களுக்கும்
தாதியர்களுக்கும், 08.09.2010 இல் அவர் இறையடி சேர்ந்த
செய்திகேட்டு ஓடோடிவந்து ஆறுதல் கூறியவர்களுக்கும்,
உதவிகள் செய்தவர்களுக்கம், தொலைபேசி மூலம் அனுதாபம்
தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் பங்கு
பற்றியவர்களுக்கும் அதற்கு வேண்டிய ஒத்துழைப்பு
நல்கியோருக்கும் அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகளில்
பங்குபற்றிய சகல அன்புள்ளங்களுக்கும் மேலும் குறுகிய
காலத்தில் எமது வேண்டுகோளை ஏற்று அழகிய முறையில்
நினைவு மலரை ஆக்கித்தந்த கொக்குவில் சோதிடப்பிரகாச
யந்திரசாலை நிர்வாகத்தினருக்கும் எமது இதயபூர்வமான
நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
பிரம்மஸ்ரீ
சி.சிவகணேசக்குருக்களும்
குடும்பத்தினரும்.
75/10, செட்டித்தெரு,
நல்லூர்.

## 'மகிழ்களம்' கல்விக்கண்காட்சி இன்றும் மக்கள் பார்வையிடலாம்

யாழ்ப்பாணம், செப். 20

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 10ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் 'மகிழ்களம்' கல்விக் கண்காட்சி மேலும் ஒருநாள் நீடிக்கப்பட்டுள்ளது.

பெருந்திரளான பொதுமக்களும் மாணவர்களும் மூன்றாம் நாளான நேற்று ஞாயிற்றுக்கிழமையும் கல்விக்கண்காட்சியைப் பார்த்துச் சென்றனர். இன்னமும் பெரும் எண்ணிக்கையானோர் பார்வையிட வருவர் என எதிர்பார்ப்பதால், இன்று திங்கட்கிழமையும் கண்காட்சி நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மகிழ்களம் கல்விக் கண்காட்சியை வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களையும் சேர்ந்த பாடசாலைகளின் மாணவர்களும் வந்து பார்வையிட்டுச் சென்றனர். நேற்றுவரை 300 பாடசாலைகள் கல்விக்கண்காட்சியைப் பார்வையிட்டுச் சென்றனர் எனத்தெரிவிக்கப்பட்டது. (6)

## பழைய பித்தளை வியாபாரிகள் மீண்டும் குடாநாட்டில்

நாவற்குழி, செப். 20

பழைய பித்தளை, சரிகையுள்ள பழைய 'நைலெக்ஸ்' சாறிகளைக் கொள்வனவு செய்து அவற்றுக்குப் பதிலாக அலுமினிய, சில்வர் பாத்திரங்களைக் கொடுக்கும் வியாபாரிகள் குடாநாட்டில் மீண்டும் உலாவரத் தொடங்கியுள்ளனர்.

கிராமப் புறங்களில் கூடுதலாக இவர்களைக் காண முடிகின்றது. பழைய கால சரிகை 'நைலெக்ஸ்' சாறிகள் தற்போது மிகவும் அருமையாகவே காணப்படுகின்றன.

இதேபோல பழைய போத்தல்களைக் கொள்வனவு செய்து பணம் கொடுக்கும் சைக்கிள் வியாபாரிகளையும் பழையபடி பரவலாகக் காணமுடிகின்றது. ஆடு வாங்கும் சைக்கிள் வியாபாரிகளும் மீண்டும் சுறுசுறுப்பாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபாடு காட்டிவருகின்றனர். யாழ்ப்பாணத்தையும், பிறமாவட்டங்களையும் சேர்ந்த முஸ்லிம் வியாபாரிகளை இந்த வியாபார நடவடிக்கையில் அதிகளவில் காணமுடிகிறது. (121)

## வரணி ஞானவைரவர் சங்காபிஷேகம் நாளை

தென்மராட்சி, செப். 20

வரணி வடக்கு ஸ்ரீஞான வைரவர் தேவஸ்தானத்தில் நாளையதினம் பகல் அஸ்டோத்திர சங்காபிஷேகம் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவு நிகழ்ச்சிகளாக சைவத்தொண்டர் சி.இராசையா அவர்களின் சொற்பொழிவும், வரணி வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவ மாணவியரின் நடனநிகழ்வு, நகைச்சுவை நிகழ்ச்சி, ஜோன்சன்ஸ் குழுவினரின் நடனநிகழ்வு மற்றும் யாழ். நல்லூர் இராகம்ஸ் இசைக்குழுவினரின் இதயராகம் நிகழ்ச்சி என்பன [illegible]

## தென்மராட்சிக் கல்வி அலுவலகத்துக்கான புதிய மாடிக் கட்டடத்துக்கு அடிக்கல்

தென்மராட்சி, செப்.20

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்துக்கு புதிய மாடிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

கட்டடத்திற்கான அடிக்கல் நேற்று முன்தினம் முன்னாள் கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதனால் நடப்பட்டது.

சாவகச்சேரி ஹென்ஸ்மன் வீதியில் உள்ள வலயத்திற்கு சொந்தமான காணியில் முதற்கட்டமாக கீழ் தளவேலைகள் 20 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், உட்பட வலய அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (த-207)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அரியமலர் கனகசிங்கம்
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

யாழ்ப்பாணம், 4 ஆம் குறுக்குத்தெருவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அரியமலர் கனகசிங்கம் (17.09.2010) வெள்ளிக்கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான பரராசசிங்கம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் வதிரியைப் பிறப்பிடமாகக் கொண்ட பரராசசிங்கம் கனகசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் இராகுலன் (லண்டன்) அவர்களின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.09.2010 சனிக்கிழமை இந்தியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
வதிரி, கரவெட்டி.
(சி/570627)
தகவல்: பரராசசிங்கம் லோகநாயகி
(தெய்வம் ரீச்சர் - மைத்துனி).

### திருமதி தேவராசா வலன்டினா
(சுகாதாரத் தொழிலாளி, பிரதேச வைத்தியசாலை, காரைநகர்)



அராலி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட் திருமதி தேவராசா வலன்டினா நேற்று (19.09.2010) சனிக்கிழமை அதிகாலை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் இளையவன் நடேசன் (JP) காலஞ்சென்ற நாகம்மா தம்பதியினரின் ஏகபுதல்வியும் தில்லையம்பலம் தேவராசாவின் (கிளை முகாமையாளர், ப.தெ.வ.அ.கூ.சங்கம், சங்கானை) அருமை மனைவியும் அன்பரசி, ரேவதி (ஆலோசகர் HNB, இன்சூரன்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜீவன் (பிரான்ஸ்), புஷ்பகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும் பார்த்தீபனின் (ஆசிரியர், தனியார் கல்வி நிறுவனம்) அன்பு மாமியும் தங்கராசா (ஜேர்மனி), தவராசா (வவுனியா), புவனேஸ்வரி, அருட்செல்வம் ஆகியோரின் மைத்துனியும் சந்தோஷ், சஞ்சய் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.09.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கானை இந்து கரைச்சி மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வீதி,
சங்கானை.
(103548)
தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் முன்னாள் உப அதிபர்
திருமதி கனகம்மா கிட்ணர்
(முன்னாள் உ.அதிபர், யா/செங்குந்த இந்துக் கல்லூரி)
அவர்கள் சிவபதமடைந்த செய்திகேட்டு எமது
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலைச்சமூகம்,
யா/செங்குந்த இந்துக் கல்லூரி.
(சி/570623)

## நெஞ்சைவிட்டகலாத பத்து ஆண்டு நினைவலைகள்



மண்ணுலகில்
25.10.1924
விண்ணுலகில்
20.09.2000

### அமரர் வேலன் பசுபதி

அன்புப் பப்பாவே!
உங்கள் சிரித்த முகம் கண்டு ஆண்டுகள் பத்து
கடந்தாலும்
நீங்கள் எமக்குக் காட்டிய வாழ்க்கைப் பாதையில் உம்
நினைவுகளுடன்
என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காக சந்நிதி முருகனை
நித்தம் பிரார்த்தித்துக் கொண்டிருக்கும்
மனைவி, குடும்பத்தினர்.
8/2, கலாமன்ற வீதி,
மானிப்பாய் கிழக்கு, மானிப்பாய்.
நிரந்தர முகவரி:
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.
(103543)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய, விலங்கு வேளாண்மைக் கண்காட்சி

திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமான கண்காட்சி இன்றும் இடம் பெறுகின்றது. இக்கண்காட்சி தொடர்பாக பல்வேறு தரப்பினர் வழங்கிய கருத்துக்கள்

**விஜிதா தெய்வேந்திரம்**
மீள் எழுச்சித்திட்டம்
துறைப்பாழலை கிராம அபிவிருத்தி அமைப்பு பருத்தித்துறை

### விவசாயிகளுக்கு மட்டுமல்லாது சகலருக்கும் பயன்தரக் கூடியது



நாட்டுச் சூழ்நிலைகளால் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் அதனைக் கட்டியெழுப்புவதுடன் மக்களுக்குத் தீங்குகளற்ற முறையில் விவசாயிகள் தமது உற்பத்திகளை முன்னெடுக்க வேண்டியது தவிர்க்க முடியாதது.

இரசாயனப் பொருள்களின் பயன்பாடுகளால் ஏற்படக்கூடிய தாக்கங்களில் இருந்து எமது மக்களைப் பாதுகாக்கக் கூடிய நச்சுத்தன்மைகளற்ற உணவுப் பொருள்களை உற்பத்தி பண்ணக்கூடியதான அறிவுகளையும் தொழில்நுட்பத் திறன்களையும் விவசாயிகள் மட்டுமல்ல அனைவருமே பெற்றுக்கொள்ளக்கூடியதான இயற்கையுடன் இணைந்த ஒரு சிறந்த விவசாயக் கண்காட்சி இதுவாகும்.

மலைநாட்டு மரக்கறி வகைகள்,கோப்பிச் செடிபோன்ற பயிர்களை எமது பிரதேசத்திலும் உற்பத்தி செய்யமுடியும் என்ற உண்மையை நேடியாகத் தெரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. விவசாயத் திணைக்களமும், விலங்கு வேளாண்மை, வானிலை அவதான நிலையம் போன்ற கமம் சார்ந்த திணைக்களங்கள் மிகவும் அவசியமான ஒரு நல்ல நிகழ்வை எமக்குத் தந்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

**போ.தர்மராஜா**
கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

### ஆண்டுதோறும் கண்காட்சி நடத்துவது அவசியமானது



சிறந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சேதனப் பசளைகளை எவ்வாறு தயாரிக்கலாம். கூட்டெரு, மண்புழு திரவப்பசளைகளை எமது சுற்றாடலில் கிடைக்கக் கூடிய செலவுகளின்றிப் பெறக்கூடிய பொருள்களினூடாகத் தயாரித்தல் போன்ற விவசாயிகளுக்குத் தேவையான விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துதல் தொடர்பான கருத்துக்களையும் ஒரு விவசாயி என்ற வகையில் இந்தக் கண்காட்சியூடாகத் தெரிந்துகொள்ள முடிந்தது.

விவசாயியென்றால் பொதுவாக ஒரு சாதாரண மனிதனாகத்தான் மற்றவர்கள் பெரும்பாலும் கருதுவதுண்டு. உலகிற்கு உயிர் கொடுக்கும் அவனுடைய அனுபவங்களும் ஆற்றல்களும் நவீன தொழில் நுட்பத்துடன் இணைந்து நாட்டின் பொருளாதார வளத்தையும் நோய் நொடியற்ற சமுதாயத்தையும் உருவாக்கக் காரணமாகும் என்பதை இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்ட அனைவருமே ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

அந்த அளவுக்குத் தேவையான அம்சங்கள் அனைத்தும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. விவசாயத் திணைக்களம் ஆண்டுதோறும் புதிய புதிய உத்திகளைக் கையாண்டு விவசாய அறிவை மேம்படுத்தக்கூடியதாகக் கண்காட்சிகளை நடத்துவது தேவையும் மகிழ்ச்சிக்குரியதுமாகும்.

**தொகுப்பு: லக்ஷ்மன்**

**உ.பிரியங்கா**
தரம் 10
யா/தியாகராசா மகாவித்தியாலயம், காரைநகர்.

### விவசாயம் முக்கிய பாடம் என்பதை உணர்த்திய கண்காட்சி



பெரிய விவசாயிகள் என்றில்லாமல் சாதாரணமாக ஒவ்வொரு வீடுகளிலும் சிறிய அளவிலான வீட்டுத் தோட்டம் வைத்திருப்பது அநேகரால் கைக்கொள்ளப்படுவதுதான். ஒரு வீட்டுத் தோட்டம் எவ்வாறு அமையவேண்டும். கால்நடைகளை வளர்க்கும் முறைகளுடன் பெரிய அளவிலான காய்கறிச் செய்கைகள், பழமரக் கன்றுகளின் உற்பத்திபோன்ற உணவுத் தேவைக்கான பயிர்களை, எமது ஊரிலேயே கிடைக்கத்தக்க மூலவளங்களைப் பயன்படுத்தித் தயாரிக்கக் கூடிய சேதனப் பசளைகளைக்கொண்டு செய்கை பண்ணுவதன் மூலம் மக்கள் அடையக்கூடிய 'சுகவாழ்வு', வருமானம் என்பவற்றை எமது இளஞ் சந்ததிகள் தெரிந்துகொள்ளக்கூடிதாக இருந்தது.

பனை வளங்களூடாகக் கிடைக்கக்கூடிய லாபங்கள் வீட்டை அலங்கரிக்கும் வகையில் அமையக்கூடிய பூமரங்கள் என எல்லாமே நல்ல முறையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. நாங்கள் இதுவரை பார்த்திருக்காத அழகிய பல மரங்களை இங்கு பார்த்துப் பரவசமடைந்தேன். விவசாயத்தையும் ஒரு முக்கிய பாடமாகப் படிப்பது இன்றைய தேவை என்பதைக் கண்காட்சி சொல்லாமல் சொல்வதுபோல் இருக்கிறது. கண்காட்சியின் கர்த்தாக்கள் பாரட்டப்பட வேண்டியவர்கள்.

**ப.வசிகரன்**
முதலாம் வருட மாணவன்
விவசாயக் கல்லூரி, இறம்பைக்குளம் வவுனியா.

### ஈரவலய பயிர்செய்கை குறித்து நல்ல விளக்கம் கிட்டியது



காலநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாண மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் நடத்தப்படும் விவசாயக் கண்காட்சியில் எமது நாட்டின் உலர், ஈரவலயப் பயிர்கள் பெருமளவில் வெற்றிகரமாகப் பயிரிடப்பட்டுள்ளது. நோய், பீடைத் தாக்கங்கள் குறைவாகவும் உச்ச விளைச்சல்களை அவதானிக்கக் கூடியதாகவும் இங்குள்ள ஒவ்வொரு பயிர்களுக்கான துண்டங்கள் காணப்படுகின்றன.

விவசாயப் பயிர்ச்செய்கைக்கு கால நிலைகளைப் பார்க்கிலும் பயிர்கள் பராமரிப்பு முறைகளும் சேதன விவசாயமும் இன்றியமையாதது என்ற உண்மையை உணரமுடிகின்றது. விவசாயிகளுக்கு மட்டுமன்றி அனைத்து மக்களுக்குமே பயன்படக்கூடியதாக பூச்சித் தாக்கங்களில் இருந்து பயிர்களை எவ்வாறு பாதுகாக்க முடியும் என்பதைத் தெரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. விலங்கு வேளாண்மை தொடர்பான செயற்பாடுகளைப் புரிந்துகொள்ளக்கூடியதாக அமைக்கப் பட்டிருந்தது கண்காட்சியின் தனிச் சிறப்பாகும்.

**க.தியாகலிங்கம்**
தலைவர், விவசாய சம்மேளனம், சுன்னாகம் தெற்கு

### விவசாயத்தை ஊக்குவிக்க பயனுள்ள தகவல்கள்



திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற விவசாய விலங்கு வேளாண்மைக் கண்காட்சி மிகவும் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருந்தது. விவசாயத் துறையை விட்டு விலகி நிற்கும் இளந்தலைமுறையினர் சிறந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி என்ன வளம்இல்லை எமது யாழ்.மண்ணில் என்ற இறுமாப்புடன் விவசாயத்துறையில் கால்பதிப்பார்களேயானால் எதிர்காலம் அவர்களுக்கு உன்னதமானது என்ற உண்மையை உணர்த்தும் உன்னதக் காட்சியாக ஒவ்வொரு பகுதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. கிருமி நாசினி இல்லாத உற்பத்திச் செலவு குறைந்த உற்பத்தியென எல்லாமே உற்பத்தியாளருக்கு சேமிப்பைத் தரக்கூடியதாக பணப்பிரச்சினைகளற்ற ஒரு பாரிய தொழிலாக விவசாயத்தை முன்னெடுக்க முடியும் என்ற நம்பிக்கையைத் தருகின்றது.

நாற்றுமேடை, சொட்டுநீர்ப்பாசன முறையில் செய்கை பண்ணப்பட்ட வாழைப்பயிர்கள் என எல்லாமே அபாரம். ஒவ்வொரு காட்சிப் பிரிவிலும் உள்ள விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்கள் பயனுள்ள தகவல்களை வழங்குகிறார்கள். எதிர்காலங்களில் இன்னும் பல புதுமைகளை அடக்கியதாக விவசாயக் கண்காட்சிகள் இடம்பெற வேண்டுமென விரும்புகிறேன்.

**பா.கீர்த்தனா**
தரம் 9 நாவலர் தமிழ் வித்தியாலயம், கோப்பாய்.

### மாணவர்களுக்கு பயன் அளிக்கும் வகையில் காட்சிப்பொருள்



குடாநாட்டின் மிளகாய் உற்பத்தி வெகுவாகக் குறைந்து விட்டதாக தகவல்கள் வெளியான ஒரு செய்தியை அண்மையில் அறிய முடிந்தது.

இந்த விவசாயக் கண்காட்சியில் நல்ல முறையில் காய்த்துக் குலுங்கும் மிளகாய்களை மிளகாய்ச் செடிகளில் காண முடிந்தது. [illegible] வீழ்ச்சிதான். கண்காட்சியில் இவை இரண்டும் நல்ல முறையில் பயன் விளைத்துக்கொண்டு நிற்கின்றன. இங்கே நவீன உத்திகளைக் கையாண்டு இதுபோன்ற உணவுப் பொருள்களைப் பயிரிட்டுள்ளார்கள். விவசாயிகள் மட்டுமன்றி வீட்டுத் தோட்டங்களைச் செய்வதில் ஆர்வமுள்ள ஒவ்வொருவரும் மற்றும் விலங்கினங்களை வளர்ப்பவர்களும் அவற்றின் பயன்களைப் பெறுவதற்கு எந்தவிதமான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்த அறிவுரைகளையும் கேட்கக்கூடியதாக உள்ளது. காட்சிப்படுத்தப்பட்ட அனைத்து விடயங்களுமே விவசாய அபிவிருத்திக்கான இலக்குகளாகும். நாம் படிக்கும் பாடங்கள் தொடர்பான விடயங்களும் நிறையவே இருந்ததால் விவசாயிகளுக்கு மட்டுமன்றி மாணவர்களுக்கும் பயனுள்ளதாக உள்ளது. சொட்டு நீர்ப்பாசன முறை தாவரங்கள் காளான் வளர்ப்பு எல்லாமுமே உச்சம்.

**திருமதி எஸ்.ரஜீவன்**
சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

### குறைந்த செலவில் நிறைந்த பயன்



இன்றைய விவசாயக் கண்காட்சி நாங்கள் அறிந்த விடயங்களுடன் அறியாத பல விடயங்களையும் தெரிந்து கொள்ள வகை செய்கிறது. குறைந்த செலவில் நிறைந்த பயனைத் தரக்கூடிய உற்பத்தித் திறன்களுடன் பயிரினங்களையும் வாங்க முடிந்தது.

அரிய பல தகவல்களை ஒவ்வொருவரும் பெறமுடியும் என்பதால் மக்கள் கண்காட்சியைப் பார்வையிட்டு, விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து பெரிய, சிறிய அளவிலான விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

**திருமதி என்.ரி.ஈஸ்வரன்**
உப அதிபர், விவசாயக் கல்லூரி, வவுனியா.

### புதிய தொழில்நுட்பத்துடன் விவசாயச் செய்கை



கண்காட்சியில் வீட்டுத் தோட்டம், இடமில்லாத விடத்து விவசாய மூலிகைத் தோட்டம், சேதன விவசாயம், விலங்கு வேளாண்மை, புதிய தொழில்நுட்பங்கள், புதிய இனங்கள்-வர்க்கங்கள் என சிறிய அளவில் செய்கை பண்ணும் விவசாயிகள், பெரும் விவசாயிகள் என அனைவருக்கும் எளிமையான முறையில் காட்டப்பட்டுள்ளது.

**மு.கந்தசாமி**
விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம், மருதனார்மடம்.

### மாணவர்களின் சந்தேகங்களுக்கு விடை தரும் கண்காட்சி



இன்றைய மக்களின் உடனடி வாழ்வாதாரத் தேவைகளை உணர்த்துகின்றது.

குறிப்பாக சூழல் பாதுகாப்பு இயற்கையோடு இணைந்த விவசாய முயற்சிகள் உணவுக்கான பாதுகாப்பு என்பன சுட்டிக்காட்டப் படுகின்றன. விவசாயிகளுக்கான தொழில்நுட்பங்கள் இலகு நடையில் காட்டப்பட்டுள்ளன. இக்காட்சிப் படுத்தலானது விவசாயிகள், மாணவர்களின் சந்தேகங்களுக்கு விடையளிக்கின்றது.

**வி.துளஜீவன்**
தரம் 10ஏ, வரணி மகாவித்தியாலயம், வரணி

### இடம்பெயர்ந்தவர்களுக்கும் பயன்தரும் விடயங்கள்



எங்களது பிரதேசம் விவசாயத்துடன் இணைந்தது. தென்னை உற்பத்தியும் நிறைய உண்டு. இடப்பெயர்வுகளால் இன்று தமது சொந்த இடங்களில் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலையில் எங்கோ ஒரு சிறு கூடாரங்களில் தங்கியுள்ள மக்கள் தமது தேவைக்காக முழுமையாக உதவிகளை எதிர்பார்த்திருக்காது, சாடிகளில் சில பயிர்களை வளர்த்து பயன்பெறத்தக்கதான வழிமுறைகளையும் இக்கண்காட்சியூடாகத் தெரிந்துகொள்ளலாம். எமது பகுதியில் பயிரிடக்கூடியவற்றின் விதைகளையும் எமது மாணவர்கள் வாங்கிக்கொள்ள முடிந்தது. விவசாயத் திணைக்களம் நமது முயற்சியினால் நல்ல உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யமுடியும் என்ற உண்மையை கண்காட்சி மூலம் வலியுறுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.கவை ஆட்சிப்பீடத்திலிருந்து அகற்றுவதே எனது முதல் வேலை

## தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் ஆவேசம்



சென்னை, செப. 20

தி.மு.கவை ஆட்சியிலிருந்து விரட்டுவதே எனது முதல் வேலை. நேருவின் குடும்பத்தினர் இந்தியாவுக்காகச் சொத்துகளை தியாகம் செய்தனர். ஆனால் நாட்டுக்காக கருணாநிதி எதை இழந்தார் - என்று தே.மு.தி.க. தலைவர் விஜ யகாந்த் கேள்வியெழுப்பியுள் ளார்.

சென்னையில் தே.மு.தி.கவின் 6ஆவது ஆண்டு விழாவை யொட்டி பொதுக் கூட்டம் நடந்தது. இதில் கலந்துகொண்டு கட்சித் தலைவர் விஜயகாந்த் மேலும் பேசியவை வருமாறு -

தே.மு.தி.க. ஆட்சிக்கு வராது என்று புலம்புகிறார்கள். நான் கடவுள் இல்லை என்று சொல்லவில்லை, தெய்வம் இருக்கிறது. நான் கடவுளை நேசிக்கிறேன். விழுப்புரத்தில் அம்பேத் கார் சிலை வைத்த என்னுடைய தொண்டர்களைத் தடுத்திருக்கிறார்கள். என்னு டைய கட்சியைச் சேர்ந்த 260 பேர் மீது வழக்குப் போட்டுள்ளனர். எத்தனை வழக் குகள் போட்டாலும் பயப்படமாட்டோம். என்மீது வேண்டுமானாலும் வழக்குப் போடட்டும். நானும் சிறைக்குச் செல்லத் தயார்.

என்னுடைய படமான 'விருதகிரி'யை வெளிவரவிடாமல் தடுக்கிறார்கள். இதற்கெல்லாம் பயப்பட மாட்டேன். 'எத்தனையோ கோடிகளை இழந்திருக்கிறேன். திருமண மண்டபத்தைக் கூட இழந்திருக்கிறேன். பல கோடிகளைப் பார்க்க வேண்டும் என்றால் அரசியலில் கூட்டணி வைத்திருப்பேன்.

விஜயகாந்த் இந்தப்பக்கம் போய்விட்டார், அந்தப்பக்கம் போய்விட்டார் என்று கூறுகிறார்கள். கூட்டணி பற்றி நான் மக்களைக் குழப்புகிறேன் எனக் கூறு கிறார்கள். நான் தெளிவாகத்தான் இருக் கிறேன். அவர்கள் தான் கூட்டணி பற்றி குழம்பிப் போய் இருக்கிறார்கள். கூட்டணி சம்பந்தமாக தொண்டர்களுடன் கலந்து பேசித் தான் முடிவு செய்வேன். மக்களுக் காகத் தொண்டு செய்வதே எனது வழி.

எங்கு சென்றாலும் என்னை ராஜா மாதிரி அழைத்துச் செல்கின்றீர்கள். இதை விட எனக்கு என்ன வேண்டும். எங்களுடைய கட்சித் தொண்டர்களைச் சீண்டிப் பார்க்காதீர்கள். இங்கு வந்திருக்கும் கூட் டம் திரட்டப்பட்ட கூட்டமல்ல, திரண்டு வந்திருக்கும் கூட்டம். என்னை ஆட்சியில் அமர வைத் தால் மக்களைத் தங்கத் தொட்டிலில் வைத்து தாலாட்டிக் காட்டு வேன்.

தி.மு.கவும், காங்கிரஸும் கூட்டணி வைத்துத் தேர்தலைச் சந்தித்தபோது எம்.ஜி.ஆர். மிகப் பெரிய வெற்றியைப் பெற் றுக் காட்டினார். எனவே மக்கள்தான் வெற்றியைத் தீர்மானிப்பவர்கள். கூட்டணியைப் பொறுத்தவரை நான் மக்க ளைத்தான் முதலில் மதிப்பேன். - இப்படி அவர் பேசினார்.

# 3,000 அரங்குகளில் வெளியாகும் முதல் இந்தியப் படம் 'எந்திரன்'!

## ஒக்ரோபர் முதலாம் திகதி வெளியீடு



சென்னை, ஒக். 20

'எந்திரன்' திரைப்படம் உலகம் முழுவதும் ஒக்டோபர் முதலாம் திகதி 3,000 திரையரங்குகளில் வெளியாகிறது.

ரூபா 150 கோடிக்கும் அதிகமான பொருள்செலவில் ஷங்கரின் இயக்கத்தில் உருவாகியுள்ள 'எந்திரன்' தமிழ், தெலுங்கு மற்றும் ஹிந்தி மொழிகளில் ஒரே நாளில் வெளியாகிறது.

கிட்டத்தட்ட 2,250 இற்கும் மேற்பட்ட பிரிண்டுகள் போடப்பட்டுள்ளன எனவும், இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க லாம் என்றும் சன் பிக்சர்ஸ் தலைமை செயல் அதிகாரி ஹன்ஸ்ராஜ் சக்ஸேனா தெரிவித்தார்.

இதில் தமிழகத்தில் மட்டுமே 1,000 பிரிண்டுகள், 1,450 திரையரங்குகள் என பிரமாண்டமாக 'எந்திரன்' வெளியாகிறது. தமிழில் இனியொரு படம் இந்த மாதிரி வெளிவருமா என்பது சந்தேகமே.

இதுகுறித்து சன் பிக்சர்ஸ் வெளிட்டுள்ள அறிக்கையில்-

இந்தியா மட்டுமின்றி அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரிட்டன், பிரான்ஸ், மலேசியா, சிங்கப்பூர், தென் ஆபிரிக்கா, சீனா உட்பட உலகம் முழுவதும் ஒரே நாளில் சூப்பர் ஸ்டார் ரஜினி நடித்த 'எந்திரன்' திரைப்படம் வெளியாகிறது.

தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் அமெரிக்காவில் வெளியாகும் முதல் இந்திய திரைப்படம் எந்திரன் தான்.

இத்தனை நாடுகளில் இத்தனை மொழிகளில் ஒரே நாளில் திரையிடப்படும் முதல் இந்தியப் படம் என்ற பெருமையையும் 'எந்திரன்' பெறுகிறது - என்று கூறியுள்ளது.

# ஈழத் தமிழரை வெளிநாட்டுக்குக் கடத்தல்: விமான நிறுவன முன்னாள் ஊழியர் கைது

## கேரளப் பொலிஸார் அதிரடி

ஆலுவா, செப். 20

இலங்கையில் இருந்து தமிழர்களை விடுதலைப் புலி ஆதரவாளர்கள் கேரளா வுக்கு அழைத்து வந்து பின்னர் அவர்களைக் கள்ளத்தோணியில் வெளிநாட்டுக்கு அனுப்பிய வழக்கில் சம்பந்தப்பட்ட ஏயார் லங்கா விமான நிறுவனத்தைச் சேர்ந்த முன்னாள் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருவனந்தபுரம் சாஸ்தமங்கலம் பகுதியைச் சேர்ந்தவர் ரவீந்திரன் (வயது - 65). இவர், ஏயார் லங்கா விமான நிறுவனத்தில் ஊழியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர், தற்போது திருவனந்தபுரம் விமான நிலையத்தில் சரக்குகள் பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வருகிறார். இலங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் நந்தகுமார். இவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தீவிர ஆதரவாளர். இவரைச் சிலர் இலங்கையில் இருந்து கேரளாவுக்கு அழைத்து வந்தனர். பின்னர் இவரை, கொச்சி விமான நிலையத்தில் இருந்து ஜூலை மாதம் 26 ஆம் திகதி போலிக் கடவுச்சீட்டு மூலம் பாரீஸ் நகருக்கு அனுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் அவர், விமான நிலைய குடியேற்ற உரிமை அதிகாரிகளிடம் சிக்கினார். இவர், தற்போது விய்யூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரிடம் பொலிஸார் தொடர்ந்து நடத்தி வரும் விசாரணையில்தான் ரவீந்திரன் குறித்த தகவல்கள் கிடைத்தன.

அவருக்கும், இலங்கையில் இருந்து ஆள் களை வெளிநாட்டுக்கு அனுப்பும் சம்பவத்திற்கும் தொடர்பு இருப்பது, பொலிஸாருக்குத் தெரியவந்தது. இதையடுத்து, அவரைப் பொலிஸார் கடந்த வெள்ளியன்று கைதுசெய்தனர். அவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மேலும் சிலரைப் பொலிஸார் தேடி வருகின்றனர். அவர்களில் சென்னையைச் சேர்ந்த சந்திரகுமார் என்பவரும் ஒருவர். பொலிஸாரிடம் சிக்காமல் தலைமறைவாக இருக்கும் பலரும் தங்களது பெயர்களுக்கு பதிலாக போலிப் பெயர்களில் சுற்றி வருவதால் பொலிஸார் திணறுகின்றனர்.

# நயன்தாராவை எதிர்த்து பெண்கள் அமைப்பு போர்க்கொடி

சென்னை, செப். 20

தமிழ்நாட்டுக்கு வந்து தமிழகத்தில் கலாசாரச் சீரழிவை ஏற்படுத்தி வரும் நயன்தாராவைக் கண்டித்து அனைத்துப் பெண்கள் அமைப்புகளையும் திரட்டி போராட்டத்தில் ஈடுபடுவோம் - என்று ஜான்சிராணி பெண்கள் பாதுகாப்புச் சங்கத் தலைவி கல்பனா கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது:-

நடிகர் பிரபுதேவாவின் மனைவி ரம்லத். இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளன. இந்நிலையில் ரம்லத்தைப் புறக்கணித்து நயன்தாராவுடன் சுற்றுகிறார் பிரபுதேவா.அவர் மும்பையில் அளித்த பேட்டியில் நயன்தாராவை விரைவில் திருமணம் செய்வேன்.

நயன்தாராவைத் திருமணம் செய்வது தனிப்பட்ட விடயம் என பிரபுதேவா கூறுகிறார். தமது மனைவியைத் துன்புறுத்தி இன்னொரு பெண்ணை மணப்பது அவருக்கு வேண்டுமானால் தனிப்பட்ட விடயமாக இருக்கலாம். இது பெண்களுக்கு எதிரான ஒரு பொதுப் பிரச்சினை - என்றார்.

# கடல் அட்டை பிடித்தால் அடையாள அட்டை ரத்து

## மீனவர்களுக்கு அரசு எச்சரிக்கை

இராமநாதபுரம், செப். 20

மன்னார் வளைகுடாக் கடலில் கடல் அட்டை பிடிக்கும் மீனவர்களின், அடையாள அட்டைகள் ரத்துச் செய்யப்படும் - என்று அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் வளைகுடாவில், கடல்வாழ் உயிரினங்கள் வேட்டையாடப்படுவது தொடர்கிறது. வனத்துறை, வளைகுடா உயிர்கோளக் காப்பாக அறக்கட்டளை, கடலோரக் காவல்படை, கடற்படையினரோந்தையும் மீறி கடல்வாழ் உயிரினங்கள் கடத்தப்படுவது அதிகரித்துள்ளது. இக்கடத்தல் பின்னணியில், மீனவர்கள் சிலர் இருப்பதே இதற்குக் காரணம். கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் போர்வையில் மறைமுகமாகத் தடைசெய்யப்பட்ட கடல்வாழ் உயிரினங்களை அபகரிக்கும் கும்பல் சமீப காலமாக அதிகரித்துள்ளது.

இதற்கு வனத்துறையினரும் முழு அளவில் உதவி வருகின்றனர்.

இதற்காக இராமநாதபுரம், தூத்துக்குடி பகுதி மீனவர்களைக் கடத்தல் கும்பல் பயன்படுத்தி வருகிறது. சந்தேகத்தை திசை திருப்பும் விதமாக மீனவப் பெண்களையும் இதில் பயன்படுத்தி வருகின்றனர். இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் கடல் அட்டை சேகரிப்பில் மீனவர்கள், ஈடுபட்டால் அவர்களின் அடையாள அட்டை ரத்துச் செய்யப்படும் என அரச தரப்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவிப்பை இராமநாதபுரத்தில் நடந்த கடலோரப் பாதுகாப்புக் கூட்டத்தில் கலெக்டர் ஹரிஹரன் தெரிவித்தார்.

# இந்திய அரசின் நிர்வாகக் கட்டமைப்பில் மலையாளிகளின் ஆதிக்கம் அதிகரிப்பு!

புதுடில்லி, செப். 20

மத்திய அரசின் ஒவ்வொரு துறையின் தலைமைப் பதவியையும் மலையாளிகள் தான் அலங்கரித்து கொண்டிருக்கின்றனர். டில்லியில் அவர்களின் ஆதிக்கம் வருகிறது.

மற்ற தென் மாநிலங்களுடன் ஒப்பிடும் போது, கேரளா மிகச் சிறிய மாநிலம். மக்கள் தொகையும் குறைவுதான். ஆனால், இந்த மாநிலத்தின் மண்ணின் மைந்தர்கள்தான், மத்திய அரசின் நிர்வாகத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

ஒவ்வொரு துறையின் தலைமைப் பதவியையும் மலையாளிகள்தான் அலங்கரித்து கொண்டிருக்கின்றனர். கடந்த வாரம் இந்தப் பட்டியலில் மேலும் ஒரு மலையாள மண்ணின் மைந்தர் இடம்பிடித்துள்ளார். அவர் பெயர் பி.ஜே.தாமஸ். மத்திய கண்காணிப்புத் துறை ஆணையராக இவர் கடந்த வாரம் பதவியேற்றுள்ளார். பிரதான எதிர்க் கட்சியான பா.ஜ.க. இவரது நியமனத்துக்கு



கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையிலும், இவரை கண்காணிப்புத் துறை ஆணையர் பதவியில் அமர்த்தி அழகு பார்த்திருக்கிறது மத்திய அரசு.

இப்போதெல்லாம், டில்லியில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் மலையாள மணம் கம கமக்கிறது. கடவுளின் சொந்த நாடு என கூறப்படும் கேரளாவில் இருந்து, கூட்டம், கூட்டமாக டில்லியை நோக்கி அதிகாரிகள் கூட்டம் படையெடுத்த வண்ணம் இருக்கிறது.

உதாரணத்துக்கு, மத்திய அரசின் மிகப் பெரிய பொறுப்புகளை தங்கள் கைக்குள் வைத்துள்ள மலையாள மண்ணின் மைந்தர்கள் சிலரின் பெயர்கள் வருமாறு -

★ கே.எம்.சந்திரசேகர் - மத்திய அமைச்சரவைச் செயலர்.

★ சிவ்சங்கர் மேனன் - தேசிய பாதுகாப்பு ஆலோசகர்.

★ [illegible] ராவ் - வெளிவிவகாரச் செயலர்.

# இந்தியச் செய்திகள்

★ பி.ஜே.தோமஸ் - மத்திய கண்காணிப்புத்துறை ஆணையர்.

★ டி.கே.ஏ.நாயர் - பிரதமரின் முதன்மைச் செயலர்.

★ மாதவன் நம்பியார் - விமானப் போக்குவரத்துச் செயலர்.

★ ஜி.கே.பிள்ளை - உள்துறைச் செயலர்.

இவர்களைத் தவிர, கேரளாவில் பிறக்கா விட்டாலும், இந்தியன் சிவில் பணிகளில் இடம்பிடித்துள்ள கேரளா அதிகாரிகள் ஏராளமானோர் மத்திய அரசு பணிகளிலும் கொடி கட்டிப் பறக்கின்றனர். இந்தியத் தணிக்கை கட்டுப்பாட்டு ஜெனரல் வினோத் ராய், மத்திய திட்டக் கமிஷன் செயலர் சுதா பிள்ளை ஆகியோரைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஒருங்கிணைப்பாளரும், காங்கிரஸ் தலைவருமான சோனியாவின் தனிப் பாதுகாப்புச் செயலர் பி.பி.மாதவன் நம்பூதிரியும் கேரளாவைச் சேர்ந்தவரே. இவரது மகன் திருமணத்தில் பங்கேற்பதற்காகத்தான், காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுல் சமீபத்தில் திருச்சூர் சென்றார். மத்திய அரசுப் பதவிகளில் கேரள மாநிலத்தவர் ஆதிக்கம் செலுத்துவது என் பது நீண்ட காலமாகவே உள்ளது. சுதந்திரம் அடைவதற்கு முன்பே இந்த நடைமுறை உண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் கண்டாவளை, பூநகரி பகுதிகளில் மக்கள் நேற்று சாட்சியம் அளித்த வேளையில்...



பட்ட துன்பமெல்லாம் கொட்டிவிட்டோம்; நீதி தருவார் இனி யாரோ?





கண்ணீரை மையாக்கி கடிதம் தருகிறோம்; கண்டுபிடித்துத் தருவீர்களா உறவுகளை?



யாரை நொந்து என்ன பயன்? எல்லாம் எம் விதிப்பயன்



உறவுகள் வரும் வரை - கிடைக்கும் வரை- இந்தத் உறுதிச் சீட்டுதான் இவர்களின் நம்பிக்கை



இந்த அழுகைக்கு அணைகட்ட யாருமில்லையா?





படங்கள்: ஔண்யன், டிலீப்

கைகள் வலிக்கும் வரை கடிதங்கள் எழுதுவோம்; மகஜர்கள் அனுப்புவோம். கண்ணீரில் குளிப்போம்; அப்போதேனும் உறவுகள் கிடைப்பார்களா?



கூடயிருந்த எம் உறவுகளைக் காணோம் இவர்களைக் கண்டால் சொல்வீரோ?

## பூநகரி, கண்டாவளை பகுதிகளில்

# காணாமற்போனோரின் உறவுகள் நேற்றும் திரண்டனர் 500 க்கும் அதிகமானோர் ஆணைக்குழு முன் சாட்சியம்

கண்டாவளை மற்றும் பூநகரி பிரதேச செயலங்களில் கற்றுக்கொண்டபாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக நேற்று 500 இற்கும் அதிகமான மக்கள் தமது சாட்சியங்களைப் பதிவு செய்ததுடன் - காணமற்போன தமது உறவுகளை மீட்டுத் தருமாறும் உருக்கத்துடன் வேண்டினர்.

இறுதிக்கட்டப்போர் நிகழ்ந்த வன்னிப் பகுதியில் கற்றுக்கொண்டபாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவினர் நேற்றுமுன்தினம் முதல் அமர்வுகளை நடத்தி வருகின்றனர். இதன் ஒருபகுதியாக கண்டாவளை, பூநகரி பகுதிகளில் உள்ள மக்களிடம் சாட்சியங்களை பதிவு செய்தனர். குறித்த பகுதிகளில் உள்ள பிரதேசங்களில் நடைபெற்ற இந்த அமர்வுகளில்சாட்சி யமளிக்க பெருமளவான மக்கள் திரண்டு வந்தனர். கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் 300 இற்கும் அதிகமா னோரும் பூநகரிப் பிரதேச செயலகத்தில் 200பேர் வரையிலும் தமது சாட்சியங் களை வழங்கியதாக ஆணைக்குழுவினர் உதயனுக்குத் தெரிவித்தனர்.

பெருமளவானோர் ஒரே சமயத்தில் திரண்டுவந்ததால் அவர்கள் அனைவரினதும் சாட்சியங்களை முழுமையாக பதிவு செய்வதற்கு நேரம் போதாது என்பதால் அநேகமானோரின் சாட்சியங்கள் எழுத்து வடிவிலேயே பெறப்பட்டன.

கண்டாவளை, பூநகரிப் பிரதேசங்களில் ஒரு சிலருக்கு மாத்திரமே வாய்மொழி மூலமானசாட்சியம் அளிக்க வாய்ப்பளிக்கப்பட்டது. ஏனையோர் தமது மனக்குறைகளை, போர் மூலம் கற்றுக்கொண்டபாடங்களை, தமது உறவுகளை கண்டுபிடிக்கக்கோரும் வேண்டு தல்களை கடிதங்கள் மூலம் சமர்ப்பித்தனர். அவர்களில் பெரும்பாலானோ ருக்கு கடிதங்கள் எழுதும் முறை தெரியாததால் பலரிடமும் சென்று தமக்குரிய கடிதங்களை எழுதித் தரும்படி அலைந்து திரிந்ததை அவதானிக்க முடிந்தது.

நேற்று சாட்சியமளித்தவர்களில் பெரும்பாலானோர் இறுதி யுத்தத்தின் போது காணாமற்போன தமது உறவுகளை கண்டுபிடித்து மீட்டுத்தருமாறு கண்ணீர் விட்டுக் கதறினர். காணாமற் போனவர் களின் புகைப்படங்கள், அடையாள அட் டைகள், ஏனைய ஆவணங்கள் என்பவற் றையெல்லாம் அவர்கள் ஏந்தியிருந் தது டன் தமது சாட்சியங்களுக்கு வலுச் சேர்க் கும் வகையில் அவற்றினையும் இணைத்தே வழங்கினர்.

நேற்றைய அமர்வில் காணாமற்போனோரின் உறவுகள் சமர்ப்பித்த கடிதங்களில் உள்ளடக்க விடயங்களில் போதாமை காணப்பட்டமையால் சகல விவரங்களையும் உள்ளடக்கிய வகையில் விரிவான கடிதம் ஒன்றைத் தயாரித்து ஆணைக்குழுவின் அலுவலகத்துக்கு விரைவில் அனுப்பி வைக்கும்படி தெரிவிக்கப்பட்டது. அத்துடன் கடிதங் களை பெற்றுக்கொண்டதற்கு அடையாள மாகவும், விரிவான கடிதங்களை அனுப்பு வதற்கு வசதியாகவும், மேலதிக தகவல் களைப்பெற்றுக்கொள்வதற்காகவும் ஆணைக்குழுவின் முகவரி அச்சிடப்பட்ட சிறுதுண்டு ஒன்றும் சாட்சியம் அளித்த பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

சாட்சியம் அளித்த பின்னரும் காணாமற்போன தமது உறவுகளைக் கண்டுபிடித்துத் தருமாறுகோரி, ஆணைக் குழுவின் அமர்வு நடைபெற்ற சூழலில் கூடியிருந்த கண்ணீர் பெருக அழுதபடி இருந்ததையும் காணமுடிந்தது.

உரிய வகையில் தகவல் கிடைக்கப்பெறாமையால் பொதுமக்கள் பலரும் சற்றுத் தாமதமாகவே இச் செய்தி அறிந்து அமர்வு நடைபெறும் இடங்களுக்கு அவசர அவசரமாக விரைந்து வந்தனர். ஆணைக்குழுவின் அமர்வில் அனைவருக்கும் சாட்சியம் அளிக்க முடியும் என்ற விடயமும் எந்தெந்த இடங்களில் எப்போது அமர்வு நடைபெறும் என்பதுவும் முன்கூட்டியே தெரிந்திருந்தால் இன்னும் ஏராளமான மக்கள் சாட்சியமளிக்க வந்திருப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, அண்மையில் கிளிநொச்சி சென்.தெரேசா பாடசாலையில் நடைபெற்ற விசாரணைக்குழுஒன்றின் முன்னாலும் இதேபோன்று உரிய ஆவணங்களுடனும் சென்று தமது உறவுகளை மீட்டுத்தருமாறு தாம்கோரிய போது அதற்கு அவர்கள் ' உங்கள் உறவுகளை எல்லா இடமும் தேடிவிட்டோம். எங்கும் அவர்கள் இல்லை. வேண்டுமானால் அவர்கள் உயிரோடு இல்லை என்பதை உறுதி செய்யும் மரணச் சான்றிதழைப் பெறவும், நஷ்டஈட்டைப் பெறவும் வழி செய்யலாம்' என்று தமக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் தாம் அதனை மறுத்து விட்டதாகவும் பொதுமக்கள் பலரும் கருத்துத்தெரிவித் தனர்.

**யார் துடைப்பார் இவர்களின் கண்ணீரை?**

விவரணக்கட்டுரையின் 2 ஆம் பகுதி தவிர்க்க முடியாத காரணங்களினால் இன்று பிரசுரமாகவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கான் நாடாளுமன்றத் தேர்தலை சீர்குலைக்க தீவிரவாதிகள் தாக்குதல்!

## 8 சதவீத வாக்குச்சாவடிகள் திறக்கப்படவில்லை

காபூல், செப். 20

ஆப்கானிஸ்தானில் நாடாளுமன்றத் தேர்தலை சீர்குலைக்க தலிபான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 10 பேர் பலியாயினர்.

ஆப்கானிஸ்தானில் கடந்த ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில், ஹமீத் கர்சாய் வெற்றி பெற்று ஜனாதிபதியானார். இந்நிலையில், ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றுக்கு சனிக்கிழமை தேர்தல் நடந்தது.

மொத்தமுள்ள 249 இடங்களுக்கு 2 ஆயிரத்து 500 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். தேர்தல் முடிவுகள் அக்ரோபர் 30ஆம் திகதிக்குள் அறிவிக்கப்படும். நாடு முழுவதும் 6 ஆயிரம் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன.

''தேர்தலை அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடத்த வேண்டும்'' என்று ஜனாதி பதி ஹமீத் கர்சாய் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

''தேர்தலில் யாரும் வாக்களிக்கக் கூடாது. மீறி வாக்களித்தால், கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும்'' என தலிபான் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

இதனால், நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டன. ஆப்கன் இராணு வத்தினர், அமெரிக்க கூட்டுப் படையினர் ஆகியோர் உட்பட மூன்று லட்சம் இராணுவத்தினர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன், சனிக்கிழமை காலை 7 மணிக்கு வாக்குப் பதிவு ஆரம்பமாகியது. வாக்குப்பதிவு தொடங்கியதுமே, தலிபான் தீவிரவாதிகள் வாக்குச் சாவடிகளைக் குறிவைத்து ரொக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர்.

இதில், ஒரு குண்டு அமெரிக்கத் தூதரகம் அருகிலும், மற்றொரு குண்டு 'நேட்டோ' படைகளின் தலைமையகம் அருகிலும் விழுந்து வெடித்தன. இந்த தாக்குதல்களில், ஓர் ஆப்கன் இராணுவ சிப்பாய் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இராணுவ சிப்பாய்களில் 10 பேர் உயிரிழந்தனர் என அதிகாரபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கன் கிழக்குப் பகுதியில் குனாரில் நடந்த தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டனர். 9 பேர் காயமடைந்தனர். மேலும், படகாசன், குண்டஸ், ஜலாலாபாத், தலைநகர் காபூல் ஆகிய பகுதிகளிலுள்ள வாக்குச் சாவடிகளைக் குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

பாகிஸ்தான் அருகே, ஆப்கன் எல்லைப்பகுதியில், தலிபான்கள் அதிகளவில் தாக்குதல்களை நடத்தினர் எனப் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால், அந்தப் பகுதிகளில், வாக்குப்பதிவு மந்தமாகவே இருந்தது. மேலும், தேர்தலில் போட்டியிட்ட ஒரு வேட்பாளர், தேர்தல் அதிகாரிகள், பிரசாரம் செய்தவர்கள் ஆகியோர் உட்பட 18 பேரை தலிபான் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

பயங்கரவாத தாக்குதல் சம்பவம் காரணமாகவும், அச்சத்தின் காரணமாகவும், மக்கள் வாக்களிக்க வராததாலும் எட்டு சதவீதம் வாக்குச் சாவடிகள் திறக்கப்படவில்லை என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

உலக அரங்கில்

### மும்பைத் தாக்குதல் வழக்கு:

# இந்தியாவுக்கு குழுவை அனுப்ப லக்வி சட்டத்தரணிகள் எதிர்ப்பு

இஸ்லாமாபாத், செப். 20

மும்பைத் தாக்குதல் வழக்குத் தொடர்பாக இந்தியாவுக்கு விசாரணைக் குழுவை அனுப்ப ஜகியுர் ரஹ்மான் லக்வியின் சட்டத்தரணிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

மும்பைத் தாக்குதல் வழக்கு பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது. லக்வி உள்ளிட்ட 7 பேர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு இஸ்லாமாபாத் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இந்தியாவில் கைதாகி மரண தண்டனை பெற்றுள்ள அஜ்மல்கசாப் உள்ளிட்டோரிடம் விசாரணை நடத்துவதற்கு என இந்தியாவுக்கு ஒரு விசாரணைக்குழுவை அனுப்ப திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், இதற்கு லக்வி தரப்பு சட்டத்தரணிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இந்தியாவிலுள்ள சாட்சிகளிடம் வழக்குத் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு விசாரணைக் குழுவை அனுப்புவதில் அதிக ஆபத்துள்ளது. பாதுகாப்புக் காரணங்களுக்காகக் குழுவை அனுப்பக்கூடாது என்று அவர்கள் நீதிபதி மாலிக் முகமது அக்ரம் ஆவானிடம் தெரிவித்துள்ளனர்.

மும்பைத் தாக்குதல் வழக்கு விசாரணை அடியாலா சிறையில் பலத்த பாதுகாப்புக் கிடையே நடைபெற்று வருகிறது. இந்தியாவிலுள்ள 24 சாட்சிகளிடம் விசாரணை நடத்தவேண்டும்; அதற்காக இந்தியாவுக்கு ஒரு விசாரணைக் குழுவை அனுப்ப வேண்டும் என்று அரசு தரப்பில் நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இரண்டாவதாக தாக்கல் செய்யப்பட்ட மனுவில் மும்பைத் தாக்குதல் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஜகியுர் லக்வி உள்ளிட்ட 7 பேர்களின் குரல் மாதிரிகைகளைப் பதிவு செய்வதற்கு நீதிமன்றம் அனுமதி அளிக்கவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இந்த 2 மனுக்களுக்கும் லக்வி சட்டத்தரணிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.



ஹொண்டூரஸின் முன்னாள் ஜனா திபதியாக இருந்த மேனுவல் ஷெலயா (வலது) மத்திய அமெரிக்கா நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்ற பின்னர் கௌதமாலாவில் பத்திரிகையா ளர்களை சந்தித்துப் பேசுகிறார். உடன் அவரது தாயாரும், மனைவியும் உள்ளனர்.

# பொலிஸாரின் வருகையை காட்டிக்கொடுத்தது கிளி!

நியூயோர்க், செப். 20

பொலிஸாரின் வரு கையை போதைப் பொருள் கடத்தல்கும் பலிடம் கிளியொன்று காட்டிக்கொடுத்தது. பொலிஸார் கிளியைப் பிடித்து விலங்குகள் நல மையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

அமெரிக்க கண் டத் திலுள்ள கொலம்பியாவில் போதை மருந்து கடத்தல் அதிக அளவில் உள்ளது. எனவே, அந்தக் கும்பலை ஒடுக்கும் நடவடிக்கையில் அரசு தீவிரமாக உள்ளது.

பாரன்குயில்லா நகரில் ஒரு பங்களாவில் போதை மருந்து கடத்தல் கும்பல் பதுங்கியுள்ளது என பொலிஸுக்குத் தகவல் கிடைத்தது. உடனே சுமார் 300 பொலிஸார் அந்த பங்களாவைச் சுற்றிவளைத்தனர்.

அப்போது, அங்கு திடீரென ஒரு கிளி பறந்து வந்தது. வந்த வேகத்தில் ஓடு, ஓடு உன்னை பிடிக்க பூனை வருகிறது எனக் கொஞ்சி, கொஞ்சி பேசியது. இதைக் கேட்ட போதை மருந்து கடத்தல் கும்பல் அங்கிருந்து தலைதெறிக்கத் தப்பி ஓடிவிட்டது.



இருந்தும் அவர்களில் சிலரை பொலிஸார் பிடித்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் தாங்கள் பொலிஸார் வருவதைக் காட்டிக்கொடுக்க கிளியை வளர்த்து வருகின்றனர் என்றும், அதற்கு 'லொரன்ஸ்ஷோ' எனப் பெயரிட்டுள்ளனர் என்றும் தெரிவித்தனர்.

எனவே, அந்தக் கிளியையும் பொலிஸார் பிடித்தனர். அந்தக் கிளி விலங்குகள் நல மையத்தில் ஒப்படைக்கப்பட்டது. இச்சம்பவம் அங்கு பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது.

# மழை, வெள்ள பாதிப்பு: பாகிஸ்தானுக்கு ரூ. 92 கோடி ஐக்கிய நாடுகள் சபையிடம் இந்தியா அன்பளிப்பு

நியூயோர்க், செப். 20

மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தானுக்கு ரூ.92 கோடி நிதியுதவியை இந்தியா வழங்கியுள்ளது. இதற்கான காசோலை இந்தியாவின் சார்பில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூனிடம் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியத் தூதர் ஹர்தீப் சிங் பூரி இந்தக் காசோலையை ஒப்படைத்தார்.

இதுகுறித்து பான் கி-மூன் கூறியவை வருமாறு:-

''பாகிஸ்தானில் மழை, வெள்ள பாதிப்பு நிவாரணத்துக்கு பல நாடுகள் உதவி புரிய முன்வந்துள்ளன. இதை நான் பாராட்டுகிறேன். அண்டை நாடான இந்தியா, பாகிஸ்தானுக்கு உதவியதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். பாகிஸ்தானில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இந்த நிதியுதவி மிகவும் உபயோகமானதாக இருக்கும்.'' இப்படி அவர் கூறினார்.

இந்தியாவின் உதவியைப் பாகிஸ்தான் ஏற்றுக்கொள்ள மறுக்கவே, ஐக்கிய நாடுகள் சபை மூலம் நிதியுதவி வழங்க முடிவு செய்யப்பட்டது.

நிகழ்ச்சிக்குப் பின்னர் ஹர்தீப் சிங் பூரி குறிப்பிடுகையில், ''பாகிஸ்தானுக்கு இந்தியா சார்பில் வழங்கப்பட்ட சிறிய நிதியுதவியாகும் இது. பாதிக்கப்பட்ட பாகிஸ்தான் மக்களுக்கு ஆதரவாக இந்திய மக்கள் எப்போதும் இருப்பர்.

பாகிஸ்தான் மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய இந்தியா காத்திருக்கிறது. இந்திய அரசின் உயர் அதிகாரிகள் எடுத்த முடிவின்படி இந்தத் தொகை இப்போது வழங்கப்பட்டுள்ளது'' என்றார்.

அப்போது ஐக்கிய நாடுகள் சபைக்கான பாகிஸ்தான் தூதர் அப்துல்லா ஹுசைன் ஹாரூன் உடனிருந்தார்.

# 2,000 வருடகாலத்துக் கிராமம் லண்டனில் கண்டுபிடிப்பு

லண்டன், செப். 20

பிரிட்டனின் தலைநகரான லண்டனிலுள்ள சுட்டான் என்னும் பகுதியில் 2 ஆயிரம் வருடகால பழைமையான கிராமமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அகழ்வாய்வின்போது, குழந்தைகளின் எலும்புக் கூடுகள் உட்பட வீட்டு மிருகங்களின் எச்சங்களும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

லண்டனிலுள்ள சுட்டான் என்ற பகுதியில் ஸ்டான்லி பார்க் ஸ்கூல் கட்டப்படுகிறது. இதற்கான அடித்தளம் அமைப்பதற்காக மண்ணைத் தோண்டியபோது குழந்தைகளினதும், சில விலங்குகளினதும் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குதிரை, பன்றி, ஆடு, நாய் உள்ளிட்ட வீட்டு விலங்குகளினதும், குழந்தைகளினதும் எலும்புக் கூடுகள் கிடைத்துள்ளன. இவை மண்ணில் புதைந்திருந்த விதங்களை ஆய்வுசெய்ததில் சுமார் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவையாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கண்டுபிடிப்பு என தொல்லியல் நிபுணர் டன்கன் ஹொக்கின்ஸ் தெரிவித்தார்.

# பொருளாதாரத்தில் துரித வளர்ச்சி கண்டுவரும் சீனாவில் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரிப்பு

பீஜிங், செப். 20

பொருளாதாரத்தில் வேகமாக வளர்ச்சி கண்டு, உலக நாடுகளை கதிகலங்கச் செய்துவரும் சீனாவிற்கு, நாளுக்கு நாள் அதிகரித்துவரும் பிச்சைக்காரர்களால், பெரும் தலைவலி ஏற்பட்டுள்ளது.

நாட்டின் வளர்ச்சிக்கு எதிராகவும், உலகளவில் கிடைத்துவரும் கௌரவத்திற்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையிலும் முக்கிய நகரங்களில் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

சமீப காலமாக பொருளாதார வளர்ச்சியில், சீனா அசுர வேகம் கண்டு வருகிறது. சீனாவின் பொருள்கள் உலகமெங்கும் வியாபித்துள்ளன. பொருளாதாரத்தில் ஆதிக்க சக்தியாக அது உருவாக பகீரத பிரயத்தனம் செய்து வருகிறது.

இந்நிலையில், இதற்கு சவால்விடும் வகையில், சீனாவில் முக்கிய நகரங்களில் பிச்சைகாரர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பீஜிங், ஷாங்காய் போன்ற பிரதான நகரங்கள் உட்பட முன்னணி நகரங்களில் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதைப்பார்த்து ஆட்சியாளர்கள் கதிகலங்கி போய் உள்ளனர். பொருளாதாரத்தில் நலிந்த நிலையில் உள்ளவர்கள்தான் பிச்சையெடுப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். இதில் பெரும்பாலானவர்களுக்கு வீடுகள் இல்லை.

உலகளவில் பொருளாதார வளர்ச்சியில் தற்போது இரண்டாமிடத்திலுள்ள சீனா, அதிகரித்துவரும் பிச்சைக்காரர்கள் எண்ணிக்கையால் எங்கே இந்தத் தகுதியை இழந்துவிடுவோமோ என கவலைக்கொள்ள ஆரம்பித்துள்ளது.

பீஜிங் நகரில் , இந்த மாதத்தில் மட்டும் பொலிஸார் நடத்திய சோதனையில் 300 பிச்சைக்காரர்கள் சிக்கியுள்ளனர். பிச்சை எடுப்பவர்களைப் பார்த்தால் சிலர் திடகாத்திரமாகத்தான் இருக்கின்றனர்.

இதில், நல்ல வருமானம் கிடைப்பதால், இதை மற்றொரு தொழிலாகப் பார்க்கின்றனர். வழக்கமாக அலுவலகத்திற்கோ, வேறு வேலைக்கோ சென்று விட்டு தங்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தில் பிச்சை எடுக்கப் போய்விடு கின்றனர்.

இதற்காக, கூடுதல் நேரமும் ஒதுக்கத் தயாராக இருக்கின்றனர். இதைத் தொழிலாகப் பார்ப்பவர்கள், நாள் ஒன்றுக்கு 150 ரூபாய் முதல் 700 ரூபாய் வரை சம்பாதிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மல்லாகத்தில் நேற்று தமிழரசுக் கட்சியின் கிளை அலுவலகம் திறந்துவைக்கப்பட்ட வைபவத்தில் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி உரையாற்றுவதையும் விழா மேடையில் கட்சிப்பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் மற்றைய படத்தில் நிகழ்வில் கலந்துகொண்ட ஆதரவாளர்களையும் காண்கிறீர்கள்.
(படங்கள் :- சுன்னாகம் செய்தியாளர்)

# தீர்வு கிடைக்காவிட்டால் மக்களை அணிதிரட்டி அகிம்சை வழியில் நாம் போராடத் தயார்

## மல்லாகத்தில் தமிழரசுக் கட்சியின் கிளைத் திறப்பு விழாவில் மாவை

சுன்னாகம், செப். 20

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால், நாம் மக்களை அணிதிரட்டி தந்தை செல்வா வழியில் அகிம்சை ரீதியில் போராடத் தயாராகவுள்ளோம்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

மல்லாகத்தில் நேற்றுத் தமிழரசுக் கட்சியின் கிளை அலுவலகத்தைத் திறந்து வைத்து தலைமையுரை ஆற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது :-

எமது கடந்தகால வரலாற்றில் நட்பைவிட பகையையே அதிகம் சம்பாதித்துள்ளோம். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுடனும் எமக்கு உதவக்கூடிய ஏனைய நாடுகளுடனும் நட்புறவுடன் செயற்பட்டு அவர்களிடமிருந்து எமது மக்களுக்கான தேவைகளை நிறைவேற்றக் கூடிய உதவிகளை வழங்குவதற்கு விரும்புகிறது. அதற்காகச் செயலாற்றுகிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்பு. தமது துன்பங்களுக்கு இடையிலும் எம்மைத் தேர்ந்தெடுத்த மக்களுடன் நாம் நெருக்கமாகச் செயற்படவுள்ளோம். அதற்கான ஒரு முயற்சியே இத்தகைய கிளை அலுவலகங்களைத் திறக்கும் பணி.

கிளிநொச்சி, ஆவரங்கால் வரிசையில் காங்கேசன்துறைத் தொகுதிக்கு இவ் வலுவலகம் திறக்கப்படுகிறது. இதுபோல நல்லூர், வட்டுக்கோட்டை, பருத்தித்துறை, கொழும்பு ஆகிய இடங்களிலும் அலுவலகங்கள் திறக்கப்படவுள்ளன.

புலம்பெயர்ந்த எமது மக்கள் எமது உரிமைகளை நிலைநாட்டக்கூடிய வகையில் அங்குள்ள அரசாங்கங்களுடன் தொடர்புகளைப் பேணி வருகின்றனர். அந்தந்த நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வருமாறு தமிழர் பிரதிநிதிகளான எம்மை அழைக்கின்றனர். ஆயினும் எம்மால் கலந்துகொள்ள முடியாதுள்ளது.

நாம் புலம்பெயர்ந்த மக்களையும், ஏனைய இயக்கங்களையும் இணைத்து ஒன்றுபட்ட அமைப்பாகச் செயற்பட விரும்புகிறோம். அதேவேளை, தமிழ் பேசும் மக்களான முஸ்லிம் மக்களுடனும் இணைந்து செயற்பட விரும்புகிறோம். இலங்கை அரசாங்கத்துடன் அரசியல் தீர்வு பற்றி, எமது மக்களின் எதிர்காலம் பற்றி, மக்களின் பிரச்சினைகள் பற்றி பேச்சுவார்த்தைகளை விரைவில் மேற்கொள்ளவும் உள்ளோம். எனினும் உரிய தீர்வு கிடைக்காதுவிடின் மக்களை அணி திரட்டி அகிம்சை வழியில் போராடுவோம் - என்றார்.

**சரவணபவன் பேச்சு**

இக்கூட்டத்தில் உரையாற்றிய த.தே.கூ. நாடாளுமன்ற உறுப்பினரான ஈ.சரவணபவன் குறிப்பிட்டதாவது :-

இந்த நாட்டில் தமிழர்களே தமிழர்களுக்குப் பயப்படும் நிலை ஒழிய வேண்டும். நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் எமது கட்சியின் கூட்டங்களில் மக்கள் பெரும் திரளாகக் கலந்துகொள்ளவில்லை. ஆயினும் எம்மைத் தேர்ந்தெடுத்து தமது கட்சி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே என்பதை நிரூபித்தனர். இன்றுள்ள முக்கியமான தேவை இளைஞர்களின் ஆதரவாகும். திறக்கப்படும் கிளை அலுவலகங்கள் உயிர்த்துடிப்புடன் செயலாற்றும் இளைஞர்களை ஈர்த்துக்கொள்ள வேண்டும். சமகால அரசியல் தொடர்பான தெளிவை அவர்களுக்கு ஊட்டுவதனூடாகத் துணிந்து செயலாற்றக்கூடியவர்களாக அவர்களை வளர்த்தெடுக்க வேண்டும் - என்றார்.

**சுமந்திரன் உரை**

த.தே.கூ.நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இங்கு உரையாற்றும்போது -

எமது அரசியல் போராட்ட வரலாற்றில் புது சகாப்தமாக, புது முன்னெடுப்பாக இன்றைய எமது செயற்பாடுகள் தொடர உள்ளன. மக்களது பிரதிநிதிகளாக நாங்கள் முன்னெடுக்கும் காரியங்கள் அவர்களது ஆமோதிப்புடன் செயற்படுத்தப்படும்.

18ஆவது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டபோது அதற்கு ஆதரவளிக்கும்படி எமக்கு பல வழிகளாலும் அழுத்தம் தரப்பட்டது. இத்திருத்தம் 13ஆவது திருத்தத்தில் ஏற்கனவேயுள்ள அரை குறையான பல விடயங்களைக்கூட இல்லாமல் செய்துள்ள ஒன்றாகும். அந்த வகையில் எமது மக்களுக்குத் துரோகமிழைக்கக்கூடிய எந்த விடயத்துக்கும் ஆதரவளிப்பதில்லை என்ற எமது கட்சியின் கொள்கைப்படி அதை எதிர்த்து வாக்களித்தோம் - என்றார்.

தமிழரசுக்கட்சி உறுப்பினர்களான சி.வி.கே.சிவஞானம், ஆவரங்கால் சின்னத்துரை, லண்டன் கிளை உறுப்பினர் சிவசுப்பிரமணியம் மற்றும் பா.கஜதீபன் ஆகியோரும் இக்கூட்டத்தில் உரையாற்றினர். (ஒ-38)

### 18ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த

# திஸ்ஸ விதாரண, பத்மசிறி ஆகியோர் மீது சமசமாஜக் கட்சிச் செயற்குழு கண்டனம்

கொழும்பு, செப்.20

18ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு கட்சிக் கட்டுப்பாட்டை மீறி ஆதரவாக வாக்களித்த அமைச்சர் திஸ்ஸ விதாரண, வை.ஜீ.பத்மசிறி ஆகியோரை லங்கா சமசமாஜக் கட்சியின் செயற்குழு வன்மையாகக் கண்டித்துள்ளது.

லங்கா சமசமாஜக் கட்சியின் செயற்குழுக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை கட்சித் தல்லமையகத்தில் நடைபெற்றது. கட்சியின் கட்டுப்பாட்டை மீறித் தாம் செயற்பட்டது குற்றம் என இந்த இருவரும் செயற்குழுக் கூட்டத்தில் ஏற்றுக்கொண்டனர்.

ஏற்கனவே இலங்கை கம்யூனிஸ் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய கட்சிகள் 18ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு எதிராக வாக்களிக்க தீர்மானித்திருந்தது குறிப் பிடத்தக்கது. (இ-01)

# பொஸ்பரஸ், கொத்துக்குண்டுகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனிதநேய இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் மன்னாரில் இருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை நோக்கியும் நகர்ந்தது. யுத்தம் இடைவிடாது நிகழ்ந்ததால் மக்களும் தொடர்ச்சியாக இடம் பெயர்ந்து கொண்டே இருந்தனர். மன்னாரில் இடம்பெயரத் தொடங்கிய மக்கள் முள்ளிவாய்க்கால் வரை நகர வேண்டியிருந்தது. அதன் போது மக்கள் சந்தித்த அவலங்கள் கொஞ் சநஞ்சமல்ல. இந்த அவலங்களுக்கு போரில் ஈடுபட்ட இரு தரப்புகளுமே காரணமாக இருந்திருந்தன.

**புலிகள் ஆயுதத் தளங்களை வைத்து இயக்க அரசே வழிசமைத்துக் கொடுத்தது**

பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் மக்களை ஓரிடத்தில் தஞ்சம் அடைய வைத்ததன் மூலம் புலிகள் தமது ஆளணியை இலகுவாகத் திரட்டவும், ஆயுதங்களை வைத்து இயக்குவதற்கு தளங்களை அமைக்கவும் அரசே வழிசமைத்துக் கொடுத்தது. அரசாங்கம் பாதுகாப்பு வலயங்களை பிரகடனப் படுத்தாவிட்டால் எமக்குரிய பாதுகாப்பான இடங்களை நாமே தேர்ந்தெடுத்து அழிவுகளை ஓரளவுக்கு குறைத் திருப்போம். பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்த போது உயிர் இழப்புகளையும் அழிவுகளையும் நாம் சந்திக்க நேர்ந்தே இருந்தது. மக்களை அரணாக வைத்து படையினர் மீது எறிகணைத் தாக்குதல்களை நடத்தி விட்டு புலிகள் நகர்ந்ததும் அவ்விடத்தில் படையினரின் சரமாரியான எறிகணை வீச்சும் விமானக் குண்டுத் தாக்குதலும் நிகழும். இதனால் தினமும் 200 பேர் வரையில் பொதுமக்களை இழக்க வேண்டியிருந்தது.

இதனால் பல தடவைகள் பாதுகாப்பு வலயத்தில் இருந்து வெளியேறி படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்ல முயற்சித்தோம். இதன் போது வெளியேற விடாது. பச்சை மட்டைகளால் புலிகள் எங்களைத் தாக்கினர். எம்மை எச்சரிப்பதற்காக வானத்தை நோக்கிச் சுடவும் செய்தனர். அதேவேளை தமது கட்டுப்பாட்டு பகுதி நோக்கி வரும் மக்கள் மீது படையினரும் துப்பாக்கி சூட்டை நடத்தினர். அதனால் தொடர்ந்தும் நாம் பாதுகாப்பு வலயத்துக்குள்ளேயே முடங்க வேண்டி ஏற்பட்டது. புதுமாத்தளன், சுதந்திரபுரம், அம்பலவன் பொக்கணை , வலைப்பாடு, வலைஞர் மடம் போன் பகுதிகளுக்குள்ளேலேயே தொடர்ந்தும் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஒருமுறை பாதுகாப்பு வலயத்துக்குள் படையினர் நடத்திய எறிகணை வீச்சில் 17 பெண்களும் 6 குழந்தைகளும் அவ்விடத்திலேயே உயிர் இழந்தனர்.

**கப்பலில் வரும் பொருள்கள் புலிகள் கைவசம்**

சத்துள்ள உணவுப் பொருள்கள் எதுவும் இல்லை. சுத்தமான குடிதண்ணீர் இல்லை. கப்பலில் பொருள்கள் வரும். ஆனால் அவை முழுதும் புலிகளின் கைகளுக்கே சென்று விடும். எனினும் தமது கையிருப்பில் இருந்த உணவுப் பொருள்களை நிவாரணமாக மக்களுக்குப் புலிகள் பகிர்ந்து வழங்கினர்.

தேங்காய் முதலான பொருள்களுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவியதால் ஒரு சிலர்அயலில் உள்ள பகுதிகளுக்குச் சென்று தேங்காய் பிடுங்கி வருவார்கள். அவ்வாறு செல்பவர்கள் படையினரின் ஆழஊடுருவும் படையணியால் கொல்லப் பட்டார்கள்.

**தறப்பாள் கூடாரத்தைச்சுற்றி இறந்தவர்களின் சடலங்கள் கிடந்தன**

ஒருமுறை நாங்கள் தறப்பாளால் கட்டியிருந்த கூடாரத்தைச் சுற்றி விடியற்காலையில் சிறுகுழிகளில் உயிர் இழந்தவர்களின் சடலங்கள் புதைந்து கிடந்தன. அவர்கள் புலிகளின் தாக்குதலிலோ அல்லது படையினரின் எறிகணை வீச்சிலோ தான் கொல்லப்பட்டிருக்க வேண்டும். அங்கு பரவலாகக் காணப்பட்ட குழிகள் படையினரின் எறிகணை வீச்சிலேயே அவர்கள் பலியாகி இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தின.

பாதுகாப்பு வலயங்களில் தாக்குதலில் ஈடுபடும் விமானங்கள் மீது புலிகளும் எதிர்த்தாக்குதல் நடத்தனர். இதற்குப் பதிலடியாகப் புலிகள் மீது தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகளையும் (கிளஸ்டர் குண்டுகள்), பொஸ்பரஸ் குண்டுகளையும் படையினர் வீசினர். இதன்மூலம் பொது மக்களுக்கும் பேரழிவு ஏற்பட்டது. ஏறக்குறைய தினமும் 400 தொடக்கம் 600 பேர் வரை பலியாகவும் ஆயிரம் பேர் வரை காயமடையும் அளவுக்கு நிலைமை மோசமாகிப் போனது. அதன் பின்னர் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து சேர்ந்தோம்.

**வீடுகளில் எல்லாப்பொருள்களும் சூறை**

இங்கேயும் நீண்ட காலம் நலன்புரி நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டும் தற்போது தான் மீளக்குடியேற்றப்பட்டுள்ளோம். ஆனாலும் எங்கள் வீடுகளில் உள்ள எல்லாப் பொருள்களுமே சூறையாடப்பட்டு விட்டன. நாங்கள் வந்த போது இருந்த பல பொருள்கள் கூட அடுத்தநாள் சென்று பார்க்கும் போது மாயமாகிவிட்டன. மக்களின் வீடுகளில் இருந்த ஓடுகள் எல்லாம் இப்போது படையினரின் காவலரண்களில் இருக் கின்றன. நடந்த கொடுமைகள் தொலைந்து இனியாவது மக்களுக்கு நன்மையே நடக்க வேண்டும். இதற்கு முன்னர் அமைக்கப் பட்ட ஆணைக்குழுக்கள் எதுவுமே ஆக்கபூர்வமான நிலையை ஏற்படுத்த வில்லை. அவ்வாறில்லாமல் இந்த ஆணைக் குழு மூலமாவது மக்களுக்கு விடிவு கிடைக்கும் என நம்புகிறோம்- என்றார் அவர்.

இதன் போது மேலும் சிலரும் வாய்மொழிமூல சாட்சியங்களை பதிவு செய்தனர். காணாமற்போனோரின் உறவி னர்கள் பலரும் கடிதங்களையும் ஆணைக் குழுவினரிடம் சமர்ப்பித்திருந்தனர். (அ-எ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் தலைமைப் பதவியிலிருந்து விலகும்வரை தொடர் சத்தியாக்கிரகம்

## ஐ.தே.க. அதிருப்திக் குழுவினர் ஏற்பாடு

கொழும்பு, செப். 20

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமைப் பொறுப்பிலிருந்து விலகவேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி தொடர் சத்தியாக்கிரகப் போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டிருப்பதாக தயாசிறி ஜயசேகர எம்.பி.தெரிவித்தார்.

ஐ.தே.கட்சி தொடர்ந்து 16 தேர்தல்களில் படுதோல்வியடைந்ததை அடுத்து கட்சியை மறுசீரமைக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. கட்சித் தலைமை இதற்காக கட்சியின் மூத்த உறப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் குழுவொன்றை நியமித்தது.

இக்குழுவின் அறிக்கை கடந்த ஜூலை மாதம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டது.

மறுசீரமைப்புக் குழுவின் சிபார்சுகள் கட்சி யாப்பில் திருத்தங்களுடன் சேர்க்கப்பட்டு கட்சியின் தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்படும் என்றும் பின்னர் புதிய யாப்பின்படி கட்சியின் பிரதான பதவி களுக்குத் தேர்தல் நடத்தப்படும் என்றும் கூறப்பட்டது. ஆரம்பத்தில் கட்சியின் தேசிய மாநாடு ஓகஸ்ட் மாதம் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டது. எனினும், பின்னர் அது செப்ரெம்பர் மாதம் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டது.

ஐ.தே.கட்சியின் அதிருப்திக் குழு இது குறித்து எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க திகதி குறிப்பிடாமல் டிசம்பர் மாதம் தேசிய மாநாடு நடைபெறுமென அறிவித்தார்.

பொறுமையிழந்த அதிருப்திக் குழுவினர் 25 பேர் தாம் நாடாளுமன்றத் தில் சுயேச்சைக் குழுவாக இயங்கப் போவ தாக அறிவித்தனர்.

இந்த நிலையில் கட்சியின் செயற்குழு கடந்த சனிக்கிழமை கூடியது. இதில் காரசாரமான வார்த்தைப் பிரயோகங்கள் இடம்பெற்றன எனக் கூறப்படுகின்றது.

இதையடுத்து கட்சித் தலைமை பத்து நாள் காலக்கெடு கேட்டதாகவும் அதற்கு அதிருப்திக் குழு இணக்கம் தெரிவிக்காமல் போர்க்கொடி தூக்கி இருப்பதாகவும் தெரியவருகிறது.

அதிருப்திக் குழுவின் முதற் கட்ட சத்தி யாக்கிரகப் போராட்டம் ஐ.தே. கட்சியின் தலைமையகமான சிறிகொத்தா முன்றலில் நடைபெறும் என்று தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவித்துள்ளார்.

# வன்னிப்பிரதேச ஆசிரியர்களுக்கான போக்குவரத்துச் சேவை ஒழுங்குகள்

யாழ்ப்பாணம், செப். 20

யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னி மாவட்டப் பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுவரும் இலவச பஸ் சேவை அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் வடபிராந்திய போக்குவரத்துச் சபையிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்தச் சேவை தற்போது ஆளுநரின் பணிப்பின்பேரில் வடமாகாண சபையினால் இலவச பஸ் சேவையாக நடைபெற்றுவருகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து காலை 6.30 மணிக்குப் புறப்படும் பஸ் கிளிநொச்சி, மாங்குளம் ஊடாகத் துணுக்காயை சென்றடையும். அத்துடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கேட்கப்பட்டதற்கமைய வடமாகாண ஆளுநரின் அனுமதியுடன் வடமாகாண சபையினால் முறிகண்டியிலிருந்து அக்கராயன் பிரதேசத்துக்கான இணைப்புச் சேவையை மேற்கொள்வதற்கான ஒழுங் குகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஆசிரியர்களுக்கான பருவச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையிடம் விண்ணப்பிக்குமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

(ஒ-15)

## கராடியனாறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரசைகளும் பலியாகினர். இதனையடுத்து சம்பவம் தொடர்பாக சீன அரசு இலங்கை அரசிடம் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தமையும் -

ஐக்கிய நாடுகள் அமைப்பின் 65 ஆவது உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய மற்றும் தற்காலிகமாக பாதுகாப்பு அமைச்சுப் பதவி ஏற்றுள்ள பிரத மர் டி.எம்.ஜயரத்ன ஆகியோருக்கு உத்தரவிட்டிருந்தமையும் தெரிந்ததே. (ஒ-சி)

# இலங்கை அகதிகள் விடயத்தில் கனடாவின் போக்கு இறுக்கம்

கொழும்பு, செப். 20

இலங்கை அதிகள் தொடர்பிலான சட்டத் திட்டங்களை கனடா அரசு கடுமைப் படுத்த உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கனேடிய வாரப் பத்திரிகை ஒன்றில் பிரசுரிக்கப்பட்டுள்ள தகவல் அடிப்படையில், ஆஸ்திரேலிய குடிவரவுக் கொள்கையை கனடாவும் பன்பற்றுவதற்கான சாத்தியம் இருப்பதாகத் தெரிகிறது.

இலங்கை உள்ளிட்ட நாடுகளின் அகதிகள் தொடர்பில், ஆஸ்திரேலிய கடுமையான கொள்கையை கடைபிடித்து வருகிறது. இதன் விளைவாகவே சன் சீ கப்பல், தமது ஆஸ்திரேலிய பயணத்தை ரத்துசெய்து, கனடாவுக்கு சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-11)

## ஆணைக்குழுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலமாக பலவித வசதியீனங்களோடு வாடுவதையும் அவர்களின் உறவினர்கள் எமது கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர்.

நாட்டில் யுத்தம் முடிந்து இயல்பு நிலை தோன்றியுள்ள இவ்வேளையில் யுத்தத்துக்கு முகம்கொடுத்து பேரழிவுகளைச் சந்தித்த மக்கள் காணாமற்போன உறவுகளை நினைத்து இன்னமும் கவலை யுடனேயே வாழ்ந்து வருகின்றார்கள்.

இதனை இங்கு திரண்டு வந்து வாய்மொழி மூலமாகவும், கடிதங்கள் மகஜர்கள் மூலமாகவும் அளித்த சாட்சியங்கள் உறுதி செய்கின்றன. இந்த நிலையை மாற்றுவதற்காக காணமற்போனோர் தொடர்பான பிரச்சினைகளை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வருவதுடன், நாட்டில் உள்ள தடுப்பு முகாம்களுக்கு நேரடியாகச் சென்று அங்குள்ளவர்களின்விடுதலையைத் துரிதப் படுத்தும் நடவடிக் கையில் ஆணைக்குழுவின் தலை வர் சீ.ஆர்.டி. சில்வா ஈடுபட உள்ளார். - என்று தெரிவித்தனர். (அ-எ-15)

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பு மறுத்துவிட்டது. இதுதொடர்பாகத் தனக்கு அறிக்கை எதுவும் கிடைக்கவில்லை எனத்தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜெயக்கொடி, அவ்வாறு நடந்திருப்பதற்கான சாத்தியங்கள் மிகக்குறைவு என்று "உதயனுக்குத்" தெரிவித்தார்.

புனர்வாழ்வு என்ற பெயரில் தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் சீன நிறுவனம் ஒன்றால் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்த நிலையில் வெடிப்புச் சம்பவத்தில் அவர்களும் சிக்கிக்கொண்டனர் என இணையச் செய்தி கூறுகிறது.

அவ்வாறு உயிரிழந்த முன்னாள் போராளிகள் விவரம் வெளிவிரவில்லை என்றும் அந்த இணையம் கூறியது.

இதேவேளை, இந்தவெடிப்புச் சம்பவத்தின்போது சுமார் 60 பேர்வரையில் கொல்லப்பட்டதாகச் சம்பவம் நடைபெற்ற ஒருசில மணி நேரத்தில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஊடகங்களுக்குத் தகவல் வெளியிட்டிருந்தார்.

எனினும் அதன்பின்னர் அரசாங்கத் தரப்பில் அறிவிக்கப்பட்ட உயிரிழந்தோர் எண்ணிக்கை மிகக்குறைவாகும்.

அதாவது கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 26 என நேற்றுமுன்தினம் பொலிஸார் தெரிவித்திருந்தனர். பின்னர் நேற்று பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலசூரிய விடுத்திருந்த அறிக்கையில் 19 பேரே கொல்லப்பட்டனர் எனத்தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த மாறுபட்ட எண்ணிக்கைகள் அரசு மீது சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர் - என்று இணையத்தளம் சுட்டிக் காட்டி உள்ளது. (அ-16)


ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2011
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணத்தில்
அன்பொளி கல்வியகம்
யாழ். இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

சாவகச்சேரியில்
அன்பொளி கல்வி நிலையம்
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

அனுமதிகளை 20.09.2010 திங்கட்கிழமையிலிருந்து 26.09.2010 ஞாயிற்றுக்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு :- பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.
இயக்குநர்கள்


## மரண அறிவித்தல்

### Dr.சதாசிவம் பசுபதிராசா



வட்டுக் கிழக்கு, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.சதாசிவம் பசுபதிராசா 18.09.2010 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஓவசியர் சதாசிவம்- தனலட்சுமி அம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், புலோலி பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு.திருமதி இளையதம்பி அவர்களின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக்கணவரும், லஷ்மி (Lucky) , Dr. சிவசோதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. புவனேந்திரன், Dr.சிவானி ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்மலிங்கம், கமலாம்பிகை, காலஞ்சென்றவர்களான சிவசோதிராசா, கனகமணி, மற்றும் ஜெயலஷ்மி, செல்வராசா, வசந்தா ஆகியோரின் அன்புச்சகோதரரும் குணரத்தினம், கணேசாநந்தன், கமலா, காலஞ்சென்ற இராசரத்தினம், மற்றும் தனபாலசிங்கம், ரஞ்சிதமணி காலஞ்சென்ற திருமதி துரைசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.தர்மலிங்கம்
(சகோதரன்)

"கமலபதி"
மாதர்சங்க வீதி,சித்தங்கேணி. (103539)


PC REPAIRS
HOT LINE
0777425974
PC stuck
LCD Problems
Virus Problems
Display problems
Memory errors
Windows problems
Power supply/Pack Problems
Capture Card problems
Internet & Email Setup
Net-2-Phone configuration
Printers, Scanners & other
Software/Drivers installation
MICRO PC SYSTEMS
யாழ்ப்பாணம்: 218, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 0217913020
நெல்லியடி: கொடிகாமம் வீதி, நெல்லியடி. 0773039536

கணனிக்கற்கை நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு 01 24.09.2010
பிரிவு 02 25.09.2010
இப்பிரிவுகளுக்கு மட்டும் 50% கட்டடணச் சலுகை வழங்கப்படுகின்றது
மேலதிக விபரங்களுக்கு:
இயக்குனர்
IIS , #100, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

WALK - IN INTERVIEW
Post of Instructor in Computing
Suitable persons are requested to present themselves for an interview on Monday the 20th September 2010 from 2.00p.m.
Salary: Negotiable
Venue: IIS City Campus,
200,Sivan Pannai Road,
Jaffna
For further information Contact :
Director
Institute of Informatics Studies
100, Clock Tower Road
Jaffna
T.P.: 021 222 2831

CIMA-UK UNTIL NOW 100% PASS
MCS
High qualified, well experienced lecture panel with TOP CIMA holders
Mega Schol.
12000/= 2000/=
Supported By UNDP/JRRP
SMS your name & course to 0772 395 895
324,Palaly Road,Parameswara Junction
Free : ICDL, Toefl-English


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org